# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை: 20/= பக்கங்கள்: 28 | சுடர் 31 | கதிர் 249 | வள்ளுவர் ஆண்டு 2047 | ஆடி 17, திங்கட்கிழமை 01.08.2016


### பாதயாத்திரைக்கு எதிராகப் போராட்டம்

கொழும்பு, ஓக. 1
மகிந்த அணியின் பாத யாத்திரைக்கு எதிர்ப்புத் தெரிவித்து அநுராதபுரம்-கெக்கிராவ நகரில் நேற்று ஆர்ப்பாட்டம் நடத்தப் பட்டது.
முற்பகல் 9 மணிமுதல் 11.30 மணிவரை நடை பெற்ற ஆர்ப் பக். 24

## போர்க்குற்றத்துக்கு மைத்திரியும் பொறுப்புக்கூறியே ஆகவேண்டும்

### போரினால் பாதிக்கப்பட்டவர் வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஓக. 1
போரின் இறுதிக் கட்டத்தில் பாது காப்பு அமைச்சராக இருந்த, தற்போதைய ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேனவும், காணாமற் போனோர் உள்ளிட்ட பல்வேறு விடயங்களுக்குப் பொறுப்புக் கூற வேண்டும். போர்க்குற்ற விசாரணையின் போது அவரையும் விசாரிக்கவேண்டும்.
இவ்வாறு மக்களிடம் கருத்தறியும் செயலணியிடம் வலியுறுத்தினார் வடமராட்சியைச் சேர்ந்த ஒருவர்.
போர்க்குற்ற விசாரணைப் பொறிமுறை எவ்வாறு அமைய வேண்டும் மற்றும் காணாமற்போனோர் அலுவலகம் அமைப்பது என்பன தொடர்பில் பொதுமக்களிடம் கருத்தறியும் யாழ்ப்பாண வலயச் செயலணியின் அமர்வு நேற்று கரவெட்டிப்பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.
இதில் கருத்தைப் பதிவு பக். 23

## ஒற்றையாட்சி அரசமைப்பை ஒழித்தாலே நல்லிணக்கம் வரும்

### வடமராட்சி மக்கள் செயலணியிடம் திட்டவட்டம்

யாழ்ப்பாணம், ஓக. 1
எல்லாவற்றையும் தீர்மானிப்பவர்களாக பெரும்பான்மை இனத்தவர்கள் இருக்கின்றனர். அதற்கேற்றாற்போலவே எமது அரசமைப்பும் அமைந்திருக்கின்றது. நிலைமை இப்படியாக இருக்கும் போது, நல்லிணக்கம் எங்கேயிருந்து எப்படி ஏற்படும். ஒற்றையாட்சி அரசமைப்பை இல்லாமல் செய்யும்வரை நல்லிணக்கம் ஏற்படமாட்டாது.
இவ்வாறு மக்கள் கருத்தறியும் செயலணியிடம் கேள்வி எழுப்பினர் வடமராட்சியைச் சேர்ந்தவர்கள்.
கரவெட்டிப் பிரதேச செயலகத்தில் நேற்று இடம்பெற்ற அமர்வில் கலந்து கொண்ட வடமராட்சியைச் சேர்ந்த என்.அரவிந்தன் தெரிவித்ததாவது:
இலங்கை அரசின் பக். 24

### குற்றமிழைத்தவர்கள் விசாரிக்க முடியாது

# சர்வதேச விசாரணையே நடத்தப்பட வேண்டும்

### செயலணியின் கரவெட்டி அமர்வில் வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஓகஸ்ட் 1
கொலை காரர்கள் எப்படித் தாம் செய்த கொலைகளை விசாரிக்க முடியும். நடைமுறை நீதிக்கு இது முரணானது. எனவே நடந்து முடிந்த போரில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் தொடர்பில் பன்னாட்டு நீதி விசாரணைப் பொறிமுறையே அமைக்கப்படவேண்டும்.
இவ்வாறு செயலணியின் கரவெட்டி அமர்வில் கருத்துப் பதிவு செய்தவர்கள் வலியுறுத்தினர்.
போர்க்குற்ற விசாரணைப் பொறிமுறையை எவ்வாறு முன்னெடுப்பது, காணாமற்போனோர் அலுவலகத்தை அமைப்பது தொடர்பாக மக்களின் கருத்துக்களைக் கேட்டறியும் யாழ்ப்பாண வலயச் செயலணியின் அமர்வு நேற்று பக். 23



முச்சந்தி முரளி



நல்லூரானையும் உரிமை கேட்பார்கள் பாருங்கோ...

### மைத்திரி - ரணில் - சந்திரிகா மந்திர ஆலோசனை

கொழும்பு, ஓக. 1
ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் பக். 24

## காணாமற்போனோரை வைத்து அரசியல் நடத்துகிறார் மகிந்த

### அமைச்சர் மங்கள சாடல்

கொழும்பு, ஓக. 1
"துப்பாக்கி வேட்டுக்களின் சத்தம் இன்று மௌனித்துள்ள நிலையில், பிள்ளைகளைத் தொலைத்த தாய்மார்கள் தங்களது பிள்ளைகள் உயிருடன் இருப்பார்கள் என்ற எதிர்பார்ப்பில் அவர்களைத் தேடி வருகின்றனர். அவர்கள் வடக்கைச் சேர்ந்தவர்களாயிருக்கலாம், தெற்கைச் சேர்ந்தவர்களாயிருக்கலாம். ஆனால் அவர்களது துயரங்கள் ஒன்றுதான் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்".
இவ்வாறு அயலுறவுத்துறை அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்தார். காணாமற்போனோர் விடயத்தைத் திசைதிருப்பி, அரசியல் லாபம் தேடுவதற்கு முன்னாள் ஜனாதிபதி மகிந்த முயற்சிப்பதாகவும் மங்கள குற்றம் சுமத்தினார். பக். 23

## பிரதேசங்களுக்குப் பொறுப்பாகவிருந்த படைஅதிகாரிகளை விசாரிக்கவேண்டும்

### காணாமற்போனோருக்குப் பொறுப்புக்கூறவேண்டியது அவர்கள்தான் என சட்டத்தரணி டொமினிக் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 1
சுற்றிவளைப்புக்கள் - தேடுதல்களின்போது கைது செய்யப்பட்டு காணாமற்போனவர்கள் தொடர்பில், அந்தப்பகுதிகளுக்குப்பொறுப்பாக இருந்த கட்டளையிடும் அதிகாரிகள் விசாரணைக்கு உட்படுத்தப்படவேண்டும். அவர்களுக்குத் தண்டனைகள் பெற்றுக் கொடுக்கப்படவேண்டும். இதனூடாகவே நல்லிணக்கம் உருவாகும்.
இவ்வாறு தெரிவித்தார் இலங்கை மனித உரிமைகள் அபிவிருத்தி நிலையத்தின் சட்டஆலோசகர் டொமினிக்.
நல்லிணக்கப் பொறிமுறை எவ்வாறு அமைய வேண்டும் மற்றும் காணாமற்போனோர் அலுவலகத்தை அமைப்பது என்பன தொடர்பிலான மக்கள் கருத்தறியும் அமர்வு கரவெட்டிப் பிரதேச செயலகத்தில் நேற்று இடம்பெற்றது.
இதன்போது கருத்துக்களைப் பதிவு செய்த சட்டஆலோசகர் டொமினிக் தெரிவித்ததாவது:
காணாமற்போதல் சம்பவங்கள் இடம்பெற்ற காலப் பகுதியில், எங்கு சுற்றி வளைப்புக்கள் - தேடுதல்கள் இடம்பெற்றதோ, அந்தப் பகுதியில் கடமையில் இருந்த அனைத்துத் தரப்பினரையும் விசாரணைக்கு உட்படுத்தவேண்டும். அங்கு கட்டளை பிறப்பிக்கும் அதிகாரிகளாகச் செயற்பட்டவர்களையும் விசாரணை செய்ய வேண்டும்.
ஒருவர் கைது செய்யப்படுவதாக இருந்தால், அவர்களது பக். 24

### கற்சிலைமடு சிவன் கோயில் பகுதியை உரிமை கோருகிறது பௌத்தம்

#### அறிவிப்புப் பலகையும் நாட்டியது இராணுவம்

முல்லைத்தீவு, ஓக.1
ஒட்டுசுட்டான் – கற்சிலைமடு சிவன் ஆலயத்திலும், அதை அண்டிய காணிகளிலும் 3 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் பௌத்தர்கள் வாழ்ந்தார்கள். கற்சிலைமடுவில் பௌத்த மத வழிபாடுகள் நடத்தப்பட்டன என்று இராணுவத்தால் அறிவித்தல் பலகை நடப்பட்டுள்ளது.
ஒட்டுசுட்டானில் உள்ள தனியார் காணிகளையும் மயானக் காணியையும் ஆக்கிரமித்துள்ள இராணுவத்தினர், பெரும் கட்டடங்களையும் பிரமாண்டமான புத்தர் சிலையையும் அமைக்கின்றனர். மன்னாகண்டல் பகுதியில் விவசாயிகளுடைய உரக்களஞ்சியசாலைக் காணியையும் ஆக்கிரமித்து, அதை விரிவாக்கி அங்கும் புத்தர் சிலையை வைத்துள்ளனர். தற்போது சிவன் ஆலயத்தில் பெயர்ப் பலகை நட்டுள்ளனர். இதைத் தடுக்க வேண்டும். எதிர் காலத்தில் ஒட்டுசுட்டான் பிரதேசத்தை சிங்கள மயமாக்கி விடுவார்கள் என அச்சம் வெளியிடுகின்றனர் ஒட்டுசுட்டான் பிரதேச மக்கள். (விரிவு பக்கம் 07)

## வெள்ளைவான் ஆவணங்கள் திருமலையில் திடீரென மாயம்

### கடற்படைத் தளத்தில் களவாம்

கொழும்பு, ஓக. 1
வெள்ளை வான் கடத்தல் சம்பவங்கள் குறித்த விசாரணைகளுடன் தொடர்புடைய முக்கிய ஆவணங்கள் திருகோணமலைக் கடற்படைத் தளத்தில் இருந்து திருடப்பட்டுள்ளன.
உயர் படைஅதிகாரிகளை மேற்கோள்காட்டி கொழும்பு ஆங்கில ஊடகமான 'சண்டே லீடர்' பத்திரிகை நேற்று இந்தத் தகவலை வெளியிட்டது.
மகிந்த ராஜபக்ச ஆட்சிக் காலத்தில் இடம்பெற்ற வெள்ளைவான் கடத்தல்கள் குறித்து சாட்சியமளித்திருந்த லெப்.கொமாண்டர் கே.சி.வெலகெதரவுடன் தொடர்புடைய ஆவணங்களே காணாமற்போயுள்ளன. திருகோணமலைக் கடற்படைத் தளத்தில் பாதுகாக்கப்பட்டு வந்த இந்த பக். 24

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கில் போலி வெளிநாட்டு முகவர் நிலையம் நடத்திய நால்வர் சிக்கினர்

## அச்சுவேலிப் பொலிஸார் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 1

வெளிநாட்டுக்கு ஆள்களை அனுப்புவதாகத் தெரிவித்து, வடபகுதியில் பல இளையோரிடம் பெருந்தொகைப் பணத்தைப் பெற்று மோசடி செய்த சந்தேகத்தில் 4 பேரைக் கைது செய்துள்ளதாக அச்சுவேலிப் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து பல கடவுச்சீட்டுக்களும், ஹையேஸ் வாகனமும் மீட்கப்பட்டதாகப் பொலிஸார் குறிப்பிட்டனர்.

புத்தூரைச் சேர்ந்த முதன்மைச் சந்தேக நபரும், வவுனியாவைச் சேர்ந்த மூவருமாக, நான்கு பேர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

வடபகுதியில் பல இளைஞர்கள், இளம்பெண்களை வெளிநாட்டுக்கு அனுப்புவதாகத் தெரிவித்துப் பெருந்தொகைப் பணத்தை இந்தக் குழுவினர் பெற்று மோசடி செய்துள்ளதாக முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றன. இந்தக் குழுவினரைக் கைது செய்வதற்குப் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

> “வடபகுதியில் பல இளைஞர்கள், இளம் பெண்களை வெளிநாட்டுக்கு அனுப்புவதாகத் தெரிவித்து பெருந்தொகைப் பணத்தை இந்தக் குழுவினர் பெற்று மோசடி செய்தனர். அவர்களிடமிருந்து பலரின் கடவுச் சீட்டுக்கள் பறிமுதல் செய்யப்பட்டன.”

அச்சுவேலி - பத்தமேனிப் பகுதியில் பெண் ஒருவரை வெளிநாட்டுக்கு அனுப்புவதற்கு முற்பணம் பெற்றுக் கொள்வதற்காக இந்தக் குழுவினர் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை வருகை தருவதாக இரகசியப் பொலிஸாருக்கு தகவல் கிடைக்கப் பெற்றது. உசாரடைந்த பொலிஸார், சிவில் உடையில் அந்தப் பகுதியில் நடமாடினர்.

இந்த மோசடிக் குழுவினர் ஹையேஸ் வாகனத்தில் பணம் பெற்றுக் கொள்வதற்காக வந்த போது, இரகசியப் பொலிஸார் அவர்களைக் கைது செய்தனர். விசாரணையின் போது முன்னுக்குப் பின் முரணான தகவல்களைத் தெரிவித்தனர். தொடர் விசாரணைகளின் அடிப்படையில், இந்தக் குழுவினர் போலி வெளிநாட்டு முகவர் நிலையத்தை நடத்தி வருவது கண்டறியப்பட்டது.

வடக்கில் உள்ள பல பொலிஸ் நிலையங்களில் இந்த நான்கு பேர் தொடர்பிலும் பல்வேறு குற்றச்சாட்டுக்களில் முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன.

கைது செய்யப்பட்ட நால்வரும் வழங்கிய தகவல்களின் அடிப்படையில், அவர்களிடமிருந்து பல கடவுச்சீட்டுக்கள் மீட்கப்பட்டன. கைது செய்யப்பட்ட நான்கு பேரிடமும் பணம் வழங்கி ஏமாந்த பலர் அச்சுவேலிப் பொலிஸ் நிலையத்துக்கு படையெடுத்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர். (வ-5-101-107)

# இராணுவப் புலனாய்வுப் பணிப்பாளர் சுரேஸ் சாலியைப் பதவி நீக்கவேண்டும்

## தளபதியிடம் படை அதிகாரிகள் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஓக. 1

இராணுவப் புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளர் பதவியில் இருந்து பிரிகேடியர் சுரேஸ் சாலியை நீக்கிவிட்டு, அந்தப் பதவியில் வேறொருவரை அமர்த்த வேண்டும்.

இவ்வாறு இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் கிரிசாந்த டி சில்வாவிடம் கோரிக்கைகள் விடுக்கப்பட்டுள்ளதாக, ஆங்கில ஊடகமான 'சண்டே லீடர்' நேற்றுச் செய்தி வெளியிட்டது.

சண்டே லீடர் ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்க படுகொலையில் பிரதான சூத்திரதாரியாகச் செயற்பட்டதாகக் குற்றம் சுமத்தப்பட்ட சார்ஜன்ட் மேஜர் பிறேம் ஆனந்த உடலகம, அடையாள அணிவகுப்பில் லசந்த விக்கிரமதுங்கவின் சாரதியால் அடையாளம் காட்டப்பட்டார். இதனையடுத்தே இந்தக் கோரிக்கைகள் விடுக்கப்பட்டிருக்கின்றன.

பிரிகேடியர் சுரேஸ் சாலியுடன், சார்ஜன்ட் மேஜர் பிறேம் ஆனந்த உடலகம மிக நெருக்கமாகப் பணியாற்றியிருந்தார்.

லசந்த படுகொலையுடன் தொடர்புடைய சார்ஜன்ட் மேஜர் பிறேம் ஆனந்த உடலகம மற்றும் லான்ஸ் கோப்ரல் கந்தேகெதர பியவன்ச ஆகியோரை, தமது தனிப்பட்ட அதிகாரிகளாக வைத்து இராணுவப் புலனாய்வுப் பிரிவுப் பணிப்பாளர் பாதுகாத்து வந்ததாக பரவலான விமர்சனங்கள் எழுந்துள்ளன.

பிரிகேடியர் சுரேஸ் சாலி, தற்காலிக கேணலாக நியமிக்கப்பட்ட குறுகிய காலத்துக்குள், 2013ஆம் ஆண்டு, பாதுகாப்புச் செயலராக இருந்த கோத்தபாய ராஜபக்சவினால், பிரிகேடியராகப் பதவி உயர்த்தப்பட்டார்.

2009ஆம் ஆண்டு மேஜர் தரத்தில் இருந்த சுரேஸ் சாலி, முன்னைய ஆட்சியாளர்களுக்கு நெருக்கமானவராக இருந்தன் மூலம், ஆட்சியின் முடிவில் பிரிகேடியராகப் பதவி உயர்வு பெற்றுக் கொண்டமை, மூத்த இராணுவ அதிகாரிகளைப் பின்தள்ளிக் கொண்டு, கட்டளைச் சங்கிலியில் முன்னிலை பெற்றார்.

இராணுவத்தின் நம்பகத்தன்மையை மீண்டும் உறுதிப்படுத்துவதற்கு, இராணுவப் புலனாய்வுப் பிரிவுப் பணிப்பாளராக, புலனாய்வுப் பிரிவுக்கு வெளியில் உள்ள ஓர் அதிகாரியை நியமிக்க வேண்டும் என்றும் இராணுவத் தளபதியிடம் கோரப்பட்டுள்ளதாக 'சண்டே லீடர்' பத்திரிகைச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-5)

# நீதிமன்றில் சரணடைந்த சந்தேகநபருக்கு மறியல்

## வைத்தியசாலை ஊழியர் தாக்கப்பட்ட சம்பவத்தில்

யாழ்ப்பாணம், ஓக. 1

அச்சுவேலிப் பிரதேச வைத்தியசாலைச் சிற்றூழியர் ஒருவரைத் தாக்கிய பிரதான சந்தேக நபர் பொலிஸாரால் தேடப்பட்டு வந்த நிலையில், மல்லாகம் நீதிமன்றத்தில் கடந்த வெள்ளிக் கிழமை சட்டத்தரணி ஊடாகச் சரணடைந்தார். அவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

அச்சுவேலிப் பிரதேச வைத்தியசாலை ஊழியர் ஒருவர் கடந்த 23ஆம் திகதி சனிக்கிழமை அதிகாலை இளைஞர் குழுவினால் தாக்கப்பட்டார். அவர் தலையில் காயமடைந்தார். இதனால் தாக்குதல் நடத்தியவர்களைக் கைது செய்யுமாறு வலியுறுத்தி வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவு ஊழியர்கள் பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தை நடத்தியிருந்தனர்.

தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகத்தில் மூவர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டனர். முதன்மைச் சந்தேகநபர் தலைமறைவாகியிருந்தார். அவரைப் பொலிஸார் தேடி வந்தனர். இரகசியப் பொலிஸாரும் இவரைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகளை முடுக்கியிருந்தனர்.

கடந்த வெள்ளிக்கிழமை, மல்லாகம் நீதிவான் மன்றத்தில் சட்டத்தரணி ஊடாக முதன்மைச் சந்தேக நபர் சரணடைந்தார். இவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். வழக்கு விசாரணையின் போது அடையாள அணிவகுப்புக்கு உட்படுத்த நடவடிக்கை எடுக்குமாறும் பணித்தார்.

(வ-5-101-107)

# மினிபஸ் மோதியதால் மின்கம்பம் முறிந்தது

## பருத்தித்துறைப் பகுதியில் மின் தடைப்பட்டது

பருத்தித்துறை - கிராமக்கோடு பகுதியில் மின்கம்பத்துடன் மினிபஸ் நேற்று மாலை மோதியது. மின்கம்பம் முறிந்து விழுந்தது. மினிபஸ் சம்பவ இடத்திலிருந்து ஓடித்தப்பியது. மின்கம்பம் முறிந்தமையினால் நேற்று மாலை பருத்தித்துறைப் பகுதியில் இரண்டரை மணி நேரம் மின் தடை ஏற்பட்டது.

பருத்தித்துறை பிரதான வீதியில், பருத்தித்துறை - கிராமக்கோடு பகுதியில் உள்ள எரிபொருள் நிலையத்துக்கு அருகிலிருந்த மின்கம்பமே முறிந்தது.

“எதிரே வந்த வாகனத்துக்கு இடம்கொடுப்பதற்காக மினிபஸ் விலத்தியபோது, வேகக் கட்டுப்பாட்டை இழந்து மின்கம்பத்துடன் மோதியது. மினிபஸ்ஸில் பயணிகள் எவருமில்லை. மின்கம்பம் முறிந்து வீழ்ந்ததுதான் தாமதம், மின்பஸ்ஸை சாரதி உடனேயே எடுத்துச் சென்று விட்டார்” என்று சம்பவத்தை நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர்.

மின்கம்பம் முறிந்தமையினால் பருத்தித்துறைப் பகுதிக்கான மின்சாரம் நேற்று மாலை 5 மணியிலிருந்து இரவு 7.30 மணி வரையில் தடைப்பட்டது.

(வ-5-26)

# பன்னாட்டு விசாரணையை நடத்துவது தமிழ்க் கூட்டமைப்பின் கட்டாயக் கடமை

## கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 1

“தமிழ் மக்கள் விடயத்தில் அரசியல் தீர்வு, பொறுப்புக்கூறல் சம்பந்தமாக சரியான தீர்வு வேண்டும் என்றால் முறையான பன்னாட்டு விசாரணை அவசியம். ஒரு முழுமையான பன்னாட்டு விசாரணையை வலியுறுத்துவதன் ஊடாக உரியவர்களை பொறுப்புக்கூற வைத்து, தமிழ் மக்களுக்கு உரிய அரசியல் தீர்வைப் பெற்றுக்கொடுக்க வேண்டியது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கடமை.”

இவ்வாறு தெரிவித்தார் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம்.



யாழ்ப்பாணத்தில் நேற்று நடத்திய ஊடக சந்திப்பில் அவர் தெரிவித்ததாவது:

இலங்கையில் தமிழ், சிங்களம் என்ற இனமோதல் அடிப்படையில் நடைபெறுகின்ற இந்தப் பிரச்சினையை, உள்ளக ரீதியாக விசாரிக்க முடியாது. இந்த அடிப்படையில் உள்ளகப் பொறிமுறையை ஒருபோதும் ஏற்றுக் கொள்ளமுடியாது.

காலம் காலமாக புதிய அரசமைப்பு உருவாக்கப்படும்போது, தமிழ் மக்களுடைய அரசியல் விடயங்கள் அணுகப்பட வேண்டும் என்ற பொதுவான கோரிக்கையை வடக்குக் கிழக்கு மக்கள் முன்வைத்தால், அதனைக் குழப்பும் வகையில் தென்னிலங்கை எதிர்க்கட்சிகள் செயற்படுகின்றன.

தமிழ் மக்களுக்குக் கிடைக்க வேண்டிய நீதியை கிடைக்காமல் செய்யவும், இன்னொரு வகையில் சிங்கள மக்கள் மத்தியில் தங்களை நிலைநிறுத்திக் கொள்ளவும் எதிர்க்கட்சியில் சிங்கள அரசுகள் செயற்பட்டு வருகின்றன. அந்தப் பின்னணியில்தான் இன்று ராஜபக்சவின் பாதயாத்திரையும் அமைந்துள்ளது.

தமிழ் மக்களுக்கு நடைபெற்ற இனப்படுகொலை தொடர்பாக, பொறுப்புக்கூற வைக்கவேண்டும். தமிழர்களுடைய அடிப்படை அடையாளமான தேசம் என்ற விடயம் வலியுறுத்துகின்ற ஒரு அரசியல் தீர்வை அடைவதற்கு வழிவகுக்கவேண்டும். ராஜபக்ச காலத்தில் தமிழ்த் தேசத்தினுடைய அடையாளங்களை அழிப்பதற்காக சிங்களக் குடியேற்றம் செய்தல், இராணுவத்தை தமிழ்ப் பிரதேசத்தில் நிலை நிறுத்துதல், காணிப் பறிப்புகள், கலாசாரத்தை அழிக்கும் வேலைத்திட்டங்கள் ஆகியன உச்சம் கண்டன. அதனால்தான் தமிழ் மக்கள் ராஜ பக்சவை வெறுத்தார்கள்.

இன்றைய தமிழ் அரசியல் தலைமைகள் ராஜபக்சவைச் சுட்டிக்காட்டி இன்றைய அரசைப் பாதுகாக்குகின்றார்கள்.

தமிழரசுக்கட்சித் தலைவர் கூறுகிறார் ராஜபக்சவின் பாதாயாத்திரை முறியடிக்கவேண்டும் என்று. ஆனால் ராஜபக்சவைக் காப்பாற்றிக் கொடுப்பது இந்த அரசு. சிங்கள மக்களுக்கு வாக்குறுதி கொடுத்திருக்கிறார்கள். மகிந்த குடும்பத்தையும் இராணுவத்தையும் போர்க்குற்ற விசாரணை களில் இருந்து காப்பாற்றுவதாக, பாதயாத்திரை செய்வதற்கு இந்த அரசு விட்டுக்கொடுக்கிறது. தமிழர்களுக்கு நியாயமான தீர்வு கிடைக்ககூடாது என்ற நோக்கில் தொடங்கும் பாதயாத்திரைக்கு அரசு இடம் கொடுக்கிறது. இந்த அரசும் தமிழ் மக்களுக்கு நியாயமான தீர்வு வழங்குவதை விரும்பவில்லை.

நிபந்தனை இல்லாத ஆதரவை வழங்கிய கூட்டமைப்பு, தற்போதைய அரசை தக்கவைத்துக் கொண்டு இருக்கின்றது - என்றார். (வ-ரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். மாவட்ட அபிவிருத்திக்கு 14000 மில்லியன் ரூபா ஒதுக்கீடு

## 6 மாதங்களில் மறுமலர்ச்சி ஏற்படும் என்கிறார் அமைச்சர் சுவாமிநாதன்

யாழ்ப்பாணம், ஓக. 1

யாழ். மாவட்டத்தில் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்வதற்கு 14 ஆயிரம் மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இன்னமும் ஆறு மாதங்களுக்குள் அந்த நிதி செலவு செய்யப்படும். இதன் பின்னர் யாழ்ப்பாணத்தில் மறுமலர்ச்சி ஏற்படும்.

இவ்வாறு தெரிவித்தார் மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன்.

தெல்லிப்பழையில் நேற்று இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்ட அவர் தெரிவித்ததாவது:

விளையாட்டு நிகழ்வுகள் எமது சமூகத்துக்கு அவசியமானது. எங்கள் சிந்தனைகள் வேறு மார்க்கங்களுக்குச் செல்லாமல், குறிப்பாக போதைப் பொருள் பாவனை போன்ற விடயங்களிலிருந்து விடுபடுவதற்கு, விளையாட்டு நிகழ்வுகள் சிறப்பானதாகும்.

வடக்கில் வசிக்கும் மக்கள் 30 வருட காலப் போரை அனுபவித்தவர்கள். இன்று இங்குள்ள இளைஞர்கள் போர்க் காலத்துக்குள் பிறந்தவர்கள். போர்க் காலத்தில் பிறந்து வளர்ந்த இங்குள்ள மக்களின் மனநிலையை அரசு நன்கு அறியும்.

வடக்கு மாகாணத்தில் பல்வேறு அபிவிருத்திகளை எமது அரசு செய்து வருகின்றது. யாழ். மாவட்டத்துக்கு 14 ஆயிரம் மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. வீதிச் சீரமைப்பு, வீடுகள் நிர்மாணம் உள்ளிட்ட பல்வேறு வேலைத் திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

யாழ். மாவட்டச் செயலர் ஊடாக இந்த நிதி செலவு செய்யப்பட்டு வருகின்றது - என்றார்.

(வ-5-ரி)

# இன ரீதியான அநீதியை ஒழித்தல் கூட்டத்தொடர் நாளை ஆரம்பம்

*இலங்கை குறித்தும் ஆராயப்படுகிறது*

கொழும்பு, ஓக. 1

ஐ. நா. மனித உரிமைகள் சபையில் நாளை செவ்வாய்க்கிழமை தொடக்கம் 26ஆம் திகதி வரையில் நடைபெறவுள்ள இன ரீதியான அநீதியை ஒழித்தல் கூட்டத் தொடரில், இலங்கை தொடர்பிலான மீளாய்வும் இடம்பெறவுள்ளது.

இலங்கை தொடர்பிலான மீளாய்வு எதிர்வரும் 15ஆம் மற்றும் 16ஆம் திகதிகளில் இடம்பெறுகிறது.

இந்த அமர்வில் இலங்கையின் சார்பில் ஜெனிவா மனித உரிமைகள் சபைக்கான இலங்கைத் தூதுவர் ரவிநாத் ஆரியசிங்க தலைமையிலான குழுவினர் கலந்து கொள்கின்றனர். இலங்கை குறித்து எழுப்பப்படும் கேள்விகளுக்கும் அவர்கள் பதிலளிக்கவுள்ளனர்.

சட்டமா அதிபர் திணைக்களம் மற்றும் அயலுறவுத்துறை அமைச்சு ஆகியவற்றின் உயர் அதிகாரிகளும் இந்தக் கூட்டத் தொடரில் கலந்து கொள்ளகின்றனர்.

இன ரீதியான அநீதியை ஒழித்தல் தொடர்பான குழுவில் 177 நாடுகள் அங்கம் வகிக்கின்றன. இந்த அமர்வில் பன்னாட்டு மனித உரிமை நிறுவனங்கள், பன்னாட்டு அரச சார்பற்ற நிறுவனங்கள் என்பனவற்றின் பிரதிநிதிகளும் சாட்சியமளிக்கவுள்ளனர். இலங்கை குறித்து மூன்று சிவில் சமூக நிறுவனங்கள் தமது சமர்ப்பணங்களை இன ரீதியான அநீதியை ஒழித்தல் தொடர்பான குழுவுக்கு கையளித்துள்ளன. (வ-5)

# இன்றுடன் ஓய்கிறது பாதயாத்திரை

தேசிய அரசுக்கு எதிராக மகிந்த ஆதரவு அணி கண்டியிலிருந்து முன்னெடுத்த பாதயாத்திரை கொழும்பில் இன்று நிறைவடைகிறது.

கடந்த மாதம் 28ஆம் திகதி பேராதனையில் ஆரம்பமான பாதயாத்திரை நேற்று மாலை கிரிபத் கொடையை வந்தடைந்தது. ஆயிரக் கணக்கான மக்களும் இதில் பங்கேற்றிருந்தனர். இன்று காலை 9.30 மணிக்கு கிரிபத்கொடையிலிருந்து கொழும்பு நோக்கி பாதயாத்திரை ஆரம்பமாகும்.

கொழும்பு நகர், கொழும்பை அண்டிய பிரதேசங்களில் கடுமையான பாதுகாப்பு ஏற்பாடுகளும், சிறப்பு போக்குவரத்துத் திட்டங்களும் இன்றைய தினத்தில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

கொழும்புக்கு வருகை தரும் பொது எதிரணியினர் கூட்டம் நடத்தத் தெரிவு செய்திருந்த ஹைட்பார்க் மைதானம் தற்போது சீரமைப்புப் பணிகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. இன்றைய இறுதி நாள் கூட்டத்தை எங்கே நடத்துவது எனும் குழப்பத்தில் பேரணி ஏற்பாட்டாளர்கள் உள்ளனர். இடம் வழங்கப்படாவிடின் காலிமுகத்திடலில் நடத்தப்படும் என மகிந்த அணியினர் குறிப்பிட்டனர்.

இறுதிப் பேரணியில் பத்து இலட்சம் மக்கள் கலந்து கொள்வார்கள் என்று மகிந்த அணியினர் தெரிவிக்கின்றனர். (வ-5)

# சிறுவன் திடீர் சாவு

நண்பர்களுடன் விளையாடிக் கொண்டிருந்த சிறுவன் திடீரென உயிரிழந்தான்.

அச்சுவேலி வடக்குப் பகுதியில் நேற்று மாலை 6 மணியளவில் இந்தச் சம்பவம் நடைபெற்றது. யாழ். பரியோவான் கல்லூரியில் கல்வி பயிலும் சுதாகரன் நிதுர்சன் (வயது -12) என்ற சிறுவனே உயிரிழந்தான். உடற்கூற்றுப் பரிசோதனைக்காக சடலம் அச்சுவேலி வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (வ-5-101-107)







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆடி அமாவாசை தீர்த்தோற்சவம்

முல்லைத்தீவு, ஓக.1

பிதிர்க் கடன்களை நிறைவேற்றும் ஆடி அமாவாசை தீர்த்தோற்சவ நிகழ்வு கருடபகவானால் உருவான கெருடமடு விநாயகர் ஆலய தீர்த்தோற்சவ தினமான நாளை நடைபெறும் என்று ஆலய நிர்வாகிகள் தெரிவித்தனர். (ந-500)

**கடை வாடகைக்கு**

யாழ்ப்பாணம், ஆஸ்பத்திரி வீதி சத்திரச் சந்தியில் இருந்து கொட்டடிப் பாதையில் அகலம் 11 ½ நீளம் 70 அடி கீழ் தளம், மேற்தளம் கொண்ட கடை வாடகைக்கு உண்டு.

**071 560 4213**

**வீடு வாடகைக்குண்டு**

கிளிநொச்சி நகரில் டிப்போச் சந்தியிலிருந்து 1½km தூரத்தில் 4 அறைகளுடன் வீடு வாடகைக்கு உண்டு.

**077 780 6235**

ENGLISH/ TAMIL MEDIUM
HOME VISIT CLASSES

ACCOUNTING- GR. 10,11, A/L
ENGLISH- ANY GRADE
TEACHER FOREIGN
EXPERIENCED

**077 331 6402**

**வீடு வாடகைக்கு உண்டு**

பத்தமேனி, அச்சுவேலியில் (பஸ்தரிப்பிடத்திற்கு அருகில்) சகல வசதிகளும் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு.

(தே.3415)-(13.18)

**077 086 8673**

# மகிந்த தரப்பினர் செய்வதை தீவிரவாதிகள் கூட செய்யார்

## சாடுகிறார் எஸ்.எம். மரிக்கார் எம்.பி.

கொழும்பு, ஓக. 1

நடைபவனியில் மகிந்த தரப்பு அம்புலன்ஸ் மீது தாக்குதல் நடத்துகிறது. தீவிரவாதிகள் கூட இவ்வாறு தாக்கமாட்டார்கள். இவ்வாறு தெரிவித்தார் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். மரிக்கார்.

கொழும்பில் நடத்தப்பட்ட இலவச மருத்துவ முகாம் ஒன்றில் கருத்துத் தெரிவிக்கும்போதே இவ்வாறு கூறினார்.

அவர் தெரிவித்ததாவது:

அலிபாபாவும் 40 திருடர்களும் தமக்கு மீண்டும் நாட்டில் திருடுவதற்கு இடமளிக்குமாறும், படுகொலை செய்ய இடமளிக்குமாறும், கொள்ளையடிக்க இடமளிக்குமாறும், ஊழலுக்கு இடமளிக்குமாறும் கோரியே நடைபவனி நடத்துகின்றனர்.

நாம் எமது பிரதேச மக்களுக்கு சேவை செய்து வருகிறோம். நாட்டு மக்களின் சேவைக்காக புதிய அம்புலன்ஸ் அரசு நேற்றுமுன்தினம் வழங்கியது. நடைபவனியில் கலந்து கொண்டவர்கள் நோயாளிகளை ஏற்றிச் செல்லும் அம்புலன்ஸ் மீது தாக்குதல் நடத்துகின்றனர்.- என்றார். (ந-4)

**விசேட விலைகளில்...!**

Desktop pc & Laptop
hp dell lenovo
ஆரம்ப விலை 76,000/= இருந்து
6th Gen
Celeron / i3 / i5 / i7 ஆரம்ப விலை 49,000/= இருந்து

CCTV Security Camera
KKBRO TOUCH YOUR LIFE
Wireless IP Camera Kit - 58,000/=
4CH / 8CH/ 16CH / 32CH/ NVR'S Available
2 வருட உத்தரவாதம்
AHD DVR 10,000/= இருந்து
AHD Camera 3,800/= இருந்து
Wireless IP Camera 9,500/=

Printers
hp brother SAMSUNG

Inkjet printer
HP 1010 Printer - 3,500/=
Canon pixma ip 2870S - 3,500/=
HP 2135 (Print/ Copy/ Scan) Printer - 9,500/=
HP 4675 (Print/ Copy/ Scan) Printer - 19,600/=
Canon 2570S (Print/ Copy/ Scan) Printer - 7,500/=
Brother DCP - T300 (Print/ Copy/ Scan) Printer - 34,500/=

Laser printer
HP 1102 Printer - 16,200/=
HL 1210w Wireless Printer - 13,000/=
HP 201dw Wireless Printer - 39,000/=
HP M402dn Printer - 49,000/=

Laser 3 in 1printer
HP M125A Printer - 26,500/=
Samsung Xpress M2070 (Print/Copy/ Scan) - 22,500/=

Color Laserjet Printer
HP CP1025 Printer - 41,000/=

HomeTheatre Speakers
MiPAQ
2.1 → 3,800/= இருந்து
4.1 → 6,000/= இருந்து
5.1 → 7,000/= இருந்து
Karooke - 17,000/= இருந்து
USB FM Bluetooth micro SD
Condition apply

Projector & Projector Screen
SONY
- Tripod Screen
- Wall mount Screen
- Electronic Projector Screen
Sony VPL DX111 - 68,000/=
(all size are available)

MICRO PC SYSTEMS
No - 218, Hospital Road , Jaffna.
Jaffna : 218, Hospital Road, Jaffna 021 222 5893
Nellivadi : Pointpetro Road, Nelliyadi 021 226 2929
Kilinochchi : 85A, Old Kachcheri Opposite A9 Road , Kilinochchi 021 228 5393
Vavuniya : 66 b, 2nd Cross Street 024 222 1969
E-mail - jaffna@micropcsystems.com / Web : www.micropcsystems.com
071 035 6065 / 077 396 3280 / 021 222 5893

# அரசமைப்பு சீரமைப்பு குறித்து சு.க. - ஐ.தே.க. குழுக்கள் பேச்சு

## சர்வஜன வாக்கொடுப்பை தவிர்ப்பதற்காக

கொழும்பு, ஓக. 1

அரசமைப்பு மறுசீரமைப்பின்போது நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை ஒழித்தல், மாகாணங்களுக்கு இடையில் அதிகாரத்தைப் பகிர்தல் போன்ற சில விடயங்களின்போது சர்வஜன வாக்கெடுப்புக்குப் போகாமல் இணக்கப்பாடுகளை எட்டுவதற்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இடையில் பேச்சு ஆரம்பமாகியுள்ளது என்று அரசின் தகவல் அறியும் வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

இரு கட்சிகளிலிருந்தும் தலா ஐந்து பேர் கொண்ட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. ஐக்கிய தேசியக் கட்சி நியமித்துள்ள குழுவில் மங்கள சமரவீர, மலிக் சமரவிக்கிரமசிங்க, கபீர் ஹாசீம், அகிலவிராஜ் காரியவசம் மற்றும் சாகலரத்நாயக்க ஆகியோர் உள்ளடங்குகின்றனர். சிறிலங்கா சுதந்திரக் கட்சி நியமித்துள்ள குழுவில் நிமல் சிறிபால டி சில்வா, சுசில் பிரேமஜயந்த, துமிந்த திஸாநாயக்க, மகிந்த அமரவீர மற்றும் லசந்த அழகியவண்ண ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்தக் குழுக்கள் பல சந்திப்புகளை நடத்தியுள்ளன என்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு மற்றும் புதிய தேர்தல் முறைமை தொடர்பில் பல முடிவுகளை எடுத்துள்ளன என்றும் அரசின் தகவல் அறியும் வட்டாரங்களில் இருந்து அறியமுடிந்தது. (ந-4)

# INVITATION FOR BIDS
# TEACHING HOSPITAL, JAFFNA

The Chairman of the Regional Procurement Committee, Teaching Hospital, Jaffna, invite sealed bids from eligible and qualified bidders for the construction and renovation works in the schedule below.

| | Work / Service Details | Non refundable Deposit (Rs.) (Bid fee) | Security Deposit (Rs.) | Validity Period of Bid Security (days) | Approximate Direct cost of the work (Rs.in million) | Minimum ICTAD Grade |
|---|---|---|---|---|---|---|
| 1. | Construction of Stores at Sewerage Treatment Plant | 500.00 | 45,000.00 | 91 | 2.0 | C 8 |
| 2. | Construction of Lift Room & Installation of Lift Machine | 500.00 | 135,000.00 | 91 | 6.6 | C 7 |
| 3. | Toilets Renovation of Ward 01 | 500.00 | 15,000.00 | 91 | 0.7 | C 9 |
| 4. | Renovation of Drivers Duty Room and Clean Well Office | 500.00 | 35,000.00 | 91 | 1.5 | C9 |
| 5. | Complete Repair of Main Water Tank | 500.00 | 20,000.00 | 91 | 0.9 | C9 |
| 6. | Painting and Iron Grill wok at Kitchen and Iron Grill work at skill Lab works at NTS | 500.00 | 25,000.00 | 91 | 1.1 | C 9 |
| 7. | Renovation of Principal Quarters & Male Students Toilets at NTS | 500.00 | 30,000.00 | 91 | 1.4 | C 9 |
| 8. | Repair of Corridor, Landscaping Near the Office and Curtin Partition in NTS Lecture Hall at NTS | 500.00 | 35,000.00 | 91 | 1.5 | C 9 |

2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure ( NCB)
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall be registered in the field of Building Construction for grade given in the schedule or above with the institute for Construction, Training and Development (ICTAD)
4. Interested bidders can inspect bid forms at the Residence Engineer's Office. CECB. Jaffna during office hours, if necessary.
5. A Complete set of Bidding Documents in English Language may be purehased by interested Bidders from Director. Teaching Hospital. Jaffna upon producing valid registration book and receipt for the cash payment for the bid fee from 02.08.2016 up to 18.08.2016 during office hours. The payment shall be made to the shroffs office. Teaching Hospital. Jaffna.
6. Sealed bids shall be delivered to the address below at or before 10.00 hrs on 19.08.2016. Late bids will be rejected. Bids will be open at Director's Office. Teaching Hospital. Jaffna soon after closing in the presence of bidders or their representatives who choose to attend.

**Director (Chairman),**
01.08.2016 **Regional Procurement Committee, Teaching Hospital, Jaffna.**

**மிகவிரைவில் வெளிவர உள்ளது**



இலங்கை வரலாற்றிலே முதன் முறையாக ஊடகங்கள் பல இணைந்து பெருமையுடன் வழங்கும் மிகவும் சிறுவயதில் சிறந்த 10 நூல்களை வெளியிட்டு வடமாகாணத்துக்கே பெருமை சேர்த்த பூநகரி எழுத்தாளன்

**நற்குணம் தயானின்**
**11ஆவது நூல் -சேற்றில் பூத்த தாமரை**


- சிறுகதைகள்
- கவிதைகள்
- கட்டுரைகள்
- மாணவர்களுக்கான வினாவிடைகள் மற்றும்
- வடமாகாணம் பற்றிய பெரியதோர் எடுத்துக்காட்டு.

மிக விரைவில் மிக பிரமாண்டமாக வெளிவர உள்ளது.

குறிப்பு: மாணவர்களுக்கு இந்நூல் இலவசமாக வழங்கப்படும்.

மேலதிக விபரங்களுக்கு: 076 852 9157

**பிறந்தநாள் வாழ்த்து**



இன்று
(01.08.2016)
தனது 64 ஆவது அகவையைக் கொண்டாடும் கல்வி இராஜாங்க அமைச்சர்

**வே. இராதாகிருஸ்ணன்**

Happy Birthday

அவர்களது சேவை தொடரவும் சகல வளங்களும் பெற்று நீடூழி வாழவும் எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சி வாழ்த்துகின்றோம்.

பழைய மாணவர் சங்கம்
யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி - சாவகச்சேரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பௌத்த மதத்தை ஒருபோதும் புதிய அரசமைப்பு பாதிக்காது

*அமைச்சர் கிரியெல்ல தெரிவிப்பு*

கொழும்பு, ஓகஸ்ட் 1

உத்தேச புதிய அரசமைப்பு சிங்கள இனத்தையோ அல்லது பௌத்த மதத்தையோ மலினப்படுத்தாது. இவ்வாறு தெரிவித்தார் அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல.


கொழும்பு ஊடகத்துக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

30 ஆண்டுகள் நாட்டில் போர் இடம் பெற்றுள்ள நிலையில், நாட்டின் அரசமைப்பில் திருத்தம் செய்யப்பட வேண்டிய அவசியம் எழுந்துள்ளது.

ஐக்கிய இலங்கைக்குக் குந்தகம் ஏற்படும் வகையில் அரசு அரசமைப்பு மாற்றம் செய்வதாகச் சில ஊடகங்கள் சுமத்தி வரும் குற்றச்சாட்டுக்களில் உண்மையில்லை. ஜனாதிபதியும், பிரதமரும், அவைத் தலைவராகிய நானும் நல்ல பௌத்தர்கள். எனவே எங்கள் மதத்துக்கோ கலாசாரத்துக்கோ குந்தகம் ஏற்பட செயற்படப் போவதில்லை - என்றார். (வ-5)

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
**சின்னப்பொடி மரியராசா**



மலர்வு
11.07.1948

உதிர்வு
01.08.2014


பட்டென செய்தி ஒன்று சட்டென வந்து எம் காதுகளில் விழுந்தது
மதிகலங்கி நிற்கின்றோம் உண்மையா பொய்யா என.... பரிதவித்து துடித்தோம்
காற்றெனவே வந்த விதி கடிதினிலே பிரித்ததனால்
ஆற்றொணாச் சோகமுற்றோம்! ஆண்டிரண்டு சென்றாலும்
என்றும் எமது உள்ளத்தில் மறையாது உம் நினைவுகள்
"நான் உன் பெயர் சொல்லி
அழைத்தேன் நீ எனக்குரியவன்"

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இன்று (01.08.2016) திங்கட்கிழமை சக்கோட்டை புனித சவேரியார் ஆலயத்தில் நினைவுத் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

சக்கோட்டை,
அல்வாய் வடமேற்கு.

பிரிவால் துயருறும்: மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
தகவல் : குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**சின்னையா விபுலானந்தன்**

திதி: (01.08.2016)

தோற்றம்
15.01.1950

மறைவு
13.08.2015

பாசத்தின் உறைவிடமாய் பண்பின் சிகரமாய்
பாசத்தால் அரவணைத்து வழிகாட்டிய எங்கள் மாமாவே!
உங்கள் நினைவுகளில் வாழ்கின்றோம் மாமாவே!

மருமக்கள்
நமணன் குடும்பத்தினர்.

(0a/3072)
(12.18)

## அதிபர் வெற்றிடத்துக்கு விண்ணப்பிக்கலாம்

தென்மராட்சி, ஓக.1


தென்மராட்சி கல்வி வலயத்தில் அதிபர் பதவி வெற்றிடமாகக் காணப்படும் 9 பாடசாலைகளுக்கு அதிபர்களை நியமிப்பதற்கு தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் கடமையாற்றும் அதிபர் சேவையைச் சேர்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

பாடசாலை வகை 11 ஐச்சேர்ந்த எழுதுமட்டுவாழ் அ.த.க.பாடசாலை, கைதடி குருசாமி வித்தியாலயம் ஆகியவற்றுக்கு இலங்கை அதிபர் சேவை தரம் 11 ஐச் சேர்ந்தவர்களிடமிருந்தும் வகை 111 ஐச் சேர்ந்த கல்வயல் ஸ்ரீசண்முகானந்தா வித்தியாலயம், போக்கட்டி அ.த.க. பாடசாலை, சரசாலை ஸ்ரீ கணேசா வித்தியாலயம், கரம்பை அ.மி.த.க.பாடசாலை, இயற்றாலை அ.மி.த.க. பாடசாலை, கைதடி கலைவாணி வித்தியாலயம், குடமியன் அ.த.க.பாடசாலை ஆகிய 7 பாடசாலைகளுக்கு இலங்கை அதிபர் சேவை தரம் 111 ஐச் சேர்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

வகை 11 பாடசாலைகளுக்கு தற்போது அதிபர் சேவை போட்டிப் பரீட்சையில் சித்திபெற்று நியமனத்தைப் பெற்றுக் கொண்ட இலங்கை அதிபர் சேவை தரம் 111ஐச் சேர்ந்தவர்களும் விண்ணப்பிக்க முடியும் என்று தெரிவிக்கப்பட்டது. (ந-9)

## கண்ணீர் அஞ்சலி

**வேலுப்பிள்ளை கண்ணப்பமூர்த்தி**



எம்முடன் பணியாற்றிய சக கிராம அலுவலர்
வேலுப்பிள்ளை கண்ணப்பமூர்த்தி அவர்கள்
27.07.2016 அன்று இறைபதம் அடைந்ததையிட்டு
எமது கண்ணீர் அஞ்சலியினைத் தெரிவித்து
அன்னாரது ஆத்மாசாந்தியடையப்
பிரார்த்திக்கின்றோம். அத்துடன் அவரது
குடும்பத்தினருக்கு எமது பச்சிலைப்பள்ளி கிராம
அலுவலர்கள் சார்பில் ஆழ்ந்த அனுதாபங்களையும்
தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

**கிராம உத்தியோகத்தர்கள்**
**பச்சிலைப்பள்ளி.**

(J.2993)(12.18)

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
**சற்குணரத்தினம் ஜெகதீஸ்வரி**

(ஆசிரியை - புவியியல்
சிறப்புப் பட்டதாரி)



வையத்துயர் துடைத்த பத்தினியே எம்மருமைத் தாயே
வையகத்திலினி வாழ்வதெப்படியோ உமை மறந்து
சைகையின்றி சடுதியில் சிவனடி சேர்ந்த எம் - அம்மா
மூன்று ஆண்டுகளென்ன முந்நூறு ஆண்டுகள்
சென்றாலும் ஆறாது எம் துயரம்
மாறாது உங்கள் நினைவு

கேனுபவனம்,
கோயிலாமனை, கொடிகாமம்.

குடும்பத்தினர்.
077 636 5732

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம்
16 . 02 . 1943

மறைவு
02 . 07 . 2016



**அமரர் செல்லையா மனோகரன்**


**(முன்னாள் மக்கள் வங்கி முகாமையாளர் - சாவகச்சேரி)**

கடந்த (02.07.2016) சனிக்கிழமை இறைபதம் எய்திய எமது அன்புத் தெய்வத்தின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (01.08.2016) திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் வருகை தந்து ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். அன்னாரின் இறுதிச் சடங்கில் கலந்துகொண்டு பலவழிகளிலும் உதவிய அனைத்து அன்புள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

குடும்பத்தினர்,
லங்கா [illegible] வீதி,
சாவகச்சேரி.

## 10 ஆவது ஆண்டு நினைவஞ்சலி

அன்னையின் மடியில
27 . 07 . 1955



ஆண்டவன் அடியில்
23 . 07 . 2006

அமரர்
**சோமசுந்தரம் திருஞானசம்பந்தன்**

பாசத்தின் பிறப்பிடமாய்
பண்பின் உறைவிடமாய்
அன்பிற்கு இலக்கணமாய்
அறிவிற்கு வித்தாக இருந்த - நீங்கள்
ஆண்டவனடியில் சென்று
ஆண்டுகள் பத்து கடந்தாலும்
ஆறாத உங்கள் நினைவுகளுடன் என்றும்
உங்கள் நிழல்களாய் நாம்.

சின்னாலடி, காரைநகர்.
076 724 7442
(J.3380) (13.18)

என்றும் நினைவுகளுடன்
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில் 02 . 10 . 1950

ஆண்டவன் மடியில் 25 . 07 . 2014

**லயன் ஆறுமுகம் சாந்தலிங்கம் (J.P)**

(புங்குடுதீவு)

எங்கள் இதய தீபம்
அணைந்து இரண்டு ஆண்டுகள்
ஆனது நேற்றுப் போல்
இருக்குதப்பா உயிருக்கு
உயிராக உயர்ந்து
நின்றவரே பழகி வந்த
இனிய சுகம் பாதியிலே
நின்றாலும் எழுதி வைத்த
ஓவியம் போல் - எம் மனதில்
நீங்கள் இருப்பீர்கள்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

சாவகச்சேரி.

மனைவி - தர்சினி,
பிள்ளைகள் - சாங்கர்
தினேஷன்.

(J. 3414) (13.16)

## 31ஆம் நாள் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



அன்னை மடியில் 07 . 10 . 1932

ஆண்டவன் அடியில் 04 . 07 . 2016

**திருமதி பொன்னம்மா சபாபதிப்பிள்ளை**

கடந்த 04.07.2016 திங்கட்கிழமை சிவபதம் அடைந்த எமது குடும்பத் தலைவி அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு நேரிலும் தொலைபேசி மூலமாகவும் உள்நாடு மற்றும் வெளிநாடுகளிலிருந்து ஆறுதல் கூறியவர்களுக்கும் கண்ணீர் அஞ்சலி, துண்டுப்பிரசுரம் வெளியிட்டவர்களுக்கும், மலர்வளையம் சாத்தியோருக்கும் சகல வழிகளிலும் உதவி புரிந்தவர்களுக்கும் மற்றும் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின் றோம்.எமது குடும்பத் தலைவியின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (01.08.2016) திங்கட்கிழமை யாழ்.கீரிமலை புண்ணிய திருத்தலத்தில் நடைபெற்று, வீட்டுக்கிரியைகள் 03.08.2016 புதன்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும். இந்த நிகழ்வில் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அவரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**குடும்பத்தினர்.**

இல.119/1, சிவன்கோயில் வீதி,
தோணிக்கல், வவுனியா.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் சின்னையா விபுலானந்தன் (விபுல்)**

(நுசாயின் லொட்ஜ் உரிமையாளர்
112/1, டாம் வீதி, கொழும்பு -12)

பிறப்பு 15.01.1950 — இறப்பு 13.08.2015



நேர்த்தியான வாழ்வுதனை வாழ்ந்து!
மனித குல பண்புதனைப் புகட்டி!
புடம் போட்ட தங்கமாக! எமை உருக்கி
உலக வாழ்வில் எமை மிளிர வைத்த
எம் வம்சத்தின் தலைவனாக
தலைநகரில் வாழ்ந்தவரே!
ஞான அறிவுபெற்ற விபுலானந்தன்
என்ற திருநாமத்தைப் பெற்றவரே!
கடமை முடிந்ததென விண்ணுலக
வாழ்விற்கு சென்றவரே!
உங்கள் ஆத்மா ஆசீர்வாதமாக
என்றும் எமைக் காப்பீரையா!

என்றும் நினைவில்.....

(ஜே.3416) (13.18.)

**பெறாமக்கள், மருமக்கள், சகோதரங்கள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கற்சிலைமடு சிவன் ஆலயச் சூழலை பௌத்த மயமாக்க ராணுவம் முயற்சி

## பௌத்தர்கள் வாழ்ந்த இடம் என அறிவித்தல் பலகை; நடவடிக்கை எடுக்க வேண்டும் என்கின்றனர் பிரதேச மக்கள்



முல்லைத்தீவு, ஓக.1

**ஒட்டுசுட்டான் கற்சிலைமடு சிவன் ஆலயத்திலும், அதை அண்டிய காணிகளிலும் 3 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் பௌத்தர்கள் வாழ்ந்தார்கள். கற்சிலைமடுவில் புத்த வழிபாடுகள் நடத்தப்பட்டன என்று இராணுவத்தால் அறிவித்தல் பலகை நடப்பட்டுள்ளது. ஒட்டுசுட்டானில் உள்ள தனியார் காணிகளை அபகரித்து இராணுவத்தினர் புத்தர் சிலைகளை அமைத்து வருகின்றனர்.**

இவ்வாறு குற்றச்சாட்டினர் பிரதேசத்தைச் சேர்ந்த மக்கள். அவர்கள் தெரிவித்ததாவது-

முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான் பிரதேசத்துக்கு உட்பட்ட கற்சிலை மடு கிராமத்தில் உள்ள சிவன் ஆலயமும், அதனைச் சேர்ந்த காணிகளும் அரசுக்கு சொந்தமானவை. அங்கு 3ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் பௌத்தர்கள் வாழ்ந்துள்ளார்கள். புத்த வழிபாடுகளும் இடம்பெற்றன. இந்த இடம் அநுராதபுரத்தைச் சேர்ந்தது என்று ஒட்டுசுட்டான் இராணுவத்தினரால் அறிவித்தல் பலகை ஒன்று நடப்பட்டுள்ளது.

ஒட்டுசுட்டான் பகுதியில் தனியாருடைய காணிகள், பொதுக் காணிகள் என பலவற்றையும் இராணுவத்தினர் ஆக்கிரமித்துள்ளனர். ஒட்டுசுட்டான் மக்களுக்கான மயானக் காணிகளை ஆக்கிரமித்து பெரும் கட்டடங்களையும் பிரமாண்டமான புத்தர் சிலையையும் அமைத்துள்ளனர்.

மன்னாகண்டல் பகுதியில் விவசாயிகளுடைய உரக்களஞ்சிய சாலையையும், களஞ்சிய சாலையின் காணியையும் ஆக்கிரமித்து அதை விரிவாக்கி அங்கும் புத்தர் சிலையை வைத்துள்ளனர். ஒட்டுசுட்டானில் உள்ள இராணுவ முகாம்களில் புத்தர் சிலைகள் அமைக்கப்பட்டுள்ளன.

தற்போது சிவன் ஆலயத்தில் பெயர்ப் பலகை நட்டுள்ளனர். இதைத் தடுக்க வேண்டும். எதிர்காலத்தில் ஒட்டுசுட்டான் பிரதேசத்தைச் சிங்கள மயமாக்கி விடுவார்களோ என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது.- என்று தெரிவித்தனர்.

சிவன் ஆலயத்தின் நிர்வாகியான கந்தையா சிவராசா தெரிவித்ததாவது-

கற்சிலை மடுவில் உள்ள சிவன் ஆலயத்தைச் சுற்றி எமது மூதாதையர்கள் இருந்தார்கள். இந்த இடத்துக்கு சிவலிங்கக் கோயிலடி எனவும் பெயர் உண்டு. சிவன் ஆலயத்தின் அருகே உள்ள காணிகள் இந்தசிவன் ஆலயத்துக்கு உரித்தானது. அதற்கான காணி உறுதிப் பத்திரமும் உண்டு. அதில் அனைத்தும் தெளிவாக உள்ளது. ஆலயத்தையும் அதன் காணிகளையும் எமது மூதாதையர் வழி வந்த கதிர்காமு கந்தையா கவனித்தார். அவருடைய மறைவுக்குப் பின் அவருடைய மகன் கந்தையா சிவராசாவாகிய நான் நிர்வகித்து வருகின்றேன். 2008, 2009 காலப் பகுதியில் ஏற்பட்ட இடப்பெயர்வின் பின்னர் இந்த இடத்தை இராணுவத்தினர் கையகப் படுத்தினர்.

இங்கு பெரும் முகாம் அமைத்தனர். பெரிய அளவிலான புத்தர் சிலையை வைத்தனர். மீள் குடியேற்றங்களின் பின்னர் இது தொடர்பாக பத்திரிகைகளில் செய்திகளும் வெளியிடப் பட்டன. அதையடுத்து அந்த பெரிய அளவிலான புத்தர் சிலை அகற்றப்பட்டது. பின்னர் சிறிய புத்தர் சிலை ஒன்று வைக்கப்பட்டது. சிவன் ஆலயத்தைச் சுற்றியுள்ள காணிகளை ஆக்கிரமித்து சுற்று வேலிகளையும் அமைத்தனர். தற்போது இது பெரும் முகாமாக வடிவமைக்கப்பட்டது, தென்னிலங்கை சுற்றுலா பயணிகள் தங்கும் அளவிற்கு இந்த முகாம் விரிவாக்கப்பட்டது.

சிவன் கோவிலை அண்டிய காணிகள் பயிர்ச் செய்கைக்குரிய காணிகள், அவற்றில் இருந்து கிடைக்கும் வருமானம் சிவன் ஆலயத்துக்கே உரியது. அவற்றை இராணுவத்தினர் ஆக்கிரமித்துள்ளதால் பயிர்ச் செய்கை மேற்கொள்ள முடியாதுள்ளது என்று கடந்த வருடம் இராணுவ உயர் அதிகாரியிடம் முறையிட்டேன், இன்று வரை எந்த நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை. தற்போது சிவன் ஆலயமும், அதனை அண்டியுள்ள காணிகளும் பௌத்தர்கள் வாழ்ந்த இடம் என இராணுவத்தினர் அறிவித்தல் பலகை நட்டுள்ளனர்.- என்றார். (ற-21,500)

# மக்கள் கருத்தறியும் செயலணியில் அச்சமின்றி கருத்தைப் பதிவிடுங்கள்

## *போர்க்குற்ற விசாரணைப் பொறிமுறை கருத்தறியும் யாழ். வலயச் செயலணியின் தலைவர் தெரிவிப்பு*

கரணவாய் ஓக.1

போர்க்குற்ற விசாரணைப் பொறிமுறை பற்றிய கருத்தறியும் செயலணிக்கு வந்தமை தொடர்பாக யாருக்காவது அச்சுறுத்தல் ஏற்பட்டால் அது தொடர்பாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிடமோ அல்லது எம்மிடமோ உடனடியாக முறையிட முடியும். இவ்வாறு போர்க்குற்ற விசாரணைப் பொறிமுறையை அமைப்பது மற்றும் காணாமற் போனோர் அலுவலகத்தை அமைப்பது தொடர்பான மக்களிடம் கருத்தறியும்யாழ்ப்பாண வலயச் செயலணியின் தலைவர் திருமதி ரஜனி சந்திரசேகரம் தெரிவித்தார்.

குறித்த கருத்தறியும் செயலமர்வு நேற்று கரவெட்டிப் பிரதேச செயலக மண்டபத்தில் இடம் பெற்றது.

அதில் கலந்து கொண்ட பலர் இத்தகைய செயலணிகளுக்கு முன்தோன்றி கருத்துக்களைக் கூற பயமாகவுள்ளது. இராணுவப் புலனாய்வாளர்களும் ஏனைய புலனாய்வாளர்களும் எங்களை தீவிரமாகக் கண்காணிக்கின்றனர். சிறைகளில் மற்றும் காணாமல் போன நிலையில் உள்ள எங்கள் பிள்ளைகளுக்கு ஏதாவது நடந்து விடும் என்று அச்சமாக இருக்கின்றது. அதனால்தான் இன்று பலர் இங்கு வரவில்லை என்று தெரிவித்தனர்.

யாழ்ப்பாண வலயச் செயலணியின் தலைவர் தெரிவித்ததாவது-

சம்பந்தப்பட்ட சகல தரப்பினர்களுக்கும் அறிவித்தல் விடுக்கப்பட்டது. அவர்களின் உறுதிமொழியின் அடிப்படையில் தான் நாங்கள் இந்தப் பணியை முன்னெடுக்கின்றோம். இது தொடர்பாக யாருக்காவது அச்சுறுத்தல் விடுக்கப்படுமானால் நீங்கள் உடனடியாக மனித உரிமை ஆணைக்குழுவிடமோ அல்லது எங்களிடமோ எவ்வித தயக்கமுமின்றி முறையிடலாம். இங்கு கருத்துக்கூறுவதால் யாருக்கும் பாதிப்பு ஏற்படாது. துணிந்து உங்கள் கருத்துக்களைத் தெரிவியுங்கள். - என்றார். (ற-108)

# வீடு புகுந்து தாக்கிய சிப்பாயின் மீது நடவடிக்கை எடுக்கவில்லை பொலிஸ்

## பாதிக்கப்பட்டவர்கள் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஓக.1

முழங்காவிலில் வீடு புகுந்து தாக்கிய இராணுவச் சிப்பாய் மீது முறைப்பாடு பதிவு செய்யவோ, நடவடிக்கை எடுக்கவோ பொலிஸார் அஞ்சுகின்றனர் என்று குற்றஞ்சாட்டியுள்ளார் பாதிக்கப்பட்டவர்.

முழங்காவிலில் வசிக்கும் துரைசிங்கத்தையும், அவரது மகனான கௌதமனையும் வீட்டுக்குள் அத்துமீறி நுழைந்த இராணுவச் சிப்பாய் தாக்கினார் என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது. இந்தச் சம்பவம் கடந்த வாரம் நடைபெற்றது என்றும் தெரிவிக்கப்பட்டது.

தாக்குதலுக்குள்ளானவர்கள் 3 நாள்கள் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை விடுதியில் தங்கிச் சிகிச்சை பெற்று வெளியேறியுள்ளனர். தாக்குதல் நடத்தப்பட்ட அன்றும், அதன் பின்னரும் முழங்காவில் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியுடன் தொடர்பு கொண்டு விடயத்தைத் தெரிவித்தபோதும் அவர்கள் முறைப்பாட்டை ஏற்க மறுத்துவிட்டனர் என்று பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்தனர்.

இது குறித்து நேற்று நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டது என்றும், இன்று மனித உரிமைகள் ஆணைக் குழுவின் கவனத்துக் கொண்டு செல்லப்படும் என்றும் அவர்கள் தெரிவித்தனர். பொலிஸ் ஆணைக்குழுவிலும் இது குறித்து முறையிடப்படவுள்ளது என்றும் பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்தனர். (ற-101)

# வவுனியாவில் சிறுநீரக சிகிச்சைப் பிரிவு

வவுனியா பொது வைத்தியசாலைக்கு மத்திய சுகாதார அமைச்சின் நிதியூடாக சிறுநீரக சிகிச்சைப் பிரிவு 40 மில்லியன் ரூபா செலவில் ஆரம்பிக்கப்படவுள்ளது என்று வவுனியா பொது வைத்தியசாலையின் பணிப்பாளர் மருத்துவர் கு.அகிலேந்திரன் தெரிவித்தார்.

வவுனியா மாவட்டத்தில் அதிகரித்து வரும் சிறுநீரக நோயாளர்களின் நலன்கருதி சிறுநீரக சிகிச்சைப் பிரிவுக்கான புதிய கட்டடத் தொகுதி மற்றும் சிறுநீரக நோய் பிரிவுக்கான உபகரண தொகுதி மத்திய சுகாதார அமைச்சின் நிதியூடாக வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலைக்கு கிடைத்துள்ளது என்றும் குறிப்பிட்டார். (ற-4)

# மக்கள் வங்கி சேவை நிலையம் திறப்பு

யாழ்ப்பாணம், ஓக.1

மக்கள் வங்கியின் சேவை நிலையம் இன்று கொக்குவிலில் திறக்கப்படவுள்ளது. காலை 8.30மணிக்கு, இல. 205 கே.கே.எஸ் வீதி, குளப்பிட்டிச் சந்தி, கொக்குவிலில் நிகழ்வு நடைபெறும். முதன்மை விருந்தினராக மாவட்டச் செயலர் அரசு அதிபர் நா.வேதநாயகன் கலந்து கொள்ளவுள்ளார். (ற-ரி4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிக்குளு குளத்து நீரை வீண் விரயமாக்காதீர்

## குளத்தின் கீழ் வெங்காயச் செய்கை செய்யும் விவசாயிகள் கோரிக்கை



யாழ்ப்பாணம், ஓக.1

வல்வெட்டித்துறை-கெருடாவில் வடக்கு கிராம சேவகர் பிரிவில் உள்ள நிக்குளு குள நீரை அதிகாரிகள் அவசரமாக வெளியேற்றுகின்றனர். அதனால் 25 ஆயிரம் வெங்காயப்பயிர் அழிவடையும்அபாயம்ஏற்பட்டுள்ளது. இவ்வாறு அந்தப் பகுதி விவசாயிகள் கவலை வெளியிட்டனர்.

இந்தக் குளத்தின் கீழ் பயிர்ச் செய்கையில் ஈடுபடும் 14 விவசாயிகள் தெரிவித்ததாவது:

"இந்தக் குளத்தைச் சுற்றி 50 ஆயிரம் பயிர்கள் பயிரிடக் கூடிய நிலம் உள்ளது. தற்போது இந்தக் குளத்தையும், அருகில் உள்ள சில கிணறுகளையும் நம்பி 25 ஆயிரம் வெங்காயப் பயிர்கள் பயிரிடப்பட்டுள்ளன. 3 ஆயிரம் வெங்காயப் பயிர் செய்ய ஒரு லட்சம் ரூபாவுக்கு மேல் செலவாகும். நாம் 25 ஆயிரம் பயிர்கள் செய்கை செய்துள்ளோம்.

இந்தக் குளத்தில் இருந்து தற்போது நீர்பாய்ச்சப்படுவதால் ஓகஸ்ட் மாத இறுதிக்குள் நீர் வற்றிவிடும் நிலை காணப்படுகின்றது. இந்த நிலையில், அதிகாரிகள் நேற்றுமுதல் இயந்திரங்கள் மூலம் நீரை வெளியேற்றுகின்றனர். குளச் சீரமைப்புக்காக 8 லட்சம் ரூபா நிதி கிடைத்துள்ளது என்றும், பற்றைகள் துப்புரவு செய்ய அதில் 2 லட்சம் ரூபா செலவாகும் என்றும் கூறப்படுகின்றது. மிகுதி உள்ள 6 லட்சம் ரூபாவில் இயந்திரம் மூலமான பணிகளை 4 அல்லது 5 தினங்களே மேற்கொள்ளலாம். அதை செப்ரெம்பர் மாதத்திலும் செய்ய முடியும். எமது நிலையைக் கருத்தில் கொண்டு குளத்து நீரை வீண் விரயம் செய்யாது வாழ்வாதாரத்துக்கு உதவ வேண்டும்"- என்றனர்.

"குளச் சீரமைப்புக் குறித்து விவசாயிகளுக்கு தகவல் வழங்கப்பட்டது. குளப் புனரமைப்புக்கு ஒதுக்கப்பட்ட நிதி மூலம் குறுகிய நாள்களில் பணியை நிறைவு செய்ய முடியும். அதனாலும், விவசாயிகள் ஏற்கனவே பயிரிட்டுள்ளதாலும் இது தொடர்பில் உரிய கவனம் செலுத்தப்பட்டு மாற்று ஏற்பாடுகள் செய்யப்படும். மாற்று ஏற்பாடுகளை மேற்கொள்ள குறித்த பிரதேச விவசாயிகள் அதற்கான ஆதாரங்களை உடன் சமர்ப்பிக்க முடியும்"- என்று மாவட்ட செயலாளர் தெரிவித்தார். (ந-10)

# பிணை வழங்குமாறு அழுத்தம் பிரயோகிப்பது சட்ட விரோதம்

## யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி இளஞ்செழியன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக.1

"நாடளாவிய ரீதியில் க.பொ.த. உயர்தரப் பரீட்சை ஆரம்பிக்கப்படுகின்ற சூழ்நிலையில் போதைப் பொருள் வழக்குகளில் பிணை வழங்குவது பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் அமைதியைக் கெடுத்துவிடும். உண்ணாவிரதம் இருந்து பிணை வழங்கக் கோரியும் அழுத்தம் கொடுப்பது சட்டவிரோதம்".

இவ்வாறு யாழ்.மேல்நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் தெரிவித்தார்.

போதைப் பொருள் கடத்தல் குற்றச்சாட்டில் விளக்கமறியலில் உள்ள ஒருவருக்குப் பிணை கோரி தாக்கல் செய்யப்பட்ட மனு மீதான விசாரணையில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தெரிவித்ததாவது:

சட்டம் மாணவர்களுக்கு உரிய பாதுகாப்பை வழங்குவதற்குத் தனது கடமையைக் கட்டாயம் செய்ய வேண்டும். மாணவர்கள் அமைதியாகவும் சுதந்திரமாகவும் பரீட்சை எழுதுவதற்கு களம் அமைத்துக் கொடுக்க வேண்டியது நீதிபதிகளதும், சட்டத்தை நடைமுறைப்படுத்துகின்ற பொலிஸாரதும் கடமையாகும்.

பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களை நோக்கி போதைப் பொருள் கடத்தல் காரர்கள் மற்றும் போதைப் பொருள் விற்பனை செய்பவர்களால் போதை வஸ்துக்கள் நகர்த்தப்படக் கூடிய சந்தர்ப்பம் உண்டு. பரீட்சை நிலையங்களுக்கு அருகில் போதை வஸ்து விற்பனைகள் ஆரம்பிக்கப்படலாம். அதனால் மாணவர்களின் ஒரு பகுதியினர் பாதிக்கப்படக்கூடிய ஆபத்து காணப்படுகின்றது.

போதைப் பொருள் கட்டளைச் சட்டத்தை உருவாக்கிய சட்டவாக்க சபையின் நோக்கத்தை நீதிமன்றம் புரிந்து கொண்டு பிணை வழங்க வேண்டும். சமுதாயத்தைக் காப்பாற்றுவதற்காகவே, போதைப் பொருள் கட்டளைச் சட்டத்தில் போதைப் பொருள் சம்பந்தமான வழக்குகளில் பிணை கோரிக்கை மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட வேண்டும் என சட்டத்தில் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள போதைப் பொருள் வழக்குடன் தொடர்புடைய கைதிகள் உண்ணாவிரதம் இருந்து நீதிமன்றங்களுக்கு அழுத்தம் கொடுக்க முடியாது.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட தமிழ் கைதிகள் உண்ணாவிரதம் இருக்கின்றார்கள் என்பதற்கும் சமூக விரோதக் குற்றச் செயல்கள் புரிந்தனர் என்று குற்றம் சாட்டப்பட்ட போதைப் பொருள் விளக்கமறியல் கைதிகள் உண்ணாவிரதம் இருப்பதற்கும் பல வித்தியாசங்கள் உள்ளன.

யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி இளஞ்செழியன் பிணை மனுக்களை நிராகரிக்கின்றார் எனக்கூறியேகைதிகள்உண்ணாவிரதம் இருக்கின்றனர் என்று நீதிமன்றத்துக்கு எழுத்து மூலம் அறிவித்திருந்ததன் மூலம் உண்ணாவிரதம் இருந்து பிணை வழங்குமாறு கோரி நீதிமன்றத்துக்கு அழுத் தம் கொடுப்பது சட்டவிரோதமாகும். அது விபரீதமான விளைவுகளையே ஏற்படுத்தும்- என்றார்.

இந்தப் பிணை மனு தொடர்பான கட்டளை ஒத்திவைக்கப்பட்டது. (ந-4)

# பிரதேச செயலாளர் பிரிவுகளில் சில நடப்பாண்டில் 10 வீத நிதியே செலவு

## அபிவிருத்தியில் பாதிப்பு ஏற்படலாம் என்று முல்லை. கிராம அபிவிருத்தி அமைப்புகள் கவலை

யாழ்ப்பாணம், ஓக.1

முல்லைத்தீவு மாவட்டத்தில் நடப்பாண்டில் 7 மாதங்கள் முடிந்துள்ளபோதும், சில பிரதேச செயலாளர் பிரிவுகளில் 10 சதவீத நிதியே செலவு செய்யப்பட்டுள்ளது. அதனால் தமது பிரதேசத்தின் அபிவிருத்தி பாதிப்படையலாம் என்று கிராம அபிவிருத்தி அமைப்புகள் கவலை தெரிவித்தன.

2016ஆம் ஆண்டில் அனுமதிக்கப்பட்ட நிதியில் 7 மாத நிறைவில் செலவு செய்யப்பட்ட நிதி, சில பிரதேச செயலாளர் பிரிவுகளில் 40 வீதத்தைத் தாண்டியுள்ளது. சில பிரதேச செயலாளர் பிரிவுகளில் 10 வீதத்தைக் கூட இதுவரை எட்டவில்லை. ஆண்டு இறுதியில் பணம் திறைசேரிக்கு அல்லது ஏனையை பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கு மாற்றப்படக்கூடிய ஆபத்து உள்ளது என்று கிராம அபிவிருத்தி அமைப்புகள் சுட்டிக்காட்டின.

இது தொடர்பில் முல்லைத்தீவு மாவட்டத்தின் பிரதேச செயலாளர்கள் தெரிவித்ததாவது:

மாவட்டத்தின் 5 பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் வீட்டுத் திட்டத்துக்கே அதிக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. சில பிரதேச செயலாளர்களுக்கு அவை முன்கூட்டியே கிடைத்தன. சிலருக்கு காலம் பிந்திக் கிடைத்தன. அனைத்துப் பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கும் கிடைத்தன. கிடைத்தவுடன் அவை உடனடியாக பயனாளிகளுக்கு விடுவிக்கப்படுகின்றன. காலம் தாழ்த்தப்பட்டமைக்கு நிர்வாகத் தவறு காரணமல்ல. அனைத்துப் பிரதேச செயலாளர் பிரிவுகளின் பயனாளிகளையும் மாவட்டத் திட்ட அதிகாரிகள் நேரில் சென்று பரிசீலித்து, அந்த ஒழுங்கின்படி ஒதுக்கீடுகள் அனுமதிக்கப்பட்டன - என்றனர்.

இது குறித்து மாவட்ட செயலாளர் தெரிவித்ததாவது:

பயனாளிகள் பட்டியலில் கடந்த காலங்களில் ஏற்பட்ட சிலத்வறுகள் சுட்டிக்காட்டப்பட்டன. அது மீண்டும் இடம்பெறாத வகையில் பிரதேச ரீதியில் பரிசீலனை மேற்கொள்ளப்பட்டது. ஒவ்வொரு பிரிவின் பரிசீலனை முடிந்தவுடன் அவர்களுக்கான அனுமதி வழங்கப்பட்டது. அதனால் ஒரு மாத இடைவெளி ஏற்பட்டது. தற்போது சகல பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கும் பட்டியல் அனுப்பப்பட்டுள்ளன. நிதி நடவடிக்கைகள் வேகம் பெறும். அனைத்துப் பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கு ஒதுக்கப்பட்ட நிதி டிசெம்பர் மாதத்துக்குள் உரிய முறையில் செலவு செய்யப்படும் - என்றார். (ந-10)

# சுண்டிக்குளத்தில் தங்கியிருந்த தென்பகுதி மீனவர்களிடம் கசிப்பு

## பளை பொலிஸாரின் தேடுதலில் சிக்கியது

கிளிநொச்சி, ஓக.1

சுண்டிக்குளத்தில் தங்கி நின்று மீன்பிடியில் ஈடுபடும் தென்பகுதி மீனவர்களிடம் இருந்து 33 போத்தல் கசிப்பு கைப்பற்றப்பட்டது. அவற்றை வைத்திருந்தார்கள் என்ற குற்றச்சாட்டில் 4 பேர் கைது செய்யப்பட்டனர்.

இவ்வாறு பளை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஏ.ராஜபக்ச தெரிவித்தார்.

கைது செய்யப்பட்டவர்கள் கிளிநொச்சி நீதிவான் மன்றில் முற்படுத்தப்பட்டனர். அவர்களுக்கு ஒரு லட்சத்து 15 ஆயிரம் ரூபா தண்டமும், சமூகப் பணிக்கான உத்தரவும் விதிக்கப்பட்டது என்றும் அவர் குறிப்பிட்டார்.

பளைப் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து கடந்த வாரம் சுண்டிக் குளத்தில் தேடுதல் நடத்தப்பட்டது. அதன்போதே கசிப்பு கைப்பற்றப்பட்டது. கைது செய்யப்பட்டவர்களில் இருவர் தமிழ் பேசுவோராகவும், இருவர் சிங்களம் பேசுவோராகவும் காணப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்கள் கடந்த வெள்ளிக்கிழமை மன்றில் முற்படுத்தப்பட்டனர்.

வழக்கை விசாரித்த நீதிவான் ஏ.ஏ.ஆனந்தராஜா 20 போத்தல் கசிப்பு வைத்திருந்த மீனவருக்கு 70 ஆயிரம் ரூபா தண்டமும், 50 நாள்கள் சமூக சேவையில் ஈடுபடுமாறும், 6 போத்தல் கசிப்பு வைத்திருந்த மீனவர்கள் இருவருக்கு தலா 20 ஆயிரம் ரூபா தண்டமும், 15 நாட்கள் சமூக சேவையில் ஈடுபடுமாறும், கால் போத்தல் கசிப்பு வைத்திருந்த மீனவருக்கு 5 ஆயிரம் ரூபா தண்டமும் விதித்துத் தீர்ப்பளித்தார் என்று பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார். (ந-21,ரி3)

# அரிவு இயந்திரம் வெட்டி 10 வயதுச் சிறுமி காயம்

கிளிநொச்சி, ஓக.1

அரிவு இயந்திரத்தின் இயக்கியை அழுத்தியபோது இயந்திரம் வெட்டியதில் 10 வயதுச் சிறுமியின் முகம் பலத்த காயத்துக்குள்ளானது. இந்தச் சம்பவம் நேற்று தர்மபுரத்தில் நடந்தது.

இந்த ஆண்டு புலமைப் பரீட்சையில் தோற்றவுள்ள ஆர். மகிழினி என்ற சிறுமியே காயமடைந்தார்.

குறித்த சிறுமி நேற்று இடம்பெற்ற வகுப்புக்குச் சென்று வீடு திரும்பியுள்ளார். வீட்டில் மின் இணைப்பில் பொருத்தப்பட்டிருந்த அரிவு இயந்திரத்தை அவதானித்த சிறுமி அதன் இயக்கியை அழுத்தியுள்ளார். இயங்கிய அரிவு இயந்திரம் குறித்த சிறுமியின் முகம் மற்றும் மூக்குப் பகுதிகளை பலமாக தாக்கியுள்ளது. பாதிப்படைந்த சிறுமி கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார். (ந-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதநீர் விற்பனை அமோகம்

யாழ்ப்பாணம், ஓக. 1
நல்லூரில் உள்ள சங்கிலியன் பூங்காவில் இடம்பெற்ற பனை அபிவிருத்தி கண்காட்சியின்போது பத நீர் விற்பனை அமோகமாக நடைபெற்றது.
இந்தக் கண்காட்சிக் கூடத்தில் அமைக்கப்பட்ட மூன்று பனம் பொருள் விற்பனை நிலையங்களில் பதநீர் விற்பனை செய்யப்பட்டது.
கண்காட்சியில் கலந்து கொண்ட மக்கள் உள்ளூர் உற்பத்தியான பதநீரை விரும்பி பருகிக் கொண்டனர்.
தினமும் சுமார் 400 போத்தலுக்கும் மேற்பட்ட பதநீர் விற்கப்பட்டது என்று வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் தலைவர் என்.கணேசன் தெரிவித்தார்.
இந்த பதநீர் குடாநாட்டில் உள்ள சகல பனம் பொருள் விற்பனைநிலையங்களிலும் விற்பனை செய்யப்படுகின்றன. குடாநாட்டுக்கு வரும் உள்ளூர் மற்றும் வெளியூர் சுற்றுலாப் பயணிகளும் இந்தப் பதநீரை விருப்பத்துடன் பெற்று பருகிச் செல்கின்றனர். (ற-17)

## நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், ஓக.1
'சேற்றில் பூத்த தாமரை' என்னும் நூல் அறிமுக விழா எதிர்வரும் 10 ஆம் திகதி முற்பகல் 11 மணிக்கு ஆர்.பிரேமதாச மண்டபத்தில் நடைபெறவுள்ளது.
பூநகரியைச் சேர்ந்த நற்குணம் தயான் என்பவரது 11 ஆவது பதிப்பாக இந்த நூல் வெளியிடப்படுகிறது.
எதிர்வரும் 15 ஆம் திகதி நண்பகல் 1 மணிக்கு வீரசிங்கம் மண்டபத்தில் நூல் வெளியீட்டு விழா இடம்பெறவுள்ளது. (ற-ரி)

# தென்னை ஆராய்ச்சி நிலையம் வடக்கில் உருவாக்க வேண்டும்

### யாழ்.மாவட்ட தென்னை உற்பத்தியாளர் சங்கத் தலைவர் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஓக.1
தென்பகுதி தென்னம் செய்கையாளர்களின் நலன் கருதி லுணுவிலவில் அமைக்கப்பட்டுள்ள தென்னை ஆராய்ச்சி நிலையம் போன்று வடபகுதி தென்னம் செய்கையாளர்களின் நலன்கருதி பளையில் தென்னை ஆராய்ச்சிநிலையம் அமைக்கப்பட வேண்டும். அதனால் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா மாவட்டங்களைச் சேர்ந்த தென்னம் செய்கையாளர்கள் மற்றும் தென்னம் தோட்ட உரிமையாளர்கள் பயன்பெறமுடியும்.
இவ்வாறு யாழ்.மாவட்ட தென்னை உற்பத்தியாளர் சங்கத் தலைவர் பேராசிரியர் சு.மோகனதாஸ் கோரினார்.
நேற்றுமுன்தினம் கொழும்பு இலங்கை மன்றக் கல்லாரியில் நடைபெற்ற தென்னை உற்பத்தியாளர் சங்கத்தின் 22 ஆவது பொதுக் கூட்டத்தில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது-
உரத்துக்கு வழங்கப்பட்ட மானிய உதவி நிறுத்தப்பட்டுள்ளது. போரால் அழிவடைந்த தென்னம் தோட்டங்களை மேம்படுத்த சேதனப் பசளை பெற உதவி வழங்க வேண்டும்.
தென்னை மரங்களை தாக்கும் செவ்வண்டு, கருவண்டு போன்றவற்றால் ஏற்படும் தாக்கம் உட்பட ஏனைய நோய்களைத்தடுக்க பரந்த ரீதியில் தடுப்பு முறைகளை விரிவுபடுத்த வேண்டும்.
போரால் அழிவடைந்த தென்னம் தோட்டங்கள் போதிய உதவிகள் கிடைக்காததால் இன்னமும் புனரமைக்கப்படாது பற்றைக் காடுகளாக உள்ளன. அவற்றை இனங்கண்டு தென்னை மீள் நடுகைத் திட்டங்களை மேற்கொள்ள காணிகளின் உரிமையாளர்களுக்கு மானிய உதவி வழங்கப்படல் வேண்டும்- என்றார்.
கூட்டத்தில் கலந்து கொண்ட பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் நவீன் திஸாநாயக்கா தெரிவித்ததாவது-
வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அழிவடைந்த தென்னம் தோட்டங்களை மேம்படுத்த அரசால் 200 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. தென்னம் தோட்ட அபிவிருத்தி தொடர்பாக வடக்கு, கிழக்கு மாகாண முதலமைச்சர்களுடன் கலந்துரையாடியுள்ளேன். பிரதமருடன் இந்த விடயம் தொடர்பாக கலந்துரையாடி வருகின்றேன்.- என்றார். (ற-9)



வடமராட்சி லயன்ஸ் கழகத்தின் புதிய ஆண்டுக்கான உத்தியோகத்தர்களின் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. அதில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட 308 பி 12 ஆவது மாவட்ட ஆளுநர் லயன் தேவா பீற்றரை வடமராட்சி லயன்ஸ் கழகத்தின் முன்னாள் தலைவரும் தற்போதைய மாவட்ட இணைப்பாளருமான எம்.தர்மலிங்கம் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார். (ற-108)

## பனம் கைப்பணி பயிற்சிகள் நெடுந்தீவில் வெகு விரைவில்

யாழ்ப்பாணம், ஓக. 1
பனை அபிவிருத்திச் சபை நெடுந்தீவில் பனம் கைப்பணி பயிற்சி நிலையம் ஒன்றை விரைவில் திறக்கவுள்ளது. நெடுந்தீவு பிரதேச செயலகத்துக்கு அருகில் உள்ள கட்டடத்தில் பயிற்சி நிலையம் ஆரம்பிக்கப்படவுள்ளது. பனம் கைப்பணி பயிற்சியை பெறுவதற்கு ஐம்பது வரையிலான பயனாளிகள் தற்போது விண்ணப்பித்துள்ளனர்.
பனம் ஓலை, தும்புகளில் இருந்து கைப்பணிப் பொருள்களை எவ்வாறு தயாரிப்பது என்பது குறித்த பயிற்சிகள் வழங்கப்படும் என்று பனை அபிவிருத்திச் சபையின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.
பனம் பொருள்களை அதிகளவில் உற்பத்தி செய்யும் இந்தப் பிரதேசத்தில் பனம் கைப்பணியை ஊக்குவிப்பதற்கு பனம் அபிவிருத்திச் சபை நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. (ற-17)

# கைத்தொழில் முயற்சிகளை ஆரம்பித்தால் ப.நோ.கூ. சங்கங்கள் இலாபமடைய முடியும்

### யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் சுட்டிக்காட்டு

சாவகச்சேரி, ஓக.1
திறந்த பொருளாதார கட்டமைப்பால் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் நலிவடைந்துள்ளன. கூட்டுறவுச் சங்கங்கள் கைத்தொழில்கள் மூலம் புதிய உற்பத்திகளை மேற்கொண்டால் நட்டம் ஏற்படும் சந்தர்ப்பங்களைத் தவிர்க்கலாம்.
இவ்வாறு சுட்டிக்காட்டினார் யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பொ.மோகன்.
சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க ஊழியர் நலன்புரி சங்கத்தின் ஒன்றுகூடலும், கௌரவிப்பு நிகழ்வும் அண்மையில் நடைபெற்றது. அதில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே உதவி ஆணையாளர் இவ்வாறு கூறினார்.
அவர் தெரிவித்ததாவது-
இப்போது மதிய உணவு என்பது கடைச் சாப்பாடு என்னும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. குடும்பத்தில் இருவரும் உழைப்பதால் மதிய உணவு சமைப்பதற்கு நேரமில்லை. மாலையிலும், காலையிலும் வீடுகளில் உணவுப் பொருள்கள் தயாரிக்கக்கூடிய அரிசி உற்பத்திப் பொருள்களை சுகாதாரமான முறையில் தயாரித்து வழங்க சங்கங்கள் முன்வர வேண்டும். அதனால் சிலருக்கு வேலை வாய்ப்புகளையும் வழங்கலாம். அவ்வாறான பொருள்களை விற்பனை செய்வதால் நலிவடையும் நிலையில் உள்ள சங்கங்கள் முன்னேறவாய்ப்புண்டு.
பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் தற்போது பல்வேறு தொழில்களை ஆரம்பித்துள்ளதால் இலாபத்தில் இயங்குகின்றன. தினமும் உற்பத்தி செய்யப்படும் கள் விற்பனை செய்யப்படாத நிலையில் அவை நிலத்தில் ஊற்றப்பட்டது. தொழிலில் ஈடுபடுவோரின் கூட்டுறவுத் தன்மையால் கூட்டுறவு அமைப்பு உருவாக்கப்பட்டு ஆரம்பத்தில் கள் மட்டும் விற்பனை செய்யப்பட்டது. பின்னர் படிப்படியாக பனை வெல்லம், மதுசாரம் போத்தல்கள் என புதிய தொழில்கள் ஆரம்பிக்கப்பட்டு தற்போது இலாபத்தில் இயங்குகின்றன.
அவ்வாறான செயற்றிட்டங்களை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் உருவாக்க வேண்டும். வியாபாரப் போட்டியால் சங்கக் கிளைகளில் நுகர்ச்சிப் பொருள்களின் கொள்வனவு குறைந்துள்ளது என்று சங்கங்கள் தெரிவிக்கின்றன. ஒவ்வொரு கிளைக்கும் உறுப்பினர்கள் உள்ளனர். அவர்கள் அந்தப் பகுதி மக்களுடன் கலந்துரையாடி நுகர்ச்சியை அதிகரிக்க வேண்டும். பெயரளவில் கிளைக் குழு உறுப்பினர் என கூறித் திரிவதை விடுத்து கிளையின் வளர்ச்சிக்கு மக்களின் பங்களிப்பை வழங்கச் செய்வதில் ஆர்வத்துடன் செயற்படவேண்டும்.
சங்கங்களால் நடத்தப்படும் கிராமிய வங்கிகளின் செயற்பாடுகள் பற்றி கிளைக் குழு உறுப்பினர்கள் பொதுமக்களுக்கு தெளிவுபடுத்தவேண்டும். சேமிப்பு பழக்கத்தில் முன்னிலையில் யாழ். மாவட்டம் காணப்பட்டது. இப்போது நடமாடும் வியாபார வாகனங்களால் சேமிப்பு என்பதைக் காண முடியாதுள்ளது. கிராமிய வங்கியின் செயற்பாட்டால் கிடைக்கும் நன்மைகள் குறித்து சங்க நிர்வாகத்தினரும், பணியாளர்களும், கிளைக்குழு உறுப்பினர்களும் மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தினால் லாபத்துடன் சங்கங்கள் இயங்க முடியும்.- என்றார். (ற-9)

## நல்லூர் ஆலய வீதிகளில் பந்தல் அமைக்கும் பணிகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஓக.1
நல்லூர் கந்தசுவாமி கோயில் வருடாந்த மகோற்சவத்தை முன்னிட்டு ஆலய வீதிகளில் பந்தல்கள் அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
ஆலயத்துக்கு முன்பாகச் செல்லும் பருத்தித்துறை வீதி மற்றும் ஆலயப் பின் வீதியான கோயில் வீதி என்பனவற்றில் பந்தல்கள் அமைக்கும் பணிகள் நடைபெறுகின்றன. அதனைவிட அரசடி வீதி மற்றும் குடாநாட்டில் ஏனைய பகுதிகளிலும் பக்தர்களின் வசதி கருதி தண்ணீர்ப்பந்தல்கள் அமைக்கப்படவுள்ளன. (ற-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டு எதிரணியின் நடைபவனியால் எடைதான் குறையும் அரசு கலையாது

## ஹிருணிகா பிரேமச்சந்திர கூறுகிறார்



கொழும்பு, ஓக. 1
ஒன்றிணைந்த எதிர்கட்சியினரால் முன்னெடுக்கப்பட்டுள்ள நடைபவனியால் உடல் எடையை மாத்திரமே குறைக்க முடியுமே தவிர அரசை ஒன்றும் செய்ய முடியாது. இவ்வாறு தெரிவித்தார் நாடாளு மன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திர.

கொலன்னாவவையில் நடந்த நிகழ்வொன்றில் கருத்துத் தெரிவிக்கும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:
கண்டியிலிருந்து கொழும்பை நோக்கிய நடைபவனியால் எதுவும் மாற்றமடைய போவதில்லை. அதற்காக அரசும் பீதியடைவதற்கும் ஒன்றுமில்லை.

நடைபவனியால் ஜனாதிபதியோ பிரதமரோ தங்களது செயற்பாடுகளை மாற்றிக்கொள்ளப் போவதில்லை. இன்னும் 5 வருடங்களுக்கு தேசிய அரசும் பிளவுப் படப்போவதும் இல்லை- என்றார். (ற-4)

# எங்கிருந்து நடந்து வந்தாலும் ஆட்சிக்கு வர முடியாது மகிந்த

## அமைச்சர் பழனி திகாம்பரம் தெரிவிப்பு



கொழும்பு, ஓக. 1
ஆட்சியை குறுக்கு வழியில் கைப்பற்ற முன்னால் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச நாட்டின் எந்தப் பகுதியிலிருந்து நடைபவனி சென்றாலும் இன்னும் நான்கு வருடங்களுக்கு நல்லாட்சி அரசை அசைக்க முடியாது.

இவ்வாறு மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு வசதி மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சர் பழனி திகாம்பரம் தெரிவித்தார்.

மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு வசதி மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சின் நிகழ்வில் உரையாற்றும்போது இவ்வாறு கூறினார்.

அவர் தெரிவித்ததாவது:
தோட்ட தொழிலாளர்களின் சம்பள பிரச்சினையில் மக்கள் எமக்கு வழங்கிய ஆணைக்கு இணைவாக முதல் கட்டமாக 2 ஆயிரத்து 500 ரூபா இடைக்கால கொடுப்பனவைபெற்று, வெற்றி கண்டுள்ளோம்.

> தேயிலையை தோட்டங்களை அழிக்க விடமாட்டேன் என சொன்னார். இவ்வாறெல்லாம் சொன்ன அவர் மலையக மக்களால் புறக்கணிக்கப்பட்டு, நடைபழக நடைபவனி செல்கின்றார்.

மாற்று கட்சியின் மூத்த தலைவர் ஒருவர் அநாகரிகமாக பேசி, ராதா, திகா, மனோ மூவரும் ஒன்று சேர்ந்து, நாமம் போடப் போகின்றார்கள் என்று சொல்லியுள்ளார். ஆனால், எவர் நாமம் போடப்போகின்றார்கள் என்பது விரைவில் தெரியவரும்.

7 பேர்ச்சஸ் காணி தனி வீடு என்பது நல்லாட்சியில் நாம் பெற்ற உரிமை. இதை எவரும் கொச்சைப்படுத்தவேயில்லை. மலையக மாற்றத்துக்கான சக்தியாக இவைகளை நாம் பெற்றுள்ளோம்.

முன்னால் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச வரவு - செலவுத் திட்ட காலத்தில் 50 ஆயிரம் வீடுகள் மலையகத்துக்கு தருவேன். தேயிலையை தோட்டங்களை அழிக்க விடமாட்டேன் என சொன்னார்.

இவ்வாறெல்லாம் சொன்ன அவர் மலையக மக்களால் புறக்கணிக்கப்பட்டு, நடைபழக நடைபவனி செல்கின்றார். குறுக்கு வழியில் செய்த ஊழல்களை மறைக்க ஆட்சியைக் கைப்பற்ற நினைக்கின்றார் - என்றார். (ற-4)

# பன்னாட்டு முதலீட்டாளர்கள் முதலீடு செய்வதற்கு ஆர்வம்

## கூட்டு எதிரணி குழப்ப முயல்கிறது என்கிறார் அமைச்சர் சஜித்

கொழும்பு, ஓக. 1
பன்னாட்டு முதலீட்டாளர்கள் இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்வதற்கு எதிர்பார்த்துள்ளனர். இலங்கை தற்போது விரைவான வளர்ச்சியடைந்து வருகிறது.

இவ்வாறு அமைச்சர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

ஹம்பாந்தோட்டையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:
எதிர்காலத்தில் பல தொழில் வாய்ப்புக்கள் உருவாகும். கூட்டு எதிர்க்கட்சி இவை அனைத்தையும் இல்லாமல்செய்வதற்கு முயற்சிகள் மேற்கொள்கின்றது.

நடைபவனி மூலமாக, இந்த நாட்டுக்கு வரும் முதலீட்டாளர்களின் எண்ணங்களை திரிவுபடுத்துவதற்கு கூட்டு எதிர்க்கட்சியினர் முயல்கின்றனர் - என்றார்.(ற-4)

# கணவனைக் கோடாரியால் வெட்டிக் கொன்றவர் கைது

கொழும்பு, ஓக.1
கணவனைக் கோடாரியால் வெட்டிக்கொலை செய்த குற்றச்சாட்டில் பெண்ணொருவர் கைது செய்யப்பட்டார். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு அம்பாறை தம்பிலுவில் இடம்பெற்றது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

திருக்கோவிலைச் சேர்ந்த இரு பிள்ளைகளின் தந்தையான (வயது- 42) என்பவரே கொலை செய்யப்பட்டார்.

குறித்த நபர் வேறு ஒரு பெண்ணுடன் தொடர்பு வைத்தார் என்பது தொடர்பில் ஏற்பட்ட வாய்த்தர்க்கமே மோதலுக்குக் காரணம் என்று கூறப்படுகின்றது.

மோதல் முற்றியதில் மனைவி வீட்டில் இருந்த கோடாரியால் கணவரைத் தாக்கியுள்ளார். அதில்கணவர்கழுத்துவெட்டப்பட்டுப் படுகாயமடைந்தார். திருக்கோவில் மாவட்ட வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்லப்பட்ட நிலையில் உயிரிழந்தார் என்று பொலிஸ் விசாரணையில் தெரியவந்தது.

இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (ற-4)

# விசேட தேவையுடையோர் இலங்கையில் 26 இலட்சம்

கொழும்பு, ஓக. 1
இலங்கையில் 26 இலட்சம் பேர் விசேட தேவையுடையவர்களாக இருக்கின்றனர். இவர்களில் 57.7 வீதமானவர்கள் ஆண்கள். 42.3 வீதமானவர்கள் பெண்கள்.

இவ்வாறு சமூக சேவைகள் திணைக்களத்தின் கிழக்கு மாகாண பணிப்பாளர் என். மணிவண்ணன் தெரிவித்தார்.

விசேட தேவையுடையவர்கள்; குறித்து தெளிவுட்டும் மாநாட்டில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:
2012 ஆண்டில் அரசால் மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பின் பிரகாரம் 17 இலட்சம் பேர் விசேட தேவையுடையவர்கள் இருந்தனர்.

வீதி விபத்துக்கள், தொற்றா நோய்கள், வயோதிபம் போன்ற காரணிகளால் விசேட தேவையுடையவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது - என்றார். (ற-4)

# நிலக்கரி மோசடி அறிக்கை மின்சக்தி அமைச்சரிடம்

கொழும்பு, ஓக. 1
நிலக்கரி கொள்வனவு தொடர்பில் இடம்பெற்றது என்று கூறப்படும் முறைகேடுகள் சம்பந்தமாக விசாரணை செய்ய நியமிக்கப்பட்டிருந்த குழுவின் அறிக்கை மின்சக்தி அமைச்சரிடம் சமர்ப்பிக்கப்படவுள்ளது என்றும் மின்சக்தி அமைச்சு இதனைத் தெரிவித்தது.

குறித்த விசாரணை அறிக்கை அமைச்சர் ரஞ்ஜித் சியம்பலபிட்டியவிடம் சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர், நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படும் என குறிப்பிடப்படப்பட்டது.

நிலக்கரி கொள்வனவு தொடர்பில் இடம்பெற்றது என்று கூறப்படும் மோசடிகள் சம்பந்தமாக ஆராய்வதற்கு அண்மையில் மூவர் அடங்கிய குழு ஒன்று நியமிக்கப்பட்டது. (ற-4)

# யால தேசிய சரணாலயம் மூடப்படும்

கொழும்பு, ஓக. 1
யால தேசிய வனவிலங்கு சரணாலயம் எதிர்வரும் செம்ரெம்பர் மாதத்திலிருந்து தற்காலிகமாகமூடப்படவுள்ளது என்று வனவிலங்கு பாதுகாப்பு திணைக்களம் அறிவித்தது.

செப்ரெம்பர் மாதம் முதலாம் திகதியிலிருந்து ஒக்ரோபர் மாதம் 15 ஆம் திகதிவரையில் மூடப்பட்டிருக்கும் என்று அறிவிக்கப்பட்டது. சரணாலயத்தில் உள்ள வன விலங்குகளின் அடிப் படை வசதிகளை மேம்படுத்துவதற்காக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற-4)

# வரகாபொல பொலிஸாரால் கைது

கொழும்பு, ஓக. 1
சிறிலங்கா சுதந்திர சேவையாளர் சங்கத் தலைவர் வரகாபொல பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார்.

பாத யாத்திரை மேற்கொள்ளும் கூட்டு எதிர்க்கட்சியினர் முன்னாள் அமைச்சர் தர்மசிறி சேனாநாயக்கவின் உருவச் சிலைக்கு மலரஞ்சலி செலுத்தினர். அதன்போது அரச வாகனங்கள் இரண்டைப் பயன்படுத்தி கூட்டு எதிர்க்கட்சியினரின் நடைபவனி, அலங்காரப் பணிகளை மேற்கொண்டார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

விமான நிலைய மற்றும் விமான சேவை சங்கத்துக்கு சொந்தமான வாகனங்கள் அனுமதியின்றி பயன்படுத்தப்பட்டன என்று சந்தேக நபருக்கு எதிராக குற்றஞ்சுமத்தப்பட்டது. (ற-4)

# பல்கலை கல்விசாரா ஊழியரது போராட்டத்தில் நியாயமில்லை

## அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல கூறுகின்றார்



கொழும்பு, ஓக.1
பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களின் 7 கோரிக்கைகளில் 6 கோரிக்கைகளுக்கு தீர்வு வழங்கப்பட்டுள்ளது. எனினும் அவர்கள் வேலைநிறுத்தப் போராட்டத்தை முன்னெடுக்கிறார்கள். இது நியாயமற்ற போராட்டமாகும்.

இவ்வாறு உயர்கல்வி மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

கண்டியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கருத்து வெளியிட்ட போதே இவ்வாறு தெரிவித்தார்.

மாதாந்தக் கொடுப்பனவு மற்றும் தக்க ஓய்வூதியம் தொடர்பான 7 கோரிக்கைகளை முன் வைத்து, பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் வேலை நிறுத்த போராட்டம் நடத்துகின்றனர். இன்றுடன் 5 நாள்களாக வேலை நிறுத்த போராட்டத்தை முன்னெடுத்தனர்.

தமது கோரிக்கைகளுக்கு தீர்வு கிடைக்கவில்லை எனப் பல்கலைக்கழக தொழிற்சங்க ஒன்றிணைந்த குழுவின் தலைவர் தெரிவித்தார். (ற-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு கட்சிகள் ஒன்றிணையவேண்டும்

## காலத்தின் தேவையும் இதுவே என்கிறார் ஜனாதிபதி மைத்திரி



கொழும்பு, ஓக. 1
அதிகாரத்துக்காக மோகம் கொள்ளும் அரசியல் கலாசாரத்திற்கு முடிவுகட்டி, நாட்டைக் கட்டியெழுப்புவதற்காக எல்லா அரசியல் கட்சிகளும் ஒன்றிணைவது காலத்தின் தேவையாகும்.

இவ்வாறு தெரிவித்தார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.

நாடு முழுவதிலும் 3 ஆயிரத்து 100 கிலோ மீற்றர் பிரதேச வீதிகளை புனரமைப்புச் செய்யும் நிகழ்ச்சித் திட்டம் பொலநறுவையில் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந்த நிகழ்வில் ஜனாதிபதி கலந்து கொண்டார்.

இதன்போது அவர் தெரிவித்ததாவது:

மக்கள் வாக்குகளின் மூலம் தெரிவான மக்கள் பிரதிநிதிகளின் பொறுப்பு, கால்களில் கொப்பளங்கள் வரும் வரை வீதி வலம் வருவதல்ல. நாட்டைக் கட்டியெழுப்புவதற்காக ஒன்றிணைவதாகும்.

நாட்டின் எல்லா மாவட்டங்களுக்கும் சரிசமமான அபிவிருத்தியை ஏற்படுத்திக் கொடுத்து, நாட்டு மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு எந்தவொரு அரசும் செய்யாத வேலைத் திட்டங்கள் எமது ஆட்சிக் காலப் பகுதியில் நிறைவேற்றப்படும்.

ஜேர்மனி உட்பட உலகின் மிகவும் முன்னேற்றமடைந்த எல்லா நாடுகளிலும், பிரதான எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து ஆட்சி அமைத்துள்ளன. இதன் மூலமே அவர்களது நாட்டின் அபிவிருத்தியை ஏற்படுத்தியுள்ளார்கள்.

ஊழல் நிறைந்த ஆட்சியை தோற்கடித்து, தூய்மையான அரசை உருவாக்குவதற்கு நாட்டு மக்கள் உதவுவர் என்று எனக்கு நம்பிக்கையிருந்தது. இதனாலேயே கடந்த ஆட்சியிலிருந்து விலகி, ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டேன்.

நாட்டுக்குத் தேவையான புதிய சமூக, பொருளாதார மற்றும் அரசியல் மாற்றத்தை பெற்றுக் கொடுப்பதற்கு மக்களின் ஆசீர்வாதம் இருக்கின்றது - என்றார். (வ-5)

> "மக்கள் வாக்குகளின் மூலம் தெரிவான மக்கள் பிரதிநிதிகளின் பொறுப்பு, கால்களில் கொப்பளங்கள் வரும் வரை வீதி வலம் வருவதல்ல. நாட்டைக் கட்டியெழுப்புவதற்காக ஒன்றிணைவதாகும்."

## பண்டாரநாயக்க சமாதிக்கு பாதுகாப்பு

கொழும்பு, ஓக. 1
பண்டாரநாயக்க சமாதிக்கு பாதுகாப்பு வழங்குமாறு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க பொலிஸ் மா அதிபரிடம் வேண்டுகோள் விடுத்தார்.

அதையடுத்து ஹொரகொல்லயிலுள்ள பண்டாரநாயக்க சமாதி வரலாற்றில் முதல் தடவையாக நேற்று மூடப்பட்டு பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்பட்டது.

கூட்டு எதிரணியின் பாதயாத்திரை நேற்று ஹொரகொல்ல பிரதேசத்தின் ஊடாகப் பயணித்தது. அதையடுத்தே இந்த ஏற்பாடு செய்யப்பட்டது. (ற-4)

## இந்திய அரசின் உயர்மட்டக் குழு வார இறுதியில் இலங்கை வரும்

கொழும்பு, ஓக. 1
இந்திய நடுவண் அரசின் உயர்மட்டக் குழு இந்த வார இறுதியில் இலங்கைக்கு வரவுள்ளது. அரசின் அழைப்பின் பேரில் வரும், இந்த உயர் மட்டக் குழுவினர் 3 நாள்கள் இலங்கையில் தங்கியிருப்பர்.

ஜனாதிபதி, பிரதமர் உள்ளிட்ட முக்கியஸ்தர்களைச் சந்தித்துக் கலந்துரையாடுவர்.

இலங்கை - இந்திய கூட்டு ஆணைக்குழுவில் தீர்மானிக்கப்பட்ட உத்தேச பொருளாதாரம் மற்றும் தொழில்நுட்ப கூட்டு ஒப்பந்தம் (எட்கா) தொடர்பாக இந்திய நடுவண் அரசின் உயர்மட்டக் குழுவினர் அவதானம் செலுத்தவுள்ளனர்.

பல்வேறு நெருக்கடிகளைச் சந்தித்துள்ள இலங்கை - இந்திய கூட்டு ஒப்பந்தம் இந்திய உயர் மட்டக் குழுவினரின் இலங்கைப் பயணத்தின் போது கூடிய கவனத்தில் கொள்ளப்பட உள்ளது.

எதிர்வரும் 11 மற்றும் 12ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள, மனித வள உச்சி மாநாட்டில் கலந்து கொள்ளும் நோக்கில் இலங்கை வரும் இந்திய உயர்மட்டக் குழுவுக்கு, தகவல் தொழில்நுட்ப, உள்ளூராட்சி நிர்வாகம் மற்றும் நகர அபிவிருத்தி மத்தியமைச்சர் கே.டி. ராமா ராவ்ஹோ தலைமை தாங்குகின்றார்.

உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் சர்வதேச தொழிலாளர் அமைப்புடன் இணைந்து மனிதவளஉச்சிமாநாட்டை அரசு ஏற்பாடு செய்துள்ளது. பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் உலக வங்கியின் பணிப்பாளர் கலாநிதி அமிட் றோர் ஆகியோர் விசேட உரையாற்றவுள்ளனர். (ற-4)

# சு. கட்சியின் கொள்கைகளை தாரைவார்க்க விடமாட்டோம்

## நாமல் ராஜபக்ச எம்.பி. ஆவேசம்



கொழும்பு, ஓக. 1
சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் கொள்கைகளை, ஐக்கிய தேசியக் கட்சிக்குத் தாரைவார்த்துக் கொடுப்பதாயின் குதிக்கால் தேயும் வரையல்ல, உயிர் பிரியும் வரை போராடுவோம்.

இவ்வாறு தெரிவித்தார் நாடாளுமன்ற உறுப்பினரான நாமல் ராஜபக்ச.

கூட்டு எதிர்க்கட்சியின் பாதயாத்திரை நிட்டம்புவ, ஹொரகொல்ல பண்டாரநாயக்க சமாதியை கடந்து சென்றபோது ஊடகங்களிடம் இவ்வாறு அவர் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க உட்பட குடும்பத்தினர் சிறிலங்கா சுதந்திரக் கட்சியை விட்டு வெளியேறியபோதும், எனது தந்தையான முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச கட்சியில் இருந்தார். நான் உட்பட அனைவரும் இன்றும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் கொள்கைகளையே கடைப்பிடிக்கின்றோம் - என்றார்.

நடைபவனி ஹொரகொல்ல பண்டாரநாயக்க சமாதியை கடந்து செல்லும்போது தாக்குதல் நடத்தப்படலாம் என்று முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க அச்சம் வெளியிட்டிருந்தார். விசேட பாதுகாப்பு வழங்க வேண்டும் என்று பொலிஸ் மா அதிபரிடம் வேண்டுகோள் விடுத்திருந்தார்.

அதற்கமைய வரலாற்றில் முதல் தடவையாக நேற்று சமாதியை மூடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டது. விசேட பாதுகாப்பு ஏற்பாடுகளும் வழங்கப்பட்டன.

நடைபவனியில் கலந்துகொண்ட மக்கள் பண்டாரநாயக்க சமாதியை தாண்டும்போது, கோசங்களை எழுப்பாமல், தலையில் கட்டப்பட்டிருந்த கவசங்களை கழட்டி அமைதியான முறையில் சென்றனர்.

அதேவேளை, மகிந்த சீராக ஆட்சி செய்திருந்தால் கால்தேயுமளவுக்கு நடக்க வேண்டியதில்லை என்று ஜனாதிபதி மைத்திரிபால தெரிவித்திருந்தார். (ற-4)

## தேசிய அரசின் ஒருவருடப் பூர்த்தி விழா

கொழும்பு, ஓக. 1
தேசிய அரசு உதயமாகி எதிர்வரும் 19 ஆம் திகதியுடன் ஒருவருடம் நிறைவடைகின்றது. அதைக் கொண்டாடுவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

எதிர்வரும் 19 ஆம் திகதி மாத்தறையில் நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. இந்த நிகழ்வில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உட்பட தேசிய அரசில் அங்கம் வகிக்கும் அமைச்சர்கள், அரசியல்வாதிகள் பங்கேற்கவுள்ளனர்.

அதில் தேசிய அரசின் ஐந்தாண்டு கால பொருளாதார திட்டமும், கொள்கைகளும் வெளியிடப்படவுள்ளன என்று அறிய முடிகின்றது. (ற-4)

# கொலைகாரர்கள் உடற்பயிற்சி செய்வதற்காகவே நடக்கின்றனர்

## நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவிப்பு



கொழும்பு, ஓக. 1
ஆயுதங்கள் கொள்வனவு செய்த கொலைகாரர்கள், உடற்பயிற்சிக்காகவே நடைபவனி செல்கிறார்கள். 11 வருடங்கள் ஆட்சியில் இருந்த மகிந்த அணியினர் மக்களுக்குச் சேவை செய்திருந்தால் இவ்வாறு நடைபவனி செல்லத் தேவையில்லை.

இவ்வாறு நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

இவர்கள் மக்களுக்குச் சேவை செய்யாது மோசடிகளையே மேற்கொண்டனர். ஆயுதங்களைக் கொள்வனவு செய்தவர்கள், வசீம் தாஜுதீன் கொலையுடன் தொடர்புடையவர்களே நடைபவனியில் ஈடுபட்டுள்ளனர் - என்றார். மகிந்த அணியின் பாதயாத்திரை தொடர்பில் கருத்துத் தெரிவித்த பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவன் விஜேவர்தன நடைபவனியில் தொண்டர்கள் நடைப்பயணமாகவும், தலைவர்கள் வாகனங்களிலும் செல்கின்றனர் - என்றார். (ற-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## தோட்ட மக்களுக்கான இடைக்கால கொடுப்பனவு எடுத்தியம்புவதென்ன?

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு 2500 ரூபா இடைக்காலக் கொடுப்பனவு வழங்கப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவது உண்மையில் வரவேற்கப்பட வேண்டியதொரு விடயம்.

பல வருடகாலமாக தோட்டத் தொழிலாளர்கள் தமது சம்பளத்தை அதிகரிக்கச் செய்வதற்காகப் போராடி வந்திருக்கிறார்கள். அந்தவகையில் மலையகத்தில் செயற்படும் பல்வேறு தொழிற்சங்கங்களும் குரல் கொடுத்துவந்துள்ளன. இருந்தபோதும் இந்த இடைக்காலக் கொடுப்பனவானது தங்களின் போராட்டம் மற்றும் அழுத்தங்களின் காரணமாகவே வழங்கப்படுவதாக சகல தொழிற்சங்கங்களும் கூறிக்கொள்கின்றன. இப்பொழுது வழங்கப்படவிருக்கும் கொடுப்பனவானது இடைக்காலத்துக்குரியது மட்டுமே. அதுவும் பெருந்தோட்ட முதலாளிமாரும் தோட்டத்துரைமாரும் மனம் உவந்து வழங்க முன்வந்ததன்று. பிரதம மந்திரி ரணில் விக்கிரமசிங்கவின் நேரடி பணிப்புரையின் பேரில் பெருந்தோட்ட நிர்வாகங்களுக்கு கடன்கள் வழங்கப்படுவதன் வாயிலாகவே வழங்கப்படவிருக்கின்றது.

இந்தக் கொடுப்பனவானது இரண்டு மாதத்துக்கு மட்டுமே என்று செய்திகள் கூறுகின்றன. முதலாளிமார் சம்மேளனத்துக்கும் பிரதான தொழிற்சங்கங்களுக்குமிடையில் நடைபெற்று வரும் பேச்சு வார்த்தைகளின் அடிப்படையிலேயே சம்பள உயர்வு நிரந்தரமாவது நிச்சயம் பெறும். அவ்வாறு கூட்டு ஒப்பந்தம் எப்போது நிறைவு பெறும் என்பது தெரியாமல் உள்ளது. இன்னும்பல மாதங்களுக்குப் பேச்சுவார்த்தை இழுபடுமானால் இடைக்காலக் கொடுப்பனவு இரண்டு மாதங்களுக்குள் முற்றுப் பெற்றுவிடும் அதனால் கூட்டு ஒப்பந்தம் விரைவில் கைச்சாத்திடப்படுவதற்கு தோட்ட முதலாளிமார் சம்மேளனம் அழுத்தம் கொடுக்கப்பட வேண்டும். அத்துடன் கூட்டு ஒப்பந்தம் கைச்சாத்திடப்படும் வரை இடைக்காலக் கொடுப்பனவு தொழிலாளர்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்று முக்கிய தொழிற்சங்கங்கள் வலியுறுத்துவது நியாயமாகவே படுகின்றது.

அதுமட்டுமல்ல சம்பளம் நிர்ணயிக்கப்பட்ட பின்னர் இந்த இடைக்காலக் கொடுப்பனவை எந்தக் காரணம் கொண்டும் தொழிலாளர் சம்பளத்தில் கழிப்பதற்கு இடந்தரலாகாது.

தோட்ட முகாமைத்துவ நிறுவனங்களுடன் கூட்டு ஒப்பந்தம் செய்து கொள்வதில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் முதன்மைத் தொழிற்சங்கமாக செயற்பட்டு வந்துள்ளது. இந்தத் தொழிற்சங்கம் தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபா சம்பள உயர்வைப் பெற்றுத் தருவதற்காக அண்மைக் காலமாக தீவிர முயற்சியில் ஈடுபட்டிருக்கின்றது. இப்போது தொடரும் பேச்சுவார்த்தைகளில் இந்தத் தொகைக்கான உடன்பாடு எட்டப்பட வேண்டும் என்றே தொழிலாளர்களின் மேம்பாட்டில் கரிசனை கொண்ட அனைவரும் எதிர்பார்க்கிறார்கள்.

தற்பொழுது தோட்டத் தொழிலாளர்களுக்கு தினம் ரூபா 620 வரை கொடுப்பனவு கிடைப்பதாகத் தெரிகின்றது. இது ஆயிரம் ரூபா வரை அல்லது அதற்கு அண்மித்த அளவில் சம்பளம் நிர்ணயிக்கப்பட வேண்டும் என்பதே பல தொழிற்சங்கங்களின் கோரிக்கையாக இருந்து வருகின்றது.

கடந்த வரவு - செலவுத் திட்டத்தில் அரசுப் பணியாளர்களுக்கு 2500 ரூபா உயர்வு நிர்ணயிக்கப்பட்டபோது தனியார் நிறுவனங்கள் மற்றும் தோட்டத் தொழிலாளர்களுக்கான சம்பளங்களையும் அதிகரிக்க அரசு வாக்களித்திருந்தது. தோட்டத் தொழிலாளர்களின் சம்பளமானது தோட்ட முகாமைத்துவ நிறுவனங்களுடனான கூட்டு ஒப்பந்தத்தின் மூலமே நிர்ணயிக்கப்படுவதால் அரசின் வாக்குறுதி நிறைவேற்றப்படவில்லை.

இந்த நிலமையில் அரசுடன் இணைந்துள்ள தமிழ் முற்போக்குக் கூட்டணியினர் தோட்டத் தொழிலாளர்களுக்கு உடனடியாக சம்பளம் நிர்ணயிக்க முடியாதவிடத்து அவர்களுக்கு இடைக்காலக் கொடுப்பனவையாவது வழங்கியாக வேண்டும் என்பதை அரசுத் தலைவர்களுக்கு வலியுறுத்தியதன் பேரில் இப்போது இந்தக் கொடுப்பனவிற்கு பிரதமர் ஏற்பாடு செய்துள்ளார்.

உரலை யார் இடித்தால் என்ன நெல் அரிசியாக வேண்டும் என்பதற்கிணங்க சகல தரப்பினரதும் முயற்சிகளின் விளைவாக இடைக்காலக் கொடுப்பனவு ஒன்று கிடைத்திருப்பதை சகலரும் வரவேற்க வேண்டும். இதில் தொழிலாளருக்கு ஏற்படும் நன்மையே முக்கியம். இதனால் தொழிலாளர்கள் பெரிதும் பயனடைவார்கள் என்பதைக் கூறத் தேவையில்லை.

நாட்டின் வருமானத்தை பெருமளவில் தேடித்தரும் ஒரு பிரிவினர் சம்பள விடயத்தில் தொடர்ந்தும் ஓரங்கட்டப்படுவதை அரசுத்தலைவர்கள் குறிப்பாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க விரும்பவில்லை. அதனாலேயே இதில் அவர் நேரடியாகத் தலையிட்டிருக்கிறார்.

இது நிச்சயமாக தோட்டத் தொழிலாளர்கள் சம்பளம் விரைவாகவும் திருப்திகரமாகவும் நிர்ணயிக்கப்படுவதை எடுத்துக்காட்டுகின்றது. இனி மேலும் தோட்ட நிர்வாகங்கள் இதில் சாக்குப் போக்குக்காட்டி காலம் தாழ்த்துவதை அரசு விரும்பாது என்பதையே இது தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது.

# சு.கவை பிளவுபடுத்த ரணிலுக்கு கச்சிதமான தருணம் இது

எம்.ஐ.முபாறக்

தன் வினை தன்னைச் சுடும் என்ற பழமொழி செயல்வடிவம் பெறுவதை, இன்று நாம் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குள்தான் பார்த்துக் கொண்டிருக்கிறோம். உட்கட்சிப் பிளவுகளால் ஒரு காலத்தில் ஐக்கிய தேசியக் கட்சி அடைந்த பின்னடைவு - அதன் தலைவர் எதிர்கொண்ட தலையிடி எல்லாவற்றையும் இன்று சுதந்திரக் கட்சிக்குள் காணக்கிடைக்கிறது. 'யானைக்கொரு காலம் வந்தால் பூனைக்கொரு காலம் வரும்' என்று சொல்வது இந்த விடயத்தில் உண்மையாகின்றது.

ஆட்சி மாற்றம் ஏற்பட்டதைத் தொடர்ந்து சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குள்ளும் மாற்றம் ஏற்படத் தொடங்கியது. ஜனாதிபதிப் பதவியை மாத்திரமன்றி சுதந்திரக் கட்சியின் தலைவர் பதவியையும் மைத்திரி பால சிறிசேன கைப்பற்றினார்.

### இணைவும் தந்திரங்களின் மு(பு)னைவும்

நாட்டில் சுமுகமான ஆட்சி மாற்றம் ஏற்பட்டதுபோல், சுதந்திரக் கட்சிக்கும் நல்லதொரு தலைமைத்துவ மாற்றம் ஏற்பட்டுள்ளது என்று புகழப்பட்டது. ஆனால், ஓரிரு நாள்களிலேயே அந்த நிலைமையைக் குழப்புவதற்கான திட்டங்கள் தீட்டப்பட்டன.

இவற்றுக்குப் பல காரணங்கள் இருந்தன. ஜனாதிபதியாகவும் சுதந்திரக் கட்சியின் தலைவராகவும் மைத்திரி நியமிக்கப்பட்டமையை சுதந்திரக் கட்சியில் உள்ள சிலரும் அந்தக் கட்சியின் தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் உள்ள சிலரும் விரும்பவில்லை. மகிந்தவின் ஆட்சியில்போல் மைத்திரியின் தலைமையின் கீழ் அரசியல் சுகபோகங்களை அனுபவிக்க முடியாது. ஊழல், மோசடிகளில் ஈடுபட முடியாது. குறுக்கு வழியில் அரசியல் செய்ய முடியாது என்பதை உணர்ந்த அவர்கள் மைத்திரியை வெறுத்து மகிந்தவை ஆதரித்தனர்.

மகிந்தவின் ஆட்சி கவிழ்ந்ததும் மைத்திரியும்-ரணிலும், ஐக்கிய தேசியக் கட்சியையும் சுதந்திரக் கட்சியையும் இணைத்து இடைக்கால அரசு ஒன்றை நிறுவினர். அந்த அரசின் செயற்பாடுகள் ஊழல்வாதிகளுக்கு எதிரானதாக இருந்தன.

இதனால், மகிந்தவை அழைத்து வந்து, சுதந்திரக் கட்சியில் இணைத்து, ஆட்சியைக் கைப்பற்றுதல், இல்லாவிட்டால் வேறு அணியாகச் செயற்படுதல் என்று முடிவெடுத்தனர். மீண்டும் ஆட்சியைப் பிடிக்கலாம் என்ற நம்பிக்கையில் மகிந்தவும் அதற்கு உடன்பட்டு களத்தில் குதித்தார். நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு, நாடாளுமன்ற உறுப்பினராகவும் தெரிவானார். இதனைத் தொடர்ந்து மகிந்த தரப்பினர் மைத்திரி தலைமையிலான சுதந்திரக் கட்சிக்குக் கடும் நெருக்குதலைக் கொடுக்கத் தொடங்கினர். கட்சியின் தலைமைத்துவத்தைக் கைப்பற்றுதல் அல்லது கட்சியைப் பலவீனப்படுத்துதல் என்ற திட்டத்தோடு அவர்கள் களமிறங்கினர்.

> இன்று மகிந்தவுடன் சுதந்திரக் கட்சியின் கணிசமான நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள் மற்றும் உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள் உள்ளனர்.

சுதந்திரக் கட்சிக்குள் இருந்து கொண்டு மகிந்தவாலும் அவரது சகாக்களாலும் எதுவும் செய்ய முடியாது என்பதை உணர்ந்த அந்த அணி, ஒருபுதிய கட்சியை உருவாக்கி, அதன் ஊடாக எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிட்டு, உள்ளூராட்சி சபைகளின் அதிகாரங்களைக் கைப்பற்றுவதற்கு முடிவெடுத்தது.

இன்று அந்தத் தரப்பினர் தொடர்ச்சியாக மைத்திரிக்கு எதிரான அவரது கட்சிக்கு எதிரான போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர். இந்தப் போராட்டங்களின் மூலம் சுதந்திரக் கட்சி பலவீனமடைந்தால் அது மகிந்த தரப்புக்கு கிடைக்கும் வெற்றியல்ல; ஐக்கிய தேசியக் கட்சிக்கே அந்த வெற்றி உரித்தாகும்.

இந்த வெற்றியை அடைவதற்காக பிரதமரும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்துகின்றார் என்று சொல்லப்படுகின்றது. அரசியலில் வெற்றி பெறுவதற்காகப் பிரித்தாளும் தந்திரம் பயன்படுத்தப்படுவது புதிதல்ல. இந்தப் பிரித்தாளும் தந்திரத்தின் ஊடாகவே மகிந்த அவரது ஆட்சியை அசைக்க முடியாமல் தக்கவைத்திருந்தார் என்பதை மறுக்க முடியாது.

### புதிய பாதையில் நிதானம்

மகிந்தவின் பிரித்தாளும் தந்திரத்தால் கடந்த காலங்களில் ஐக்கிய தேசியக் கட்சியே பெரிதும் பாதிக்கப்பட்டிருந்தது. பின்பு ஒருவாறு அது ஆட்சியைக் கைப்பற்றியபோதிலும், தனித்து ஆட்சி அமைக்கக்கூடிய பெரும்பான்மை ஐக்கிய தேசியக் கட்சிக்குக் கிட்டவில்லை. அக்கட்சி சுதந்திரக் கட்சியுடன் இணைந்து கூட்டரசை நடத்திச் செல்கின்ற போதிலும், தொடர்ந்தும் அவ்வாறு இருக்கமுடியாது. இனிவரும் தேர்தல்களில் எல்லாம் தனித்து ஆட்சியை அமைக்கும் நிலையை ஐக்கிய தேசியக் கட்சி அடையவேண்டும். சுதந்திரக் கட்சியை உடைப்பதுதான் அதற்குள்ள ஒரே வழி. ரணிலின் இந்தத் தேவையை நிறைவேற்றுவதற்கு ஏதுவாகவே சுதந்திரக் கட்சிக்குள் உட்கட்சிப் பிளவு ஏற்படத் தொடங்கியுள்ளது. இந்தவாய்ப்பை ரணில் விக்கிரமசிங்க பயன்படுத்தாமல் இருக்கமாட்டார்.

ஐக்கிய தேசியக் கட்சி பலமடைவதற்கு-தனித்து ஆட்சி அமைப்பதற்கு இதைவிட நல்ல சந்தர்ப்பம் கிடைக்காது என்றே சொல்ல வேண்டும். இன்று மகிந்தவுடன் சுதந்திரக் கட்சியின் கணிசமான நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள் மற்றும் உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள் உள்ளனர். அவர்களால் தனித்து ஆட்சியைப் பிடிக்க முடியாமல்போனாலும், கணிசமான பிளவை சுதந்திரக் கட்சிக்கு ஏற்படுத்த முடியும்.

அது ஐக்கிய தேசியக் கட்சியின் வெற்றிக்குப் பெரிதும் உதவும். இனிவரும் அனைத்துத் தேர்தல்களிலும் தனித்துப் போட்டியிட்டு பெரும்பான்மையைப் பெற வேண்டும் என்பதிலும், இனி சுதந்திரக் கட்சியுடன் இணைந்து ஆட்சி அமைக்கக்கூடாது என்பதிலும் ரணில் விக்கிரமசிங்க குறியாக இருக்கின்றார்.

கூட்டாட்சியின் ஊடாகவும் சுதந்திரக் கட்சிக்குள் ஏற்பட்டிருக்கும் பிளவின் ஊடாகவும் ஐக்கிய தேசியக் கட்சியை வளர்த்துவிட வேண்டும் என்று-பிரதமர் விரும்புகின்றார். அதற்காக அவர் மகிந்த அணிக்கு உதவுகிறார்- சுதந்திரக் கட்சியை மேலும் பிளவுபடுத்த அவர் திரைமறைவில் இருந்து செயற்படுகின்றார் என்று கூறப்படும் குற்றச்சாட்டுக்களை மறுப்பதற்கு நியாயமான காரணங்கள் இல்லை.

அரசியல் முடிச்சுகளைப் போடுவதில் ரணில் வல்லவர் என்பது நாடறிந்த உண்மை. அவரின் காய் நகர்த்தல்களை- இராஜ தந்திரத்தை இலகுவில் விளங்கிக் கொள்ளமுடியாது. சர்வதேச வலையமைப்புகளின் ஊடாக மிகவும் நிதானமாக தூர நோக்குடன் காய் நகர்த்தும்வல்லமையுள்ள ரணில், சுதந்திரக் கட்சிக்குள் ஏற்பட்டிருக்கும் பிளவை தனக்குச் சாதகமாகப் பயன்படுத்தாமல் இருப்பாரா என்ற கேள்வி எழுவது நியாயம் தான்.

புலிகள் தோல்வி அடைவதற்கு ரணில் நடைமுறைப்படுத்திய பிரித்தாளும் தந்திரமும் காரணம் என்பதை எவராலும் மறுக்க முடியாது. அவ்வளவு பெரிய பலமான அமைப்பையே பலவீனப்படுத்திய ரணிலுக்கு இந்த சுதந்திரக் கட்சியை பலவீனப்படுத்துவது ஒன்றும் பெரிய விடயமல்லவே.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தியத்தேவர்

# ஓநாய்களிடமிருந்து நாட்டைப் பாதுகாப்பது மக்களின் கடமை

நதிகள் நடந்தால் நாடு செழிக்கும். அதனால்தான் "நடந்தாய் வாழி காவேரி" என்கிறார் கவிஞன். நடையை மனிதன் உடல் ஆரோக்கியத்துக் காகப் பயன்படுத்திக் கொள்வான்.

இப்படி உன்னதமான செயற்பாடுகளைக் கொண்டிருக்கும் நடையை அழிவுக்கான தூண்டுகோலாக மாற்றிக் கொண் டுள்ளனர் சில கடைநிலை அரசியல் முட்டாள்கள். நடத் தல், பவனி வரல் என்பன இன்று அவர்களின் ஆயுத மாக்கப்படுகிறது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச அரசுக்கு எதிரான நடைப் பயணம் ஒன்றை கண்டியில் இருந்து கொழும்பு நோக்கி ஆரம்பித்திருக்கிறார். இனவாதிகள்குழுவின் இந்த நடை அரசுக்கு எதிரானது எனக் கூறப்பட்டாலும் உண் மையில் இது தமிழ் மக்களுக்கு எதிரான ஒன்று. தமிழ் மக் கள் இந்த நாட்டில் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கவேண்டியுள்ளது. பறித்தெடுக்கப்பட்ட குடியிருப்பு நிலங்கள் முதல் அரசியல் உரிமைகள் வரை நீதியை எதிர் பார்க்கும் மக்களாக நாம் அன்றாடம் போராடவேண்டியுள்ளது. தென்னிலங்கை அரசியல்வாதிகளுக்கு உறுதுணையாக இருந்து, இலங்கை சுதந்திரம் பெற உதவியவர்கள் தமி ழர்கள். இந்த உண்மைகளை ஒதுக்கிவிட்ட தென்பகுதி இன வாதிகள் இனங்களிடையே மோதல்களை உருவாக்கி அதில் குளிர்காய முனைந்துள்ளனர். அதற்காகக் கொத்துக் குண்டுவரை வீசியவர்கள் தற்போது நடக்க தொடங்கியுள்ள னர். ஏற்கனவே முன்னாள் ஜனாதிபதியான ஜே.ஆர். ஜெயவர்த்தனா இவ்வாறான ஒரு நடைபவனியைத் தமிழ் மக்களுக்கு எதிராகச் செய்து காட்டியிருந்தார். அந்த வழி யில் இப்போது மகிந்த நடக்கத்தொடங்கியுள்ளார்.



நாட்டின் தூய்மையான எதிர்காலம் குறித்துச் சிந்திக்கும் அனைவரையுமே தம்முடன் இணைந்து நடக்க வரும்படி அழைப்பும் வேறு விடுத்திருந்தார். இந்த அழைப்பை விடுத்த எதிரணியினரில் பலரும் ஊழல் மோசடிகளில் விசாரணைக்கு உள்ளாக்கப்பட்டவர்கள். இவர்களின் நட வடிக்கைகளால் தூய்மை என்பது என்ன என்று தெரியா மல் மக்கள் வேறு குழம்பிக் கொண்டிருக்கிறார்கள். இவர் கள் ஆட்சியில் இருந்தபோதுதான் நாட்டையே அடித்தள மற்ற, மேன்நிலையற்ற மோசமான நிலைக்குக் கொண்டு வந்தார்கள். நாட்டைத் தமது குடும்பச் சொத்தாக்கி, பங்கு போட முனைந்த கும்பல் நாட்டைப் பாதுகாக்கப்போகிற தாம். அதற்காக நடக்கிறார்களாம். ஓநாய்களிடமிருந்து ஆட்டைப் (நாட்டை) பாதுகாக்கவேண்டிய பொறுப்பு இப் போது மக்களிடமே உள்ளது.

மகிந்தவின் ஆட்சிக் காலத்தில் நாடு அதலபாதாளத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்தது. நல்லாட்சியின் பெய ரால் அது தவிர்க்கப்பட்டுள்ளது. அதற்கு முதல் கார ணமாக இருந்தவர்கள் சிறுபான்மையின மக் களே. ஒரு சர்வாதிகாரியின் கையில் சிக்கிச் சீரழிய வேண்டியி ருந்த இலங்கையைப் பாதுகாக்கத் தமிழ் மக்கள் வழங்கிய பங்களிப்பே சிங்கள மக்களும் நிம் மதியாக வாழ உதவியது என்பதை அந்த மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

இப்போது நாட்டில் இனவாதம் முற்றாக ஒழிந்து, சுபீட் சம் மலரவேண்டும் என்பதே தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்களின் ஒன்றுபட்ட கருத்தாக உள்ளது. மக்களின் இந்தக் கருத்துக்களை முறியடித்து, அவர்களை மீண்டும் இனவாதத்தில் மூழ்கடித்து மன்னர்களாகவும் சிற்றரசர்களாகவும் மாறிவிடவேண்டும் என்ற நோக் குடன் மகிந்தவும் அவரது அணியினரும் எடுத்துள்ள ஆயுதமே இந்த நடைபவனி.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவோ? நல்லாட்சி என்ற வரையறையினுள் அவர் வழிநடத்தும் அரசோ இந்த விடயங்களை பொருட்படுத்துவதாகத் தெரிய வில்லை...! மாறாக அதற்கு உரிய பாதுகாப்பு வழங் கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது. இந்த நடை பயணம் அரசுக்கு எதிரானது என்று வெளிப்படை யாகக் கூறப்பட்டாலும், இதன் உண் மையான நோக்கம் தமிழ் மக் களுக்கு எதிரானதுதான் என்பது ஆட்சியில் இருப்பவர்களுக்குப் புரியாமல் இல்லை. அதனாலேயே மௌனமாக இருக்கின்றனர். என்ன தான் நடக்கும் நடக்கட்டுமே என்று பேசாமடந்தைகளாகி விட்டனர். பெரும்பான்மை சிறு பான்மையை அடக்கி அடிமைப் படுத்தி வைத்தி ருக்கவேண்டும் என்று ஜனநாயகத் தின் எந்த ஒரு கருத்துப் படிநிலை யும் வலியுறுத்த வில்லை. அரசியல் வாதிகள் விளங்கிக் கொள்ளாத ஜனநாயகக் கோட்பாடுகளைத் தெரிந்துகொள்ள வேண்டிய கடப்பாடு நாட்டின் அனைத்து மக்களுக்குமே இன்றியமை யாதது. நாட்டை நேசிக்கும் ஜனநாயகத்தைப் பாது காக்கும் தலைவராகக் காட்டிக் கொள்ளும் ஜனாதி பதி அதற்கான சட்டதிட்டங்களைக் கையில் எடுக்க வேண்டும், மௌனம் வினையாகியும் விடலாம்.

இந்த அழகான நாட்டில் பற்றைகளையும் முட்செடி களையும் விஷ ஜந்துக்களையும் வளரவிடுவது உகந்ததல்ல. மீண்டும் இனவாதம் தலையெடுக் காது இருக்க ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அர்ப்பணிப்புடன் செயற்படவேண்டும். பாம்புகள் குடியிருக்கப் பற்றைகளை வளர விடுவதா?

> நாட்டைத் தமது குடும்பச் சொத்தாக்கி பங்குபோட முனைந்த கும்பல், நாட்டைப் பாதுகாக்கப் போகிறதாம். அதற்காக நடக்கிறார்களாம். ஓநாய்களிடமிருந்து ஆட் டைப் (நாட்டை) பாதுகாக்க வேண்டிய பொறுப்பு இப்போது மக்களிடமே உள்ளது.



## எல்லோரும் அறியச் செய்க!

நல்லிணக்கச் செயலணி என்ற ஒன்றினால் போர்க் குற்ற விசாரணைகள் குறித்து மக்கள் கருத்து அறியப்பட்டு வருவதாக உதயன் பத்திரிகையில் அடிக்கடி செய்தி வெளியாகிறது. அதில் பலரும் தோன்றி பலவிதமான கருத் துக்களையும் சொல்லி வருகிறார்கள் என்றும் உதயன் செய்தி வெளியி டுகிறது. ஆனால், இந்தச் செயலணியின் முன்பாகத் தோன்றி கருத்துக்களைச் சொல்லும் மக்களின் எண்ணிக்கையை அதிகளவில் காணமுடியவில்லை. அதற்குக் காரணம் இருக்கிறது. இப்படி ஒரு செயலணி செயற்படப்போவதாக அனைத்து மக்களுக்கும் முறையாக அறிவிக்கப்படவில்லை. உதயன் பத்தி ரிகை வடக்கில் பரவலாக – பெரும் எண்ணிக்கையானவர்களால் வாசிக்கப் பட்டாலும்கூட, பத்திரிகை படிக்காதவர்களும் பத்திரிகை எட்டாத இடங்களும் இன்னும் இருக்கின்றார்கள்; இருக்கின்றன என்பதால் அந்த அறிவிப்பு எல்லோரையும் எட்டியதாகச் சொல்ல முடியாது. சிறு அளவில் சில விளம் பரங்களை மட்டும் வெளியிடுவதால் மக்களின் கவனத்தை இந்த விடயத் தின் மீது திருப்பிவிடவும் முடியாது.

மகிந்த ராஜபக்சவின் ஆட்சிக் காலத்தில் அவர்களது புகழ்பாடுவதற்காகப் பக்கம் பக்கமாக அரச பணத்தில் விளம்பரம் செய்தார்கள். நல்லாட்சி அரசு இதுபோன்ற நல்ல விடயங்களையாவது மக்களிடம் கொண்டு செல்வதற்குப் பெருமெடுப்பில் விளம்பரங்களைச் செய்திருக்கலாம். ஊடக விளம்பரங்கள் மட்டுமே இதுபோன்ற விடயங்களை மக்களிடம் முழுமையாகக் கொண்டு போய்ச் சேர்க்கமாட்டா. குறிப்பாக, போரால் அதிகம் பாதிக்கப்பட்ட வன்னி மக்களுக்கு இந்தத் தகவல்கள் ஊடகங்கள் வாயிலாக மட்டும் முழுமை யாகக் கிடைத்துவிடாது. எனவே மக்களை நெருங்கிச் சென்று அவர்களுக்கு இந்த விடயங்களைச் சரியாக அறிவிப்பதற்கான வழிமுறைகளைச் செயலணி யினர் கண்டறிந்து நடைமுறைப்படுத்த வேண்டும். இல்லையேல் அவர்களால் பாதிக்கப்பட்ட அடித்தட்டு மக்களின் உண்மையான கருத்துக் களை அறியமுடியாமல் போய்விடும். அது தீர்மானங்களை எடுப் பதில் அவர்களின் குரலுக்கு இடமில்லாமல் செய்துவிடும். இத்த கைய கருத்தறியும் அமர்வுகள் நடந்து வருவது பற்றிய செய்தியை பாதிக்கப்பட்ட அனைவருக்கும் கிடைக்கச் செய்ய செயலணியினர் கட்டாயம் நடவடிக்கை எடுக்க வேண்டும் முதலில்.

தேவநாயகம், வேலணை

## எம்மவரிடம் மனிதாபிமானம் செத்துப் போய்விட்டதா?

26.07.2016 அன்று யாழ்ப்பாணத்திலிருந்து குறிகாட்டுவானுக்கு காலை 7.00 மணிக்கு புறப்பட்ட தனியார் பேருந்தில் பயணத்தை மேற்கொண்டேன். அனைத்து ஆசனங்களும் நிறைந்து விட்டன. அமர்ந்திருந்த எனக்கருகே 70 வயது மதிக்கத்தக்க பெண் ஒருவர் நிற்பதற்கு இயலாத நிலையில் சிரமத்துடன் நின்றவாறு பயணம் செய்தார். அவர் நின்ற இடத்துக்கு அருகே ஒரு இருக்கையில் 4வயது மகனும் தாயும் இருந்தனர். அதற்கு முன் இருக்கையில் 5வயது பேர்த்தியுடன் பேர்த்தியார் இருந்தார். சின்னப்பிள்ளைகளை மடியில் இருத்திக்கொண்டு அந்தப்பெண்ணுக்கு இடம் கொடுத்திருக்கலாம். அவ்வாறு செய்யவில்லை. நடத்துநரும் அதைப்பற்றி கவனிக்கவில்லை. அந்த70 வயதுப் பெண் நின்றிருந்த இடத்துக்கு அருகே இளம்பெண்களும், இளைஞர்களும் இருக்கைகளில் அமர்ந்து இருந்தனர். எவருமே எழுந்து இடம் கொடுப்பதாக இல்லை. இவர்கள் எல்லோரும் நயினை நாகபூசணி அம்பாளைத் தரிசிக்கப் போகிறார்கள். இவர்களை அம்பாள் கருணைக் கண்கொண்டு பார்க்கவே மாட்டாள். கோபக்கண் கொண்டு தான் பார்ப்பாள் என்பது உண்மை. அதுவே என் மனதிலும் அந்தச் சந்தர்ப்பத்தில் தோன்றியது.

மற்றவர்களுக்கு உதவி செய்யும் மனப்பான்மை இல்லாத நிலையில், எத்தனை கோயில் ஏறி, இறங்கினாலும் அருள் கிடைக்காது. எனது சிந்தனைகள் கலைந்தன. எனக்கு (வயது-60) நாரிப்பிடிப்பாக இருந்தபோதிலும், புங்குடுதீவு மடத்து வெளியில் நான் எழுந்து இருக்கையைக் கொடுத்தேன். எனக்கு இயலாமை இருந்தபோதும், மன நிறைவு ஒன்று இருந்தது. வண்டி களின் நடத்துநர்கள் கட்டணம் வசூலிப்பதை மட்டும் கவனத்தில் கொள்ளாது, இப்படியான விடயங்களிலும் கவனமெடுத்து சேவை செய்ய வேண்டும். முதியோருக்கு உதவும் மனப் பான்மை இளம் சந்ததியினருக்கு ஏற்பட வேண்டும். தயவு செய்து அனைவரும் சிந்தியுங்கள்.

கே.சுப்பிரமணியம்
புகையிரத நிலைய வீதி, கொக்குவில்.

வாசகர் திருமுகம் பகுதிக்கு எழுதுபவர்கள் தமது பெயர், முகவரி, தொடர்பு எண் என்பவற்றை நிச்சயம் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும். [illegible] விரும்பாதவர்கள் அது பற்றிக் குறிப்பிட்டு, புனை பெயரையும் எழுதி அனுப்பலாம். ஆனால் உண்மையான விவரங்கள் குறிப்பிடப்படாத வாசகர் திருமுகங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டா. எழுதியவர்களின் விவரங்கள் குறித்த இரகசியங்கள் தேவைப்படும் பட்சத்தில் காக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மனிதக் கழிவுகளைப் போன்ற தோற்றம் கொண்ட உணவுகள்

## கனடாவில் விநோத உணவகம்

ஒட்டாவோ, ஓக.1
கனடாவின் ரொறன்ரோ நகரில் விநோத உணவகம் திறக்கப்படவுள்ளது. 'புப் கபே டெசேட் பார்' என்று அழைக்கப்படும் உணவு விடுதியில், மனிதக் கழிவுகளைப் போன்று காட்சியளிக்கும் உணவுகள் பரிமாறப்படவுள்ளன.
மனிதக்கழிவுகளை சாதாரணமாக உணரவைக்கும் நோக்கில் இந்த உணவகம் உருவாக்கப்பட்டுள்ளது என நிர்வாகி தெரிவித்தார். உணவகத்தில் பாவிக்கப்படும் பாத்திரங்கள் கழிப்பறைச் சாதனங்கள் போன்று உருவாக்கப்பட்டுள்ளன. தாய்வானில் மனிதக் கழிப்பறையை அடிப்படையாகக் கொண்ட உணவகத்துக்குச் சென்றேன். அதேபோன்றதொன்றை கனடாவிலும் நான் உருவாக்கியுள்ளேன் என உணவக உரிமையாளர் தெரிவித்தார். குறித்த உணவகத்தில் பரிமாறப்படும் உணவுகள் மண்ணிறத்தில் தயாரிக்கப்படவுள்ளன.
பிலிப்பைன்ஸ், ஜப்பான், இந்தோனேசியா, ரஷ்யா மற்றும் தென்கொரியா ஆகிய நாடுகளிலும் இதைப்போன்ற உணவகங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. (ற-ரி4)

# மின்தூக்கிக்குள் சிக்கிய ட்ரம்



வொஷிங்டன், ஓக.1
அமெரிக்க ஜனாதிபதி வேட்பாளர் டொனால்ட் ட்ரம் மின்தூக்கி (லிப்ட்) ஒன்றுக்குள் மாட்டிக் கொண்டார். அவரைத் தீயணைப்புப் படையினர் மீட்டெடுத்தனர். கடந்த வெள்ளிக்கிழமை கொலராடோ ஸ்பிரிங் என்ற பகுதியில் பரப்புரை செய்யச் சென்றபோது இந்தச் சம்பவம் நடந்தது.
பரப்புரைக்குச் சென்ற ட்ரம் அங்குள்ள சொகுசு விடுதி ஒன்றில் தங்கினார். அங்கு மின்தூக்கியில் சென்றபோது 1ஆம், 2ஆம் மாடிகளுக்கு இடையே மின்தூக்கி நின்றுவிட்டது. தீயணைப்புப் படையினருக்குத் தகவல் வழங்கப்பட்டது. மின்தூக்கியின் மேல்பகுதி திறக்கப்பட்டு ட்ரம் மீட்டெடுக்கப்பட்டார். அவருக்கு எந்தக் காயமும் ஏற்படவில்லை என்று மீட்புக் குழு தெரிவித்தது.
தொழில்நுட்பக் கோளாறு காரணமாக இந்தச் சம்பவம் நடந்தது என்று விடுதி அதிகாரிகள் தெரிவித்தனர். அதிகளவானோர் பயணித்ததால் இது நடந்தது என்று ட்ரம் தெரிவித்தார். (ற-ரி4)

# வீட்டுக்குள் இருந்து 400 முதலைக் குட்டிகள் மீட்பு

பீஜிங், ஓக.1
சீனாவில் தென் பகுதி எல்லைப்புற மாவட்டத்தில் உள்ள ஒரு வாடகை வீட்டில் சுமார் 400 முதலைக் குட்டிகளை அதிகாரிகள் கண்டுபிடித்தனர்.
வீடு வீடாகச் சென்று கணக்கெடுப்புச் செய்துகொண்டிருந்த போதே சீன அதிகாரிகளுக்கு இந்தப் பேரதிர்ச்சி காத்திருந்தது.
சையமீஸ் வகையைச் சேர்ந்த இந்த 25 செ.மீ நீளமுள்ள முதலைக் குட்டிகள், பிறந்து இரண்டு வாரமே ஆனவை எனவும் இவை அருகே யுள்ள வியட்நாமிலிருந்து கடத்திக் கொண்டு வரப்பட்டிருக்கலாம் எனவும் அதிகாரிகள் சந்தேகம் வெளியிட்டனர்.
இருவர் தப்பியோடினர் என்றும், ஒருவர் கைது செய்யப்பட்டார் என்றும் குவாங்ஸி ஜுவாங் தன்னாட்சிப் பிராந்தியப் பொலிஸார் தெரிவித்தனர்.
முதலைகளின் தோல்கள், கைப்பைகள் மற்றும் இதர ஆடம்பரத் தோல் பொருள்கள் தயாரிக்கப் பயன்படுத்தப்படும். ஆனால் சீனாவில் உரிமம் இல்லாமல் முதலைகளை வளர்ப்பது சட்ட விரோதமானது. (ற)

# ஒரே தடவையில் பிறந்த பண்டாக்களின் பிறந்தநாள்

பீஜிங், ஓக.1
உலகில் வாழும் ஒரே தடவையில் பிறந்த தனித்துவம் மிக்க மூன்று பண்டாக் குட்டிகளின் இரண்டாவது பிறந்தநாள் கொண்டாட்டங்கள் கடந்த வெள்ளிக்கிழமை தென்சீனாவில் நூற்றுக்கணக்கான பார்வையாளர்கள் மத்தியில் வெகுவிமரிசையாக இடம்பெற்றன.
குறித்த மூன்று பண்டாக்களும் அரங்கத்திற்கு அழைத்து வரப்பட்டு மரக்கறிகள், கிழங்குகள் மற்றும் பழங்கள் என்பவற்றால் "வடிவமைக்கப்பட்ட கும்புவடிவகேக்உண்ணக்கொடுக்கப்பட்டது.மூன்றுபண்டாக்களும்அவற்றை ருசித்து உண்பதைக் கூடியிருந்த மக்கள் மிகுந்த மகிழ்ச்சியோடு கண்டு களித்தனர்.
குறித்த அரங்கில் குரங்கு, யானை மற்றும் கொக்கு என்பவற்றின் சிறு நடன அசைவுகளும் பார்வையாளர்களுக்காகக் காட்சிப்படுத்தப்பட்டன. அதைத் தொடர்ந்து இசை நிகழ்ச்சியும் இடம்பெற்றது.
இந்தப் பிறந்த தினக் கொண்டாட்டங்கள் தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள காணொலியில், அவற்றைத் தாய்ப் பண்டா ஈன்றெடுக்கும் சி.சி.ரி.வி பதிவுகளும் இணைக்கப்பட்டுள்ளன. (ற)



# அமெரிக்காவில் சூடு மூவர் உயிரிழப்பு



வொஷிங்ரன், ஓக.1
அமெரிக்காவின் வொஷிங்ரன் மாகாணத்தில் முகில்ரோவில் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. அதில் மூவர் உயிரிழந்தனர்.
கடந்த வெள்ளிக்கிழமை இரவு இளைஞர்களின் களியாட்ட நிகழ்வு ஒன்றில் இந்தச் சம்பவம் நடந்தது. நிகழ்வில் கலந்து கொண்ட ஒருவர் சரமாரியாகச் சூடு நடத்தினார்.
இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையவராகக் கருதப்படும் நபர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார் எனப் பொலிஸார் தெரிவித்தனர். வேறு எந்தத் தகவலையும் வெளியிட பொலிசார் மறுத்தனர். (ற-ரி4)

# அகதிகளி…

# வரலாறு க…



ரோம், ஓக.1
லிபியாவில் இருந்து ஐரோப்பாவுக்குப் பெரும் எண்ணிக்கையான அகதிகள் படையெடுக்கின்றனர். பல்வேறு இன்னல்களுக்கு மத்தியில் மத்தியதரைக் கடல் மார்க்கமாக அவர்கள் ஐரோப்பாவை வந்தடைகின்றனர். இந்த ஆண்டில் மட்டும் சுமார் 3 ஆயிரம் அகதிகள் உயிரிழந்தனர்.
சிசிலியில் நேற்றுமுன்தினம் ஆயிரத்து 500 அகதிகளும், நேற்று ஆயிரம் அகதிகளும் தரையிறங்கியுள்ளனர். கடந்த வெள்ளிக்கிழமை முதல் நேற்றுவரை சுமார் 3 ஆயிரத்துக்கும் அதிகமான அகதிகள் தரையிறங்கியுள்ளனர்.
இது குறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள ஐ.நாவின் மனித உரிமைகள் தொடர்பான உயர் அதிகாரி ஒருவர், இது மிக மோசமான நிலமை என்றார். அகதிகளுக்கான தடுப்புக்கும் ஆள் கடத்தலுக்கும் வித்தியாசம் ஏதும் இல்லை என்று
குறிப்பிட்டா…
ணிக்கும் …
வழங்குகின்…
மனிதர்கள…
இழந்து விட…

" அகதிக…
ஆள் க…
யாசம்…
குறிப்பிட்டார்.
மத்தியில் பய…
நாம் எவ்வாறு…
கின்றோம்?.
மனிதர்களை…
மனிதத்தை இ…
டோம் என்று…

# சிரிய இராணுவத்…
# முடியாது தீவிரவா…
## ஆயுதங்களைக் கைவிட்டு…

அலப்போ, ஓக.1
சிரியாவின் அலெப்போ மாகாணத்தின் கிழக்குப் பகுதிகளில் பதுங்கியிருந்த கணிசமானளவு தீவிரவாதிகள் தம் ஆயுதங்களைக் கைவிட்டு விட்டு சிரிய அரச படையினரிடம் சரணடைந்தனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.
அலெப்போவின் சலாஹுதீன் மாவட்டத்தில் நேற்றுமுன்தினம் மட்டும் நூற்றுக்கணக்கான தீவிரவாதிகள் சரணடைந்தனர் என்று சிரியாவின் உத்தியோகபூர்வ வலைத்தளமான சனா செய்தி வெளியிட்டுள்ளது.
குறித்த பகுதிகளில் தீவிரவாதிகளின் முற்றுகைக்கு உட்பட்டிருந்த பெரும்பாலான குடும்பங்கள், அரச படையினரின் உதவியுடன் தற்காலிக இராணுவ முகாம்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்று கூறப்படுகின்றது.
இந்த வார ஆரம்பத்தில் அலெப்போவில் இருந்து வெளியேற விரும்பும் மக்கள் பாதுகாப்புப் படையினரின் உதவியை நாடுமாறும், அங்கு பதுங்கி



யிருக்கும் தீவிரவா…
களைக்கைவிட்டுசரண…
பிழைக்கலாம் எனவு…
வம் துண்டுப் பிரசு…
அறிவுறுத்தியிருந்தது…
இதனையடுத்தே ச…
தீவிரவாதிகள் தற்போ…
தனர் என்று தெரிவி…

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...ின் இறப்பு எண்ணிக்கை ...காணாதளவு அதிகரிப்பு





...கதிகளுக்கான தடுப்புக்கும் ...ள் கடத்தலுக்கும் வித்தி ...சம் ஏதும் இல்லை என்று ...டார். பல இக்கட்டுகளுக்கு ... பய ணிக்கும் மக்களுக்கு ...வாறு ஆதரவு வழங்கு ...?. ஐரோப்பிய வரலாற்றில் ...ளை உபசாரம் செய்வதில் ...தை இழந்து விட் ...று குறிப்பிட்டார். ”

...பிட்டார். பல இக்கட்டுகளுக்கு மத்தியில் பய...கும் மக்களுக்கு நாம் எவ்வாறு ஆதரவு ...குகின்றோம்?. ஐரோப்பிய வரலாற்றில் ...ர்களை உபசாரம் செய்வதில் மனிதத்தை ...து விட்டோம் என்று குறிப்பிட்டார்.

மத்தியரைக் கடலைக் கடக்கும் பயணம் மிகக் கொடூரமானது என்று தெரிவித்தார் அகதிகள் மீட்புப் பணிக்களத்தின் மருத்துவர் ஒருவர். அகதிகள் சித்திரவதைகள், தாக்குதல்கள், வன்புணர்வுகள், பாலியல் தொல்லைகளுக்கு முகம் கொடுத்துப் பயணிக்கின்றார் என்றும் அவர் தெரிவித்தார். மரத்தால், இறப்பரால் ஆன படகுகளில் அளவுக்கு அதிகமானோரை ஏற்றிப் பயணிப்பது கண்டனத்துக்குரியது. சில படகுகள் மனித பாவனைக்கு உகந்தவை அல்ல. இந்த ஆண்டில் லிபியாவில் இருந்து இத்தாலிக்குப் பயணித்த 2 ஆயிரத்து 606 பேர் இறந்துள்ளனர். இந்த எண்ணிக்கை வரலாறு காணாத எண்ணிக்கையாகும் என்றும் அவர் தனது அனுபவங்களைத் தெரிவித்தார்.

ஐரோப்பிய நாடுகளின் எல்லைகள் மூடப்பட்டதை அடுத்து 100 என்ற எண்ணிக்கையில் தினமும் அகதிகள் வரவை எதிர்பார்க்க முடிகின்றது என்று கிறீசுக்கான பன்னாட்டு அமைப்பின் பணிப்பாளர் குறிப்பிட்டார். ஆப்கன், ஈராக், பாகிஸ்தான், ஈரான் ஆகிய நாடுகளில் இருந்து அதிக எண்ணிக்கையில் அகதிகள் கிறீசுக்கு வருகின்றனர். இத்தாலிக்கு நைஜீரியா, எரித்திரியா, காம்பியா, சூடான், சோமாலியா, மற்றும் ஆபிரிக்க நாடுகளில் இருந்தும் வருகின்றனர். சகாரா பாலைவனத்தைக் கடக்கும் அகதிகள் ஆள் கடத்தல்காரர்களிடம் சிக்கி பல சித்திரவதைகளுக்கு ஆளாகின்றனர். உயிரிழப்பவர்களின் உடல்கள் லொறியில் ஏற்றப்பட்டு பாலைவனத்தில் வீசப்படுகின்றன என்றும் அவர் கூறினார்.

இந்தவருடம் ஜனவரியில் இருந்து ஜூன் வரை 10 ஆயிரத்து 500 சிறுவர்கள் ஜேர்மனியில் தரையிறங்கியுள்ளனர். அகதிகளிடம் இருந்து ஆயிரக்கணக்கான டொலரைப் பெற்று இந்தக் கடத்தல் நடவடிக்கை இடம்பெறுகின்றது. ஆனால் பயணிக்கும் அகதிகளுக்கு உணவு, நீர் என்பன வழங்கப்படுவதில்லை. இதனால் சில நாள்களில் பயணிக்கும் அகதிகள் பட்டினிச் சாவைத் தழுவும் அவலத்துக்கு உள்ளாகின்றனர்.

நாடுகள் பல தமது எல்லையை மூடியுள்ளன. சமூக ஆர்வலர்கள், பாப்பரசர் ஆகியோர் அகதிகளை ஏற்றுக் கொள்ளுமாறு வலியுறுத்துகின்றனர்.(ற-ரி4)



## வான் குதிப்பில் சாதனை

வொஷிங்டன், ஓக.1

அமெரிக்காவைச் சேர்ந்த வான் சாகச வீரர் வரலாற்றுச் சாதனையைக் கடந்த வாரம் நிகழ்த்தினார்.

லூக் அகின்ஸ் என்ற 42 வயதான வீரர் 18 ஆயிரம் வான் குதிப்புக்களை நிகழ்த்தியுள்ளார். இவரது 18 ஆயிரமாவது குதிப்பின் போது பரசூட் அணியவில்லை. மாறாக அதற்கு நிகரான வேற்றுப் பாதுகாப்பு அங்கியை அணிந்து சாதனைப் பதிவை நிகழ்த்தினார்.

2 நிமிடங்களுக்கு வானில் இருந்து குதித்த லூக், பின்னர் ஒவ்வொரு 100 அடிக்கும், அசைவுகள் மூலம் வேகத்தைக் கட்டுப்படுத்தினார். இறுதியாக செமி பள்ளத்தாக்கில் தரையிறங்கினார்.

லூக்கின் இந்தச் சாகசம், பொக்ஸ் தொலைக்காட்சியில் நேரடி ஒளிபரப்பானது. லூக்குடன் மேலும் மூவர் குதித்தனர். லூக்கிடம் பரசூட் இல்லாததால் அவருக்குப் பாதுகாப்பு வழங்கவும், நிகழ்வை நேரடியாகப் படம் பிடிக்கவும் இந்த ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இவர் தனது 12 ஆவது வயது தொடக்கம் வானத்தில் இருந்து குதித்து வருகிறார். லூக்கின் தந்தை, பாட்டன் ஆகியோர் வான் குதிப்பு வீரர்களாவர். லூக்கின் மனைவி 2 ஆயிரம் குதிப்புக்களை நிகழ்த்தியுள்ளார். கடற்படை வீரர்கள், விமானப்படை வீரர்களுக்கு பயிற்சி வழங்குவது லூக்கின் வாழ்வாதாரத் தொழிலாகும். (ற-ரி4)

# ...தை எதிர்கொள்ள ...வாதிகள் திணறல்

## ...ட்டு சரணடைகின்றனர்



...ிரவாதிகள் ஆயுதங் ...சரணடைந்தால் உயிர் ...எனவும் சிரிய இராணு ... பிரசுரங்கள் மூலம் ...ந்தது.

...தே கணிசமானளவு ...தற்போது சரணடைந் ...தெரிவிக்கப்படுகின்றது.

சரணடைந்தவர்களின் துல்லியமான எண்ணிக்கைகள் இன்னும் வெளியிடப்படவில்லை. சிரிய ஜனாதிபதி பர் அல்-அசாத் கிழக்கு சிரியாவில் மோதல் ஆரம்பித்தவுடன், ஆயுதங்களை கைவிட்டு விட்டுச் சரணடைபவர்களுக்கு பொதுமன்னிப்பு வழங்கப்படும் என அழைப்பு விடுத்திருந்தார். (ற)



சோமாலியத் தலைநகர் மெகடிசுவில் உள்ள ஒரு பொலிஸ் கட்டடம் மீது அல் சபாப் தீவிரவாதிகள் மேற்கொண்ட கார்க் குண்டுத் தாக்குதலில் ஏழு பேர் உயிரிழந்தனர். இரு தீவிரவாதிகள் உட்பட ஏழு பேர் உயிரிழந்தனர் ... பொலிஸ் அதிகாரி தெரிவித்தார். குற்றப் புலனாய்வுத் துறைத் (சி.ஐ.டி) தலைமை ... வெளியே இரண்டு கார்க் குண்டுகள் தொடர்ந்து வெடித்துள்ளன. ஆபிரிக்காவைத் தளமாகக் கொண்டு இயங்கும் அல்-கொய்தா மற்றும் அல்-சபாப் தீவிரவாதக் குழுக்களுக்கும் அரச படைகளுக்கும் இடையே கடுமையான மோதல்கள் ஒரு தசாப்த காலமாக இடம்பெறுகின்றன. (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# உங்களுக்கு வியாழ மாற்றம் எப்படி? மிதுனம்

குருப் பெயர்ச்சி, ஓகஸ்ட் 2ஆம் திகதி, தமிழுக்கு ஆடி 18 ,ஆடி அமாவாசை சுவடிய நன்னாளில் காலை 9.24 மணிக்கு சிம்ம ராசியில் இருந்து கன்னி ராசிக்கு குரு மாறுவதால் ஏற்படுகிறது. கன்னி ராசிக்கு மாறும் குரு உங்கள் ராசிக்கு எந்த இடத்தில் இருக்கிறார். அதனால் உங்கள் ராசிப்படி உங்களுக்கு ஏற்படும் நன்மை–தீமைகளைப் பற்றிப் பார்ப்போம். அதிக ஆதாயம் அடையும் ராசியினர் – இடபம், சிம்மம், விருச்சிகம், மகரம், மீனம் இவர்கள் ராசிக்கு குரு 2,5,7,9,11 என முழு சுப பார்வை செலுத்துவதால் இந்த ராசியினருக்கு அதிக நன்மைகள் கிடைக்கும்.

**மிருகசீரிம் 3, 4 பாதங்கள்,
திருவாதிரை, புனர்பூசம், 1, 2, 3 பாதங்கள் வரை**



எவரிடமும் எளிதாக நெருங்கிப் பழகும் மிதுன ராசி அன்பர்களே! அடுத்தவர் நலனில் அதிக அக்கறை எடுத்துக் கொள்பவர்கள் நீங்கள். பிறரைப் புகழ்ந்து சொல்லியே காரியம் சாதிப்பதில் வல்லவர்கள். மற்றவர்களைப் பார்த்த மாத்திரத்தில் பழக்கத்தை ஏற்படுத்திக் கொண்டு விடுவீர்கள். எவரேனும் சிறிய உதவி செய்தால் கூட அதை அவர்களிடம் அடிக்கடி எடுத்துக் கூறி நன்றிகாட்டுவீர்கள். சமூகத்தில் உங்களுக்கென்று ஒரு தனி அந்தஸ்து இருக்கும்.

களத்திர ஸ்தானாதிபதியாக குரு விளங்கினாலும், உபய ராசியாக உங்கள் ராசி அமைவதால் பொருத்தம் பார்த்து திருமணம் செய்தால் தான் பொன்னான வாழ்க்கையை அமைத்துக் கொள்ள இயலும்.தனாதிபதியாக சந்திரன் விளங்குவதால் எப்பொழுதும் உங்கள் கரங்களில் எவருடைய பணமாவது புரண்டு கொண்டுதான் இருக்கும்.

நண்பர்கள் புடை சூழ இருக்கும் பொழுது நகைச் சுவையாகப் பேசி எதிரிகளை மடக்கி விடுவீர்கள். மன உறுதி மிக்கவர்களாக நீங்கள் இருப்பதால் எதையும் சாதித்துக் காட்டும் திறமை உங்களுக்கு உண்டு. ஒருவர் எதைச் செய்ய முடியாது என்று சொல்கிறார்களோ, அதைச் செய்து காட்டுவீர்கள். உங்கள் ராசியைப் பொறுத்தவரை வரவிருக்கும் குருப்பெயர்ச்சி, அர்த்தாஷ்டம குருவாக அமைகிறது. அதன் விளைவு எப்படியிருக்கும் என்பதைப் பற்றிப் பார்ப்போம்.

**வந்து விட்டது குருப்பெயர்ச்சி!**

உங்கள் ராசிக்கு 3 இல் சஞ்சரித்து வந்த குரு பகவான், 2.8.2016 முதல் 4 ஆம் இடமான சுக ஸ்தானத்தில் சஞ்சரிக்கப் போகிறார். அஷ்டமத்தில் பாதி வலிமையைப் பெறுவதால், அர்த்தாஷ்டம குரு என்ற பெயரைப் பெறுகின்றது. இந்த நேரத்தில் அலைச்சல் அதிகரிக்கும். விரயம் அதிகமாகும். மன உளைச்சல் கூடும். மாற்றங்களும், ஏமாற்றங்களும் வந்து சேரும் என்றெல்லாம் நீங்கள் நினைக்க வேண்டாம். ஏனெனில் 7, 10 ஆகிய இடங்களுக்கு அதிபதியான குரு 4 ஆம் இடத்தில் சஞ்சரித்து, கேந்திராதிபத்ய தோசத்தை உண்டாக்கினாலும், அதன் பார்வை அதற்குரிய சொந்த வீட்டின் மீதே பதிகிறது. எனவே தோசத்தை யோகமாக மாற்றும் தன்மை உருவாகப் போகிறது. அது மட்டுமல்ல, அதன் பார்வை 8,10, 12 ஆகிய இடங்களிலும் பதியப் போகிறது. எனவே நான்காமிடத்தில் சஞ்சரிக்கும் குரு முட்டுக்கட்டைகளுக்கு மத்தியில் முன்னேற்றத்தைக் கொடுப்பார். கட்டுக் கடங்காத எதிர்ப்புகள் வந்தாலும் கடைசியில் வெற்றியை வழங்குவார். விட்டுக் கொடுத்துச் செல்வதும், விவேகத்தோடு நடந்துகொள்வதும், சிலரிடம் பட்டும்படாமல் பழகுவதும் தான் இந்தக் காலத்தில் உங்கள் முயற்சிக்கு அனுகூலம் தரும்.

அர்த்தாஷ்டம குருவாக வரும் பொழுது ஆரோக்கியத் தொல்லை அதிகரிக்கும். கொடுத்த கடனை வாங்க முடியவில்லையே, வாங்கிய கடனைக் கொடுக்க முடியவில்லையே என்று கவலை கொள்வீர்கள். அடுத்தடுத்து விரயங்கள் வந்தால் எவரிடம் போய் உதவி கேட்பது என்ற சிந்தனை மேலோங்கும். கட்டடப்பணி பாதியிலேயே நிற்கலாம். கடல் தாண்டிச் சென்றவர்கள், அங்கு வேலை கிடைக்காமல் தடுமாறக்கூடும். (தொடரும்)

பிரம்மஸ்ரீ
து.இ.ஞானஸ்கந்த சர்மா

# மாவைக்கந்தனின் விரதங்களும் அதன் பலன்களும், அனுக்கிரகங்களும்

கோவிற்கடவையில் உறைந்திருக்கும் அம்பலவாண சுவாமி, கந்தசுவாமியாரை ஈழத்தின் மூத்த குடிமக்களாகிய ஆரியர், இயக்கர், நாகர் பூவும் தண்ணீரும் சேர்த்து நைவேதித்து பூசை ஆராதனைகளைச் செய்து வந்துள்ளனர். மகாபாரதம் அஸ்வமேத பர்வணி 92ஆம் அத்தியாயத்தின் படி நகுலமுனிவர் இங்கு வந்து தவமியற்றியமை புலப்படுகிறது. கோவிற்கடவையில் நகுலமுனி சாபம் நீங்கியதால் நகுலகிரி, நகுலாசலம், நகுலேஸ்வரம் எனும் பெயர் பெற்றது. இன்றும் கடற்கரை மலை அடிவாரத்தின் ஒரு பகுதியில் பன்னீர்ப்பத்திர விருட்சம் இருப்பதைக் காணலாம். 7ஆம் நூற்றாண்டளவில் சோழ அரசனின் மகள் இளவரசி மாருதப்புரவீகவல்லி வருகை தந்து வழிபாடுகள் நடத்தி, அவளது குதிரை முகம் நீங்கி சாபவிமோசனம் பெற்றமையால் மாவிட்டபுரம் என்ற பெயருடன் காங்கேய மூர்த்தி காயாத்துறையில் வந்து இறங்கியமையினால் காங்கேயன்துறை எனப்பெயர் கொண்டு, அன்றுமுதல் பெரியமனத்துள்ளார், சின்னமனத்துள்ளார் பரம்பரையில் வந்த தீட்சிதர்களால் இந்த ஆலய பரிபாலனங்களைப் பொறுப்பேற்று கி.பி.789 ஆம் ஆண்டு முதல் இன்று மாவை ஆதீனப்பேரரசுவினால் மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசுவாமியாரின் பூசைகள், திருவிழாக்கள், ஆலய பரிபாலனங்கள் அனைத்தும் நடத்தப்பட்டு வருகின்றன.

வைகாசி மாதத்தில் விசாக நட்சத்திரமும் பௌர்ணமி திதியும் சேர்ந்து கார்த்திகைக்குமரன் திருமுருகனுக்கு உகந்த ஒரு திருவிழா நன்னாளாகும். பௌர்ணமி தொடங்கும் போது அதில் விசாக நட்சத்திரம் வந்து சேர்வதே வைகாசிமாதம் எனப்படும். இதுவே வைகாசி எனக்கூறப்பட்டு அது பிறழ்ந்து வைகாசி என்றாயிற்று. வேதகாலம் முதல் கார்த்திகை நட்சத்திரமே முதலாவதாக இருந்தது. பூஜை முறைகளிலும் கார்த்திகை முதலாவதாக பரணியந்தமாக கிரமங்கள் உண்டு. கார்த்திகை விரதத்தை விநாயகப்பெருமான் கூறியவாறு நாரத முனிவர் அனுஸ்டித்து முருகன் அருளால் தேவ ரிஷியாகப் பதவி பெற்றார். வேறு சிலரும் கார்த்திகை விரதம் நோற்று நற்கதி அடைந்தனர். இந்தக் கூற்றை கார் நாற்பது இருபத்தியாறாவது செய்யுள் உரைக்கின்றது.

நவக்கிரகங்களில் செவ்வாயுடன் நேரடி சம்பந்தம் உடையவன் முருகன். எனவே செவ்வாய்க்கிழமை விரதமும் முருகனுக்குரியதாயிற்று. இதிலும் ஆடிச்செவ்வாய் மிகமிக உயர்ந்தது. முன்பொரு யுகத்தில் பேரழிவுகள் ஏற்பட்ட சமயத்தில் பூமி உருண்டையின் செம்மண் பகுதி நிலப்பரப்பிலிருந்து உடைந்து சிதறிய ஒரு பகுதியே செவ்வாய் என்பது அறிஞர்களின் கருத்து. இதனாலே செவ்வாய்க்கு பௌமன், பூமி புத்திரன் என்ற பெயர்கள் உண்டானதென்பர். செவ்வாய்க்கிரகத்துக்கு அதிதேவதை, பிரத்யதி தேவதை என தேவதைகள் சில உண்டு. அதன்படி செவ்வாய்க்கு அதிதேவதை பூமியாகும். பிரத்யதி தேவதை ஸ்கந்தப்பெருமானாகும். இவ்வாறே செவ்வாய்க்கும், பூமிக்கும், முருகனுக்கும் தொடர்புள்ளதால்தான் பூமியில் செவ்வாயின் அம்சமாகக் கார்த்திகை குமரனாகிய முருகனை வழிபடுகின்றோம்.

சுக்கிரவாரம் எனும் வெள்ளிக்கிழமை விரதம். கார்த்திகைக் குமரனாகிய முருகப்பெருமானுக்கு உகந்த விரதமாகும். முன்னொரு சமயம் ஸ்ரீ மஹாலட்சுமி தேவி பிருகு என்ற மகரிஷிக்கு மகளாய்ப் பிறந்து பார்கவி என்ற பெயர் பெற்றிருந்தாள். அப்பொழுது அந்த பிருகு முனிவருக்கு மகனாகப் பிறந்தவர் இந்தச் சுக்கிரன் என்ற வெள்ளி. எனவே வெள்ளி மகாலக்ஷ்மிக்கு சகோதரன் முறையாகிறார். எனவே சுக்கிரனோடு கூட முருகப்பெருமானின் இரு சக்திகளாகிய மகாவல்லி, கஜவல்லியின் தாயார் மகாலக்ஷ்மியின் பேரருளும் நமக்கெல்லாம் கிட்டும்.

திருக்கார்த்திகைக்குமரன் கந்தனுக்கு உகந்த திருவிழா நாள்களில் தைப்பூசம் சிறந்தது. தைமாதம் பௌர்ணமியும் பூசம் என்ற நட்சத்திரமும் சேர்வதே பூசமாதமாகும். அதுவே சுருங்கி தை என்ற தைமாதப் பெயராக வடிவெடுத்தது. மகரம் என்ற இராசியில் சூரியன் சஞ்சரிக்கும் ஒருமாத காலமே மகரமாதம் என்று கூறவேண்டும். பூச நட்சத்திரத்தில் தேவதை பிரகஸ்பதியாக குருவாவார். நவக்கிரகத்தில் குருவுக்கும் பூச நட்சத்திரத்தில் முருக[illegible]டைய கு[illegible] முருகப்பெருமானின் திருவருளும் பெற்று உய்வோமாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பங்குனி உத்தரம் திருமுருகனுக்குகந்த ஒரு திருநாளாகும். முருகப்பெருமான் ஸ்ரீவள்ளி அம்மையை திருமணம் கொண்டருளிய நன்னாள் இந்தப் பங்குனி உத்தரப்பெருநாளாகும். ஸ்ரீவள்ளி மணாளனாகிய கார்த்திகைக்குமரனாம் முருகப்பெருமானை வழிபட்டு வாழ்வில் சகல நன்மைகளும் பெற்று மகிழ்வோமாக. மேலும் முருகப்பெருமானை ஆராதிக்க வேண்டிய முக்கிய அம்சங்கள் கொண்ட நிறைந்த திருநாள்களிலே ஐப்பசிமாதம் கந்தசஷ்டி விழா, கார்த்திகை மாதம் தீபத்திருநாள் விழா இப்படியாக புராணங்களிலும், வேத ஆகமங்களிலும் , இதிகாச, இலக்கியங்களிலும் கூறப்பட்டுள்ளபடி முருகப்பெருமானின் விரதகாலங்களில் போற்றிப்புகழ்ந்து அவன் அருளாலே அவன்தாழ் வணங்குவோமாக.



*முருகா என உனைஓதும் தவத்தினர் மூதுலகில்*
*அருகாத செல்வமடைவர் வியாதியடைந்து நையார்*
*ஒரு காலமும் துபம் எய்தார் பரகதியுற்றிடுவார்*
*பெருகாலன் நாடுபுகார் மாவைநகர் புண்ணியனே*

செ.அன்புராசா

# பேராபத்தை ஏற்படுத்தும் பேருந்துகள்!

ஐந்து மாதங்களுக்கு முன் மாங்குளம் சந்தியில் உடன் பணியாளர் ஒருவருடன் நின்றுகொண்டிருந்தேன். முல்லைத்தீவில் இருந்து தனியார் பேருந்து வவுனியாவுக்குச் செல்வதற்காக ஏ-9 வீதியில் மாங்குளச் சந்தியில் வந்து தரித்து நின்றது. மல்லாவிப் பக்கமாக இருந்து வவுனியாவுக்குச் செல்ல இருவர் வந்து கொண்டிருந்தனர். முல்லைத்தீவில் இருந்து வந்த மேற்சொன்ன தனியார் பேருந்தின் சாரதி புறப்படுவதுபோல ஓரிரு அடி முன்னே போவதும், பின், பின்னே வருவதுமாக, பேருந்தைத்தாலாட்டிக்கொண்டிருந்தார். ஆறு, ஏழு நிமிடங்களாக. பேருந்தை வைத்துக்கொண்டு ஒரு வீதி நாடகத்தையே நடத்திக்கொண்டிருந்தார்!

வந்த இரு பயணிகளில் ஒருவரோ இந்தத் தனியார் பேருந்தில் பயணிக்க விரும்பாமல் இ.போ.ச. பேருந்து நிறுத்தும் இடத்துக்குச் சென்றுகொண்டிருந்தார். மற்றயவர், அவரை அழைத்து, முல்லைத்தீவில் இருந்து வந்த தனியார் பேருந்தைச் சுட்டிக்காட்டி, "இந்தா வெளிக்கிடப்போகுது! இந்த பஸ்சில போவம் வா!" என்று அவனைக் கேட்க அவன், "அவன் (சாரதி) அப்பிடித்தான் வெளிக்கிடுறதுபோலப் பாசாங்கு செய்வான்! ஆனா, அவன் இப்ப வெளிக்கிடமாட்டான்!" எனப் பதில் சொல்கிறார். முன்னையவரோ மீண்டும், "இல்லையடா, இந்தா... இந்தா பார்! வெளிக்கிடுது!" என்றுரைக்க, இரண்டாமவரோ வடிவேல் நகைச்சுவைப் பாணியில் "வெளிக்கிடும், ஆனா, இப்ப வெளிக்கிடாது!" என்று கூற இப்படியே அவர்கள் இருவரும் மாறிமாறிப் பேசிக்கொண்டிருக்க யாழ்ப்பாணத்தில் இருந்து வந்த இ.போ.ச. பேருந்து அந்த இடத்தை அடைந்தது. இரண்டாமவர் அதில் ஏறிக்கொள்கிறார். முன்னயவர் அப்பேருந்தில் செல்வதற்காகத் தனியார் பேருந்திலிருந்து இறங்கி ஓடி வருவதற்குள் அந்த இ.போ.ச. பேருந்து தாமதிக்காமல் சென்றுவிடுகிறது. முன்னயவர் முன்பு ஏறியிருந்த தனியார் பேருந்தில் மீண்டும் ஏறச் செல்லச் சென்றபோது இ.போ.ச. பேருந்தில் அவர் ஏறச்சென்றதால் கோபமடைந்த சாரதி அவரை ஏற்றாமல் சென்றுவிடுகிறார். இப்போது ஒன்றாக வந்த இருவரில் ஒருவர் வவுனியாவை அண்மித்துக்கொண்டிருக்கிறார். மற்றயவர் இரண்டு பேருந்துகளையும் விட்டு விட்டுச் சந்தியில் அடுத்த பேருந்துக்காகக் காத்துக்கொண்டு இருக்கிறார்!

**தெரிந்துகொண்டு தெளிவாக மீறுகிறார்கள்!**

யாழ். திருநெல்வேலிப் பகுதியில் மாசித் திங்கள் 03ஆம் நாள் கோரவிபத்து ஒன்று இடம்பெற்றது. இந்த விபத்தை ஏற்படுத்திய சாரதி இ.போ.ச. பேருந்தை முந்திச் செல்வதற்காகத் தான் செல்ல வேண்டிய பக்கத்தை விட்டுப் பிழையான பக்கத்தினால் மோட்டுத்தனமாகவும் அதிவேகமாகவும் மினி பஸ் சினைச் செலுத்தி இருக்கிறார். இந்த நிலையில் எதிரே சரியான பக்கத்தில் வந்துகொண்டிருந்த ஓட்டோவை மோதித்தள்ளிய பின், கட்டுப்பாட்டை இழந்த நிலையில் அப்பகுதியில் உள்ள கம்பம் ஒன்றுடன் மோதுண்டே அந்த வாகனம் ஓய்வுக்கு வந்தது. இந்தச் சம்பவம் பற்றிய தெளிவை யாழ். நீதிமன்றம் துல்லியமாக கோடிட்டுக்காட்டி உள்ளது.

இந்த விபத்தில் ஓட்டோவில் பயணம் செய்துகொண்டிருந்த ஆரம்பப் பிரிவு பாடசாலை செல்லும் பாலகன் சுவஸ்தீகனும் அவன் தாயும் படுகாயமடைந்த நிலையில் யாழ். மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு 05 நாள்கள் அதிதீவிர சிகிச்சையின் பின் சுவஸ்தீகன் பரிதாபகரமாக உயிரிழந்தான். பாடசாலை முடிந்ததும் தாய் மகனை அழைத்துக் கொண்டு ஓட்டோவில் வீட்டுக்குச் செல்லும் வழியில் தான் இந்தப் பயங்கரம் நிகழ்ந்துள்ளது. அதுவும் குழந்தை வரம் இன்றி, பல வருடங்கள் தவமிருந்து பல மருத்துவ சிகிச்சைக்குப் பின்னர் அரிதாய் அந்தப் பெற்றோர் பெற்றெடுத்த மகவு சுவஸ்தீகன்.

**வீதிவிபத்துச் சாவு மனித உயிர் பறிப்பே!**

இந்தச் சாரதியைப் பிணையில் செல்ல அனுமதி வழங்க மறுத்த யாழ். நீதிவான் சி.சதீஸ்தரன், இந்தச் சம்பவத்தை ஒரு வீதி விபத்துச் சாவு என்பதற்கப்பால் ஒரு மனித உயிர் பறிப்பு எனக் குறிப்பிட்டார். ஒரு மனித உயிர்போக்கல் என்ற குற்றத்துக்குரிய வகைப்படுத்தலுக்குள் இச்செயல் பார்க்கப்படவேண்டும் என்றும் இத்தகைய மனித உயிரைப் பறிக்கும் பாரதூரமான குற்றங்களைப் புரிந்துவிட்டு தம் பக்கத்தில் உள்ள நியாயங்களை முன்வைத்து சந்தேகநபர் இலகுவாகத் தப்பிக்க நீதிமன்று இடமளிக்காது என்றும் கூறியிருந்தார்.

இந்த விபத்துக் குறித்து விரைவான - விரிவான விசாரணைகளை மேற்கொள்ள சட்டமா அதிபரின் ஆலோசனையைப் பெறும்படி நீதிவான் பொலிசாருக்கு கட்டளையும் பிறப்பித்தார். பணத்துக்காக வீதிப்போக்குவரத்து விதிகளை மீறிப் போட்டி போட்டுப் பேருந்துகளைச் செலுத்தும் சாரதிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுத்து அவர்களை உடன் நீதிமன்றில் நிறுத்துமாறும் பொலிசாருக்கு நீதிவான் ஆணையிட்டார்.

**'பங்கர்'தண்டனை !**

அதிவேகமாகவோ, அசட்டையீனமாகவோ, மது அருந்திவிட்டோ வாகனம் செலுத்தி கோர வீதி விபத்துக்களை ஏற்படுத்தும் சாரதிகளை வெளிநாடுகளில் இருவாரங்களுக்கு இருட்டறையில் வைத்திருப்பதாகச் சொல்கிறார்கள். அந்தப் பாணியில்தான் 2009ஆம் ஆண்டுக்கு முன் கோர விபத்தை ஏற்படுத்தும் சாரதிகளுக்குஎம்பிரதேசத்தில்'பங்கர்அனுபவம்' கொடுக்கப்பட்டது. அத்தகைய தண்டனை பலருடைய விமர்சனங்களுக்கு உட்படுத்தப்பட்டாலும், அவ்வாறு தண்டனை கொடுக்கப்பட்டபடியினால்தான் அன்றைய காலப் பகுதியில் இன்றுபோல கோர வீதி விபத்துக்கள் நடைபெறவில்லை என்று அறுதியிட்டுக் கூறமுடியும். காரணம் 'பங்கர்' தண்டனையை நினைப்பவர்கள் அதிவேகமாகவோ, அக்கறையற்றோ அன்றேல் மது அருந்திவிட்டுச் செலுத்துவதையோ இம்மியளவும் எண்ணிக்கூட பார்க்கமாட்டார்கள்!

> **2009ஆம் ஆண்டுக்கு முன் கோர விபத்தை ஏற்படுத்தும் சாரதிகளுக்கு எம் பிரதேசத்தில் 'பங்கர் அனுபவம்' கொடுக்கப்பட்டது. அத்தகைய தண்டனை பலருடைய விமர்சனங்களுக்கு உட்படுத்தப்பட்டாலும், அவ்வாறு தண்டனை கொடுக்கப்பட்டபடியினால் தான் அன்றைய காலப் பகுதியில் இன்றுபோல கோர வீதி விபத்துக்கள் நடைபெறவில்லை என்று அறுதியிட்டுக் கூற முடியும்.**

எனவே, பொதுமக்கள் இந்நாள்களில் கோருவதுபோல போக்குவரத்து விதிகளை மீறிக் கோரமான வீதி விபத்துக்களை ஏற்படுத்தும் சாரதிகளுக்குத் தண்டனைகள் அதிகரிக்கப்படுவதும் காலதாமதம் இல்லாமல் அவை நிறைவேற்றப்படுவதும் வீதி விபத்துக்களால் ஏற்படும் சாவுகளை குறிப்பிடத்தக்க எண்ணிக்கையில் குறைக்க உதவும். மேலும் உயிரிழப்பை ஏற்படுத்தும் சாரதிகளுக்கு எதிராகக் கொலைக்குற்றம் என்றே வழக்குகள் தாக்கல் செய்யப்படவேண்டும் என யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் முன்மொழிந்திருப்பது அநியாய வீதி விபத்துக்களால் ஏற்படும் சாவுகளைத் தடுக்க நிச்சயம் வழிசெய்யும் எனத் துணிந்து கூறலாம்.

**விபத்துக்களை தடுத்து நிறுத்த விண்ணப்பம்!**

சுவஸ்தீகனின் சாவைத் தொடர்ந்து மாசித் திங்கள் 12ஆம் திகதி ஆரம்பப் பாடசாலைகளின் பெற்றோர்கள் ஒன்று திரண்டு தனியார் பேருந்துகளை இடைமறித்து வீதிவிபத்துக்களைத் தடுக்க கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தினார்கள். அதனைத் தொடர்ந்து யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி, வட மாகாண முதலமைச்சர், வட மாகாண போக்குவரத்து அமைச்சர் மற் றும் யாழ். பிராந்திய மூத்த பொலிஸ் அத்தியட்சகர் ஆகியோரிடம் வீதி விபத்துக்களைத்தடுக்க ஆவன செய்யுமாறு கோரும் மனுவையும் கையளித்தார்கள். விபத்தை ஏற்படுத்தும் சாரதிகளுக்கு வழங்கப்படும் அதிகபட்ச தண்டனை ஏனைய சாரதிகளுக்குப் படிப்பினையாக அமையும் என்று அவர்கள் அம்மனுவில் வலியுறுத்தியுள்ளமை கவனத்திற்குரியது.

**விதி மீறுவது பலருக்கு விதியாகிறது!**

சுவஸ்தீகனின் இறுதிச் சடங்கு மாசித் திங்கள் 09ஆம் திகதி நடைபெற்றபோது அந்தப் பாலகனின் பெயரில், "இனி ஒரு விதி செய்வோம்" என்ற பெயரில் ஒரு துண்டறிக்கை வெளியிடப்பட்டது. வாசித்த போது இதயத்தின் வலி தவிர்க்க முடியாது போனது! இதயமுள்ள, மனித உயிர்களை நேசிக்கும் சாரதிகள் இதனைப் பார்த்தாவது திருந்தவேண்டும் என வினையமாக அது வேண்டியும் இருக்கிறது. அந்தத் துண்டறிக்கையில் -

(தொடரும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT



## 'சீட்டா'

சீட்டா என்று அழைக்கப்படும் இந்த மிருகம் த்ரையில் வாழும் மிருகங்களி லேயே மிகவும் வேகமாக ஓடக் கூடியது. ஒரு மணி நேரத்தில் 100 கிலோமீற்றர் வேகத்துக்கு மேல் ஓடக் கூடியது. ஒரு மணிநேரத்தில் சராசரியாக 70 முதல் 75 மைல் வரை ஓடும் இந்த மிருகம், பூனை குடும்பத்தைச் சேர்ந்தது. சீட்டா மிருகம் மரத்தில் ஏறக்கூடியி திறமை உடையது. இது தான் வேட்டையாடிய உணவை தேவையானபோது உண்பதற்காக மரத்தில் பாதுகாப்பாக சேமித்து வைக்கும். இவை பெரும்பாலும் மரத்திலும் புதர் மறைவிலும் வசிக்கும்.

## வரலாற்றில் இன்றைய தினம்

1715 - இங்கிலாந்தில் கலவரம் தொடர்பான சட்டம் நடைமுறைக்கு வந்தது.

1838- பிரித்தானிய பேரரசின் பல பாகங்களில் அடிமைத் தொழிலாளர்கள் விடுவிக்கப்பட்டனர்.

1914- ஜேர்மன் பேரரசு ரஷ்யப் பேரரசின் மீது போர்ப் பிரகடனம் செய்ததையடுத்து முதலாவது உலக போர் தொடங்கியது. இதனையடுத்து சுவிஸ் படை தயார்படுத்தப்பட்டது.

1980 - ஐஸ்லாந்தின் ஜனாதிபதியாக விக்டிஸ் பின்பொகெடாற்றி தேர்ந்தேடுக்கப் பட்டதன் மூலம் உலகின் நாடொன்றில் முதன் முதலாக ஜனநாயக தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட பெண் தலைவரானார்.

2008 - உலக புகையிரத முறைமையில் மிக வேகமான புகையிரதசேவைப்பாதை பீஜிங் தினான் ஜின் இன்டர் சிற்றி புகையிரத நடவடிக்கை தொடங்கப்பட்டது.

2014 - பெண்களுக்கு எதிரானமற்றும்வீட்டுவன் முறைக்கு எதிராக தடை மற்றும் பாதுகாப்பு பட்டயம் நடைமுறைக்கு வந்தது.



## சோளம்!

சோளம் உலகத்தில் உள்ள பல பாகங்களில் பயிரிடப் படுகின்றன.
அமெரிக்காவில் உருவான இது இந்தியர்களுக்கு முக்கிய உணவாக இருந்தது.
அமெரிக்காவில் வாழ்ந்த பழைய ஐரோப்பியர்களுக்கு இந்தத் தானியம்தான் உணவாக இருந்தது. பெரும்பாலான அமெரிக்க சோளம் ஆடுமாடுகளின் தீவனமாக இப்போது பயன்படுத்தப் படுகிறது. இனிப்புத் தானியமாக சிலர் பயன்படுத்துகின்றனர். வேறு சிலர் சோளத்தை மாவாக்கியும் பயன்படுத்துகின்றனர்.



## ஞானியும் பணக்காரனும்

ஞானி ஒருவரைச் சந்தித்த பணக்காரன் ஒருவன், சுவாமி! என்னிடம் நிறைய செல்வம் இருக்கிறது. விளை நிலங்களும் ஏராளமாக உள்ளது. உடலும் ஆரோக்கியமாக இருக்கிறது. எனவே நான் யாரையும் சார்ந்து வாழ வேண்டிய அவசியம் இல்லை. எவரிடமிருந்தும் எந்த உதவியும் எதிர்பார்க்க வேண்டிய அவசியமும் இல்லை! எனப் பெருமையடித்துக் கொண்டான்.
புன்சிரிப்போடு அதைக் கேட்ட ஞானி, வா! சற்று தூரம் நடந்துவிட்டு வரலாம்! என்றார். கடுமையான வெயிலில் போக வேண்டுமா? என தயங்கினாலும், ஞானி கூப்பிடும்போது மறுப்பது நன்றாக இருக்காது என்பதால் கிளம்பினான். சிறிது தூரம் சென்றதுமே வெப்பம் தாங்காமல் தவித்த பணக்காரன், ஏதாவது நிழல் இருந்தால் சற்று ஒதுங்கலாமே என எண்ணி சுற்றும் முற்றும் பார்த்தான். எந்த நிழலும் தென்படவில்லை.
ஞானி கேட்டார், என்ன தேடுகிறாய்?
நாம் சற்று இளைப்பாற ஏதாவது நிழல் இருக்கிறதா எனப் பார்த்தேன். ஏன் உன் நிழல் உள்ளதே, அதில் நீ ஒதுங்கிக்கலாமே? சுவாமி! என் நிழலில் நான் எப்படி இளைப்பாற முடியும்? என்னப்பா இது... நீ யாரையும் எதையும் சார்ந்து வாழத் தேவையில்லை.உன் பொருள்களே உன்னைக் காப்பாற்றும் என்று சற்று முன்புதானே கூறினாய்? ஆனால், இப்போது உன் நிழலே உனக்கு உதவவில்லை என்கிறாயே? என்றார்.
செல்வந்தன் உண்மையை உணர்ந்தான்.





## வர்ணம் தீட்டுவோம் வாங்க....



## அப்துல் கலாம்



ஏழையாகப்
பிறந்த கலாம்
ஏவுகணை
தந்த கலாம்
இந்தியாவின்
சொத்து கலாம்
எங்களது
அப்துல் கலாம்

இராமேஸ்வரம்
தந்த கலாம்
இராணுவத்தை
வளர்த்த கலாம்
இராப்பகலாய்
உழைத்த கலாம்
இராஷ்ட்ரபதி
எங்கள் கலாம்

இல்லறத்தைத் துறந்த கலாம்
இளைஞர்களை நம்பும் கலாம்
வள்ளுவனைத் துதிக்கும் கலாம்
வந்துதித்த எங்கள் கலாம்

தமிழனாகப் பிறந்த கலாம்
தலைநிமிர வைத்த கலாம்
நமதினிய முத்து கலாம்
நாடு போற்றும் அப்துல்கலாம்



## விடுகதைகள்

1. இரு கொம்புகள் உண்டு மாடு அல்ல, வேகமாய் ஓடும் மான் அல்ல, கால்கள் உண்டு மனிதனல்ல. - அது என்ன?
2. கட்டிய சேலையை அவிழ்க்க நினைத்தால் கண்ணீரும் கம்பலையும்தான் - அது என்ன?
3. இடி இடிக்கும், மின்னல் மின்னும், மழை பெய்யாது- அது என்ன?
4. உயிர் இல்லாத நீதிபதியிடம் ஒழுங்கான நியாயம்- அது என்ன?
5. ஆயிரம் பேர் அணி வகுத்தாலும் ஆரவாரம் இராது- அவர்கள் யார்?
6. உடல் சிவப்பு, வாய் அகலம், உணவு காகிதம்- நான் யார்?

விடைகள்:

1. சைக்கிள், 2. வெங்காயம் 3. பட்டாசு, 4. தராசு, 5. எறும்புக் கூட்டம், 6. அஞ்சல் பெட்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லிணக்கப்பாடு வேண்டும்..! வஞ்சனைகள் வேண்டாம்..! தமிழர்களுக்கு உதவுங்கள்..!

இலங்கைத்தீவிலே விடுதலை எனும் உணர்வால் உயர்ந்தும் அழிவு எனும் சகதியில் அமிழ்ந்தும் அல்லாடுகின்ற ஓர் சமூகமாக விளங்குபவர்கள் தமிழர்கள். இப்போதும் அழிவின் சார்பு நிலை விலங்கிடலினுள் தலை சாய்த்தபடி மண்டியிட்டே காலங்களின் ஒழிதல் என்ற சாய்தல்களுள் சஞ்சரிக்கின்றனர். விடுதலையின் குரல் நாவறண்டபடி விம்முகிறது. உயிரழிவு, சொத்தழிவு, உள அழிவு, வன்கொடுமை, சமூகச் சீரழிவு, கடத்தல் மறைவு, காணாமற் போதல், ஒளிவு என அத்தனை வலிகளும் தீராத நீண்ட ஒலிகளாக குரல்வழியே ஒன்றிணைந்து ரணங்களை உரசுகின்றன. தீர்வெனும் மருந்திடல்கள் காயங்களை ஆற்றுப்படுத்தவில்லை. கால நகர்விடை திண்மமாகி மேட்டுப்படுக்கைபோலக் கனக்கிறது. மூன்று தசாப்தங்களின் குருதி வாடைகளும் இனவாதத்தின் மேலாதிக்க மே(ந)டைகளும் நரக தேவதைகளை தமிழர் தேசமெங்கும் அழைத்து உலவவிட்டிருக்கின்றது. ஒன்றுகூடி ஒட்டுண்ணியாய் குருதியைக் குடிக்கின்றன. குடித்தவை இன்று கதிரையிட்டு அமர்ந்து கேள்விகளில் அடிமேல்அடி கொடுத்து வார்த்தைகளில் உதைக்கின்றன. விடியலின் அஸ்தமனமான விடுதலையின் சொர்க்கவாசல் இன்னமும் புலரவில்லை. தமிழருக்காய் எதனையும் சாதகம் செய்யவில்லை...!

ஆக, தற்போது நல்லாட்சியின் வழிப்பயணம் நல்லிணக்கம், இன சமத்துவம் என்பவற்றை வார்த்தைகளிலேயே வல்லினமாய் வன்மம் செய்கின்றன. அந்தச் சொல்லுக்குரிய இலக்கணமாக,செயலியக்கமாக எந்த நகர்வுகளையும் கடந்து சென்ற ஈராண்டுகளுள் விரைவுறச்செய்யவில்லை..! ஐ.நா. மன்றங்களின் பரிந்துரைகள், அறிக்கைகளின் சொரிவுகள், அதிலுள்ள அற்ப சொற்ப உதிர்வுகள் என சிலதை சாட்டுதல் செய்கின்றன. தீர்வுக்கான உள்ளீடாக ஏற்று நல் மாற்றீடுகளைச் செய்யவில்லை..! நீதி விசாரணை,அதற்கான பொறிமுறை என்பன திடமின்றி இன்னமும் எமை நோக்கி நளினமிடுகின்றன.அரசின் இராஜதந்திரங்களிடை வெளிநாட்டாரின் வெளி விவகாரங்களிடை மலினப்படுகின்றன..! தீர்க்கமான வலுப்படல் அல்லது தொழிற்படல் என்பது பொருள்படவில்லை...!

இந்தச் சந்தர்ப்பத்திலே தமிழர் பிராந்தியங்களில் தற்போது நல்லிணக்கப்பொறிமுறைகளை,போர்க்குற்ற விசாரணை நெறிமுறைகளை எப்படி அமைப்பது, பின்பற்றுவது என்பது தொடர்பில் அமர்வுகள் பல அதற்கான செயலணி கொண்டு நடத்தப்பட்டுவருகின்றன.மக்கள் அந்த அமர்வுகளுக்குச் சென்றுவருகின்றனர். விசாரணைப் பொறிமுறைகள் விரைந்து வலுப்பெற வேண்டும் எனவும் பன்னாட்டு நீதிபதிகளின் பங்களிப்பும் அனுசரணையும் தேவை என்பதையும் உறுதிபடத் தெரிவிக்கின்றனர்.இவை சரியான முறையிலே சாத்தியம் பெறாதவரை நல்லிணக்கம் என்பது தூரவிலகி இருக்கும் என்பதனையும் இடித்துரைத்துள்ளனர். இன்னமும் நடைபெறுகின்ற அமர்வுகளில் சொல்லி வருகின்றனர். மக்கள் இன்னமும் விழிப்புணர்வோடு சொல்ல வேண்டிய விடயங்களைத் தைரியமாக எடுத்துரைக்க வேண்டும்...!

உண்மையில் இவ்வாறான அமர்வுகளும்,இதற்கு முந்தியதான காணாமற் போதல்களைக் கண்டறியும் ஆணைக்குழுக்களின் அமர்வுகளும் தேவையற்றவை.காலங்களை இழுத்தடிப்பவை. குற்றங்களுக்கான காரணங்களை மழுங்கடிப்பவை.நல்லிணக்கம், தீர்வு என்பவை உடனடித்தன்மையோடு தப்பிழைத்தவர்களைக் கண்டறிந்து தண்டிப்பதுடன் ஊடாக வழங்கப்பட வேண்டியவை. இத்தகைய பின்புலங்களை நிழலுருவில் வைத்துக்கொண்டு அமர்வுகளை நடத்தி பாதிக்கப்பட்ட மக்களின் வலிகளைக் கேள்விகள் கொண்டு தூண்டி விடுவதும் அவர்களின் வாக்குமூலங்களை குறுக்கிடல்கள் மூலம் மாற்றுதல் செய்வதும் பாரதூரமானது..! குற்றமிழைத்தவர்கள் தப்பிப்பதற்கான வரையறைகளை நடுநிலை செய்து கருத்துக்களைத் திரிபுபடுத்தி அரசிடம்,அவர்கள் நலன் சார்ந்த வெளிநாட்டாரிடமும் சமர்ப்பணமாக அறிக்கையிட முனைவது பெரும் சாபக்கேடு..!

இந்தநிலையிலே தற்போதைய மக்களின் கருத்தறிவுகளை செயலணியினர் நன்முறையில் செவிமடுக்க வேண்டும்..! அவற்றை அப்படியே அறிக்கையிட வேண்டும்...! தங்கள் வார்த்தைகளின் மொழிப்பாடுகள் கொண்டு அரசதரப்பின்பால் நற்பேறுகளையும் தமிழர்களுக்கு அழிவுகளின் தொடர்நிலை உறைவுகளையும் வழங்கியிருக்க சந்தர்ப்பங்களை அமைத்துவிடக்கூடாது..!

குற்றமிழைத்தவர்களை நீதியின் முன் தீர்ப்பாயம் செய்ய முடியாத நடுநிலைமை எனும் சந்தர்ப்ப சாட்சிய சூழமைவுகளையும் ஏற்படுத்திவிடக்கூடாது..!இனங்களிடை,தமிழ் மக்களிடை நல்லிணக்கப்பாடு வேண்டுமெனில் வஞ்சனை எண்ணங்களைக் களைந்திட வேண்டும்..! அரசை நல்வழிப்படுத்தி தமிழர்களுக்கு உதவ முன்வரவேண்டும்..! அரசும் நல்லாட்சியில் நிலைபெறலைத் தனித்துவம் செய்யவேண்டுமெனில், தன்னிலைபெற்று நல் உணர்வோடு, தலைநிமிர்ந்திட வேண்டும்..!






# உன்னை நீ உணர்வாயா பெண்ணே...

உடுவிலூர் கலா

*"நாற்குணங்களின் ஆளுமையில்
நானிலத்தில் ஒளி தரும்
நங்கையிவள் மனுக்குலத்தின்
நற்பொக்கிசம் என உணர்ந்திடுவீர்."*

பெண் மானிடப்பிறவியில் உயர் படைப்பு. அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்னும் நாற்குணங்களின் முழுவடிவம். பிறர் நலன் நாடுபவளாய், தன்னலமற்றவளாய், இயற்கைக்கு இணைவானவளாய், மனிதனின் ஆத்ம சக்தியாய் பெண் உள்ளாள் என்றால் மறுப்பதற்கில்லை. பெண்மை அழகானது, புனிதமானது, பொறுமை மிக்க பெருமை கொண்டது. எதையும் தாங்கும் திறன் கொண்டது. சுயநலமற்றது.

இத்தகைய வியத்தகு சிறப்புக்களையும், பெருமைகளையும் கொண்ட பெண்மை சில சந்தர்ப்பங்களில் தன் புனிதத்தை இழக்கிறது. பெண்களின் நாசகாரச் செயலாலும் எதிர்மறைச் சிந்தனையாலும் வேண்டாத நட்புறவுகளாலும் எல்லையை மீறிய விடுதலை உணர்வாலும் பெண்மைக்கு இழுக்கு ஏற்படுகிறது. பெண்மை தன்னிலை மறப்பது கொடுமையானது. இயற்கையின் படைப்பில் மதிப்பார்ந்த பெண்மை, அழிவை நோக்கிச் செல்வது பெண்ணியத்துக்கு ஏற்புடையதல்ல.

அறுபத்தைந்து பேரை ஏமாற்றிய "கில்லாடிப் பெண்" வடமராட்சியில் பதிவாகியுள்ளார். ஏமாற்றி வாழ்வது, பணத்தை மோசடி செய்வது, பொன்போன்ற நேரத்தைத் தீய செயல்களுக்குப் பயன்படுத்துவது, அரைகுறை ஆடையணிந்து ஆபாசத்தைத் தூண்டுவது, அடுத்த வீட்டுக்காரனை அப்பட்டமாய் திருடுவது, ஊர் சுற்றித் திரிவது, தேவையற்ற தொடர்புகளை ஏற்படுத்துவது, நடையுடை பழக்கவழக்கங்களால் பண்பாட்டுக்குச் சாவுமணி அடிப்பது போன்ற இன்னோரன்ன இழிசெயல்களால் பெண்மை களங்கப்படுகிறது.

பெண்கள் செய்வதற்கென்று நிறைய இருக்கின்றன. நம்முன் நகர்ந்து கொண்டிருக்கும் ஒவ்வொரு நிமிடமும் பெறுமதியானவை. நமக்குள் இருக்கும் திறமைகளை, மூடப்பட்ட பண்புகளை முதலில் துரத்தியடிக்க வேண்டும். பெண்கள் நேரத்தைப் பயனுள்ளதாக்கும்போது மகிழ்ச்சியான குடும்பமும், வளமும் சமுதாயமும் உருவாகும். சமுதாயத்தின் பலமான வளம் பெண்ணே.

பெண் விடுதலை கிடைத்து பெண் வளர்ச்சியடைந்து விட்டாள். ஆனாலும், இன்னும் எழுதப்படிக்கத் தெரியாத பெண்களும், அடுத்தவர் முன் பேசத் தயங்கும் பெண்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். பெற்றுக்கொண்ட விடுதலையை தவறாகப் பயன்படுத்தி, சமுதாயத்தில் அவலத்தை ஏற்படுத்தும் பெண்களும் இருக்கிறார்கள்.

வாழும் காலம் குறுகியது. வாழ்க்கை வாழ்வதற்கேயன்றி வீணடிப்பதற்கானதல்ல. இந்த அழகிய வாழ்க்கையை ஒவ்வொரு பெண்ணும் ரசித்து, சுவைத்து, மகிழ்வாக வாழ வேண்டும். வாழ்க்கைப் பாதையைச் செப்பனிட்டு, மகிழ்ச்சியைக் கரம்பற்ற வேண்டும் எந்தத் தீய செயல்களுக்கும் இடமளிக்கக்கூடாது. மகிழ்வான வாழ்வுக்கான ஓர் இலட்சியத்தோடு அதன் இலக்கு நோக்கிப் பயணிக்கவேண்டும். குடும்பத்தில், சமுதாயத்தில் தனித்துவமான அடையாளத்தை ஏற்படுத்தவேண்டும். இந்த அடையாளமானது இறப்பின் பின்னும் சமுதாயத்தின் வாய் உச்சரிக்கும் பெருமை கொண்டதாக அமையவேண்டும்.


அடையாளத்தை ஏற்படுத்த முதலில் தேடல் உள்ளத்தில் ஏற்பட வேண்டும். தேடல் இல்லையேல் அடையாளம் இல்லை. தேடல் உள்ள பெண் சிறந்த அடையாளமாக முடியும். ஏதோ பிறந்தோம், வாழ்ந்தோம், மடிந்தோம் என்றில்லாது பிறந்த பயனை இந்தப் பூமியில் ஒவ்வொரு பெண்ணும் நிலைநாட்ட வேண்டும். நற்சிந்தனைகளும் பொறுப்பு மிக்கச் செயல்களும் ஒவ்வொரு பெண்ணுக்கும் சிறப்பான அடையாளத்தை ஏற்படுத்துகின்றன. மாடாய் உழைத்து ஓடாய் தேயும் பெண்ணாயினும் சரி, அரச குலத்துப் பெண்ணாயினும் சரி தன்னுடைய வளர்ச்சிக்காக குறைந்தது முப்பது நிமிடங்களையாவது ஒதுக்கவேண்டும். அந்த நேரத்தில் கொண்ட இலட்சியத்தின் தேடலுக்கான விடையைக் கண்டுபிடிக்க சிந்தனையை விரிவுபடுத்தவேண்டும். பெண்ணால் முடியாது எதுவுமில்லை. நினைத்தால் முடியும். முதலில் நினையுங்கள்; பின் அதற்காய் உழையுங்கள்.

ஆக, பெண்களே ஒவ்வொரு வினாடியையும் பெறுமதியாகச் செலவு செய்யுங்கள். போனால் வராதது நேரம். நேர்கொண்ட சிந்தனையாளராக மாறி வாழ்க்கையைப் பயனுள்ளதாக்குங்கள். வாழ்க்கையில் எச்சரிக்கையாக இருக்காவிட்டால் எல்லாமே நாசமாகிவிடும்.

அன்பான பெண்களே! எதிர்காலத்தை மகிழ்வுள்ளதாக்க, பயனுள்ளதாக்கத் தயாராகுங்கள். அடுத்தவர் கரங்களை எதிர்பார்க்கும் நிலையை விடுத்து உங்களது தேவையை நீங்களே எதிர்கொள்ளுங்கள். முடிந்தவரை ஆண்களைத் தூர நிறுத்துங்கள். பண்பாகவும், பொறுப்பாகவும் பொறுமையாகவும், வாழுங்கள். சமுதாயத்தின் வளர்ச்சிக்கு உங்களால் இயன்ற பணிகளைச் செய்யுங்கள். ஏனைய பெண்களின் கண்ணீரை உங்கள் கரங்களால் துடையுங்கள். பெண்கள் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்த அறிவுத்தீயைக் கையில் ஏந்தி வாழும் நிலைமையை உருவாக்குங்கள். பெண்ணடிமை நீங்கி சுயமாய் வாழ, முதலில் பெண்கள் பெண்களாக வாழ வேண்டும் என்பதையும் பெண்களின் பாதுகாப்பைப் பெண்களே ஏற்படுத்த வேண்டும் என்பதையும் உணர்ந்து தடம்மாறாது, தடம்புரளாது வாழ பெண்களே உங்களை நீங்கள் தயார்படுத்துங்கள். உங்கள் வாழ்வு உங்கள் கைகளில் என்பதை உணர்ந்திடுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 60 நாள்களில் விஜய்சேதுபதியின் 3 படங்கள்



இரண்டு வருடங்களுக்கு விஜய் சேதுபதியின் படவாய்ப்பானது நிரம்பி வழிகிறது. அடுத்தடுத்து வரும் படங்களை விரைவாக விறுவிறுப்பாக முடித்து கொடுத்து வருகிறார்.

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 12 ஆம் திகதி சீனுராமசாமி இயக்கத்தில் நடித்துள்ள 'தர்மதுரை' படம் வெளியிடப்படவுள்ளது.

இதனையடுத்து செப்ரெம்பர் மாதம் இரண்டாம் வாரத்தில், மணிகண்டன் இயக்கத்தில் உருவாகியுள்ள 'ஆண்டவன் கட்டளை' படம் வெளியாகிறது. ஒக்ரோபர் மாதம் 7ஆம் திகதி ரத்னசிவா இயக்கியுள்ள 'றெக்க' படம் வெளியாகிறது.

கிட்டதட்ட 60 நாள்களில் விஜய்சேதுபதியின் 3 படங்கள் வெளியாகவுள்ளது, குறிப்பிடத்தக்கது.



ஜெயிலர்: சாகிறதுக்கு முன்னாடி கடைசி ஆசை ஏதாவது இருந்தா சொல்லு.
கைதி: என்னை தலைகீழாகத் தூக்கில போடணும்.

உலகத்திலே சரியாக கடமை செய்வது கடிகாரம். மக்கள் அதை கூட எப்பொழுதும் 'நேரம் சரியில்லை' என்கின்றனர்.



ஆண்டவா! லட்டு வாங்கித் தாறேன். எப்படியாவது, லீவைக் கொஞ்ச நாளைக்கு கூட்டிவிடப்பா...



ஒரு வாரமா, நம்மாளு போக்கே சரியில்லை... காலை, மாலை விஷ் பண்ணமாட்டேங்குறா...
நான் போஸ்ட் போட்டா, ஒரு லைக், கம்மெண்ட் கூட போட மாட்டேங்குறா. ஒரு வேளை என் வயசை கண்டு பிடிச்சிட்டாளோ...

4 முறை திருமணம் தடைப்பட்டதால் இளைஞர் தூக்கிட்டு தற்கொலை– செய்தி



4 தடவை கடவுள் காப்பாத்தியும் அஞ்சாவது தடவை மெனக்கெட்டு செத்துருக்கான் பாரு...

## சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | 8 | | 1 | | |
| | | 3 | | | | 2 | | 4 |
| 4 | | | 2 | | | | | 7 |
| | 9 | | 5 | | | | | |
| 5 | | | 8 | | 3 | | 7 | 1 |
| | 8 | 4 | | | | | 5 | 6 |
| | | 7 | 3 | | | | 1 | |
| | 6 | 9 | | | 1 | 8 | | |
| | | | | 4 | | | | |


### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 9 | 1 | 7 | 3 | 6 | 2 | 8 | 5 |
| 7 | 6 | 5 | 2 | 8 | 1 | 4 | 9 | 3 |
| 8 | 3 | 2 | 9 | 5 | 4 | 6 | 1 | 7 |
| 1 | 5 | 4 | 3 | 6 | 9 | 8 | 7 | 2 |
| 3 | 2 | 9 | 8 | 4 | 7 | 5 | 6 | 1 |
| 6 | 8 | 7 | 5 | 1 | 2 | 3 | 4 | 9 |
| 5 | 4 | 3 | 1 | 7 | 8 | 9 | 2 | 6 |
| 9 | 1 | 8 | 6 | 2 | 5 | 7 | 3 | 4 |
| 2 | 7 | 6 | 4 | 9 | 3 | 1 | 5 | 8 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரை களையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்படவேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள்பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை.

சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனிஎண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறு வனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?





**மேடம்:** எதிர்கால வாழ்வில் நம்பிக்கை பிறக்கும். தொழில் வியாபாரத்தில் வருமானம் திருப்தியளிக்கும். பணியாளர்கள் விண்ணப்பித்த கடனுதவி கிடைக்கும். பெண்கள் குடும்ப நலனுக்காகப் பாடுபடுவர்.



**இடபம்:** பெருமைப்பட வாழ்வதில் ஆர்வம் காட்டுவீர்கள். தொழில் வியாபாரத்தில் சுமாரான இலாபம் கிடைக்கும். பணியாளர்கள் பணிச்சுமைக்கு ஆளாவர். உடல்நலனில் அக்கறை கொள்வது நல்லது.



**மிதுனம்:** தொல்லை கொடுத்தவர், இடம் மாறிச்செல்வர். தொழில் வியாபார வளர்ச்சியால் வருமானம் அதிகரிக்கும். கடன் அடைபடுவதால் நிம்மதி உண்டாகும். மாணவர்கள் அக்கறையுடன் படிப்பர்.



**கடகம்:** தன்னம்பிக்கையுடன் செயற்படுவது நல்லது. தொழில் வியாபாரம் மந்த கதியில் இருக்கும். சுமாரான இலாபம் கிடைக்கும். இஷ்ட தெய்வ வழிபாடு நிம்மதிக்கு வழிவகுக்கும்.



**சிங்கம்:** நண்பர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தொழில் வியாபாரத்தில் எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும். பணியாளர்கள், நிர்வாகத்தின் நன்மதிப்பைப் பெறுவர். அரசு வகையில் நன்மை உண்டாகும்.



**கன்னி:** மனதில் உற்சாகம் நிறைந்திருக்கும். அன்றாடப் பணி இனிதாக நிறைவேறும். தொழில் வியாபாரத்தில் கூடுதல் மூலதனம் செய்வீர்கள். இலாபம் உயரும். விருந்து விழாவில் கலந்து கொள்வீர்கள்.



**துலாம்:** அனைவரிடமும் அன்பு பாராட்டுவீர்கள். [illegible] இடையூறு [illegible] பெண்கள் வீட்டுச் செலவில் சிக்கனம் பின்பற்றுவர். வெளியூர்ப் பயணத்தில் திடீர் மாற்றம் ஏற்படும்.



**விருச்சிகம்:** பொது விடயங்களில் கருத்து சொல்ல வேண்டாம். தொழில், வியாபாரத்தில் மிதமான இலாபம் கிடைக்கும். உடல்நலனில் அக்கறை கொள்வீர்கள். மாணவர்கள் படிப்பில் முன்னேற விடாமுயற்சி தேவைப்படும்.



**தனுசு:** உத்வேகமுடன் பணிகளில் ஈடுபடுவீர்கள். தொழிலில் உற்பத்தி விற்பனையின் அளவு அதிகரிக்கும். வருமானம் திருப்தியளிக்கும். குடும்பத்தில் ஒற்றுமையும் மகிழ்ச்சியும் நிலைத்திருக்கும்.



**மகரம்:** இஷ்ட தெய்வ வழிபாட்டில் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வியத்தகு முன்னேற்றம் உண்டாகும். சேமிக்கும் விதத்தில் வருமானம் வரும். பெற்றோரின் தேவையறிந்து நிறைவேற்றுவீர்கள்.



**கும்பம்:** புதியவர்களின் நட்பால் நன்மை உண்டாகும். தொழில் வியாபாரத்தில் வளர்ச்சிக்கான வாய்ப்புக் கிடைக்கும். ஆதாயம் அதிகரிக்கும். மாணவர்கள் படிப்பில் அக்கறை கொள்வர். அரசியல்வாதிகள் பதவி பெற அனுகூலம் உண்டு.



**மீனம்:** யாரிடமும் அதிக நெருக்கம் வேண்டாம். உடல்நலத்தில் கவனம் செலுத்தவும். தொழில், வியாபாரத்தில் மிதமான இலாபம் கிடைக்கும். வாகன பயணத்தில் மிதவேகம் பின்பற்றவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பாரமற்ற விளையாட்டுச் சப்பாத்துகள் அறிமுகமாகியுள்ளன. ஆண், பெண் என இருவரும் விளையாட்டுகளின் போது அணியத் தகுந்ததாகும். மிகவும் இலேசானதும் துரித கதியில் செயற்படக் கூடிய விதத்திலும் வடிவமைக்கப்பட்டுள்ளது. இதன் விலை 1500 ரூபாவில் இருந்து 2200 ரூபா வரையில் விற்பனை செய்யப்படுகின்றன.

## நேற்றைய கடலுணவு விலை நிலவரம்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 600 | 600 | 700 | 800 | 700 | 800 |
| நண்டு | 250 | 400 | 300 | 400 | 400 | 200 | 600 |
| கணவாய் | 600 | 600 | 500 | 500 | 800 | 600 | – |
| பாரை | 550 | 700 | 500 | 650 | 700 | 600 | 500 |
| சுறா | 500 | 600 | 600 | 800 | 1000 | 800 | – |
| சீலா | 300 | 800 | 400 | 800 | 400 | 600 | – |
| விளை | 650 | 600 | 400 | 800 | 600 | 400 | 450 |
| முரல் | 300 | 400 | 350 | 400 | 350 | 400 | – |
| கும்பிளா | 400 | 400 | 300 | 450 | 400 | 500 | – |
| கிளாக்கன் | 800 | 1000 | – | – | 600 | 400 | – |
| ஓரா | 400 | 350 | – | – | 450 | 300 | 400 |
| திரளி | 300 | 250 | 200 | 200 | 300 | 200 | 370 |
| நகரை | 250 | 250 | – | 300 | 400 | 200 | 350 |
| ஆடை | 150 | 200 | 100 | 200 | 200 | 150 | – |
| ஒட்டி | 300 | 300 | 150 | 400 | 300 | 400 | – |
| திருக்கை | 150 | 350 | 200 | 350 | 400 | 150 | 200 |
| மதனம் | 150 | 250 | 180 | – | 300 | 300 | 300 |
| கொய் | 100 | 150 | 60 | 100 | 80 | 100 | – |
| பாலை | 400 | 250 | 250 | 400 | 450 | 400 | – |
| வாழை | 100 | 150 | 200 | – | 350 | 200 | – |

## நாளை

ஆடி-18

செவ்வாய்க்கிழமை -02.08.2016

திதி: அமாவாசை பி.இ.03.11 வரை

நட்சத்திரம்: பூசம் பி.இ.03.26

ராகுகாலம்: 03.03-04.33 வரை

சுபநேரம்: 10.33-12.03 வரை

ஆடி அமாவாசை விரதம்

## பாட்டி வைத்தியம்

- நெஞ்சுச் சளிக்கு: தேங்காய் எண்ணையில் கர்ப்பூரம் சேர்த்து நன்கு சுடவைத்து ஆறவைத்து நெஞ்சில் தடவ சளி குணமாகும்.
- தலைவலிக்கு: ஐந்தாறு துளசி இலைகளும் ஒரு சிறு துண்டு சுக்கு, 2 லவங்கம், சேர்த்து நன்கு அரைத்து நெற்றியில் பற்றாகப் போட்டால் தலைவலி குணமாகும்.
- தொண்டை கரகரப்பு: சுக்கு, பால் மிளகு, திப்பிலி, ஏலரிசி ஆகியவற்றை வறுத்து, பொடி செய்து தேனில் கலந்து சாப்பிட தொண்டை கரகரப்பு குணமாகும்.
- தொடர் விக்கலுக்கு நெல்லிக்காய் இடித்து சாறு பிழிந்து, தேன் சேர்த்து சாப்பிட்டால் தொடர் விக்கல் தீரும்.
- வாய் நாற்றத்துக்கு: சட்டியில் படிகாரம் போட்டு, காய்ச்சி ஆறவைத்து அதனை ஒரு நாளைக்கு மூன்று வேளை வாய் கொப்பளித்து வந்தால், வாய் நாற்றம் போகும்.
- உதட்டு வெடிப்புக்கு: கரும்பு சக்கையை எடுத்து எரித்து சாம்பலாக்கி, அதனுடன் வெண்ணெய் கலந்து உதட்டில் தடவி வர உதட்டு வெடிப்பு குணமாகும்.
- அஜீரணம்: ஒரு டம்ளர் தண்ணீரில் கருவேப்பிலை, இஞ்சி, சீரகம், மூன்றையும் கொதிக்க வைத்து ஆறவைத்து வடிகட்டி குடிக்க அஜீரணம் சரியாகும்.
- குடல்புண்ணுக்கு: மஞ்சளை தணலில் இட்டு சாம்பல் ஆகும் வரை எரிக்க வேண்டும். மஞ்சள் கரிச் சாம்பலை தேன் கலந்து சாப்பிட குடல் புண் ஆறும்.
- வாயு தொல்லைக்கு: வேப்பம் பூவை உலர்த்தி தூளாக வெந்நீருடன் உட்கொள்வதினால் வாயுத் தொல்லை நீங்கும். அத்துடன் ஆறாத வயிற்றுப் புண் நீங்கும்.
- வயிற்று வலிக்கு: வெந்தயத்தை நெய்யில் வறுத்து பொடி செய்து மோரில் குடிக்கவயிற்றுவலிநீங்கும்.

## பயத்தம் உருண்டை



**தேவையான பொருள்கள்:**

பயத்தம் மா - 2 கப்
வறுத்த அரிசி மா - 3 1/2 கப்
சீனி - 3 கப்
பாதி துருவிய தேங்காய்
அவிக்காத மா - 2 கப்
ஏலக்காய் - 6
மஞ்சள் - 1/4 தேக்கரண்டி
மிளகு, சீரகத் தூள் - 1 மேசைக்கரண்டி
உப்பு - தேவையான அளவு
எண்ணெய் - பொரிப்பதற்கு

**செய்முறை**

அவிக்காத மாவினுள் தண்ணீர் விட்டு கலக்கி, கூழ் பதமுமில்லாமல், தண்ணீர் பந்தமும் இல்லாமல் பதமாகக் கரைத்து, சிறிது மஞ்சள் தூள், உப்புச் சேர்த்து நன்றாகக் கலந்து வைக்கவும். தேங்காய்ப் பூவை பொன்னிறமாக வறுத்து வைக்கவும். மிளகு, நச்சீரகம் இரண்டையும் தனித் தனியாக வறுத்து கிரைண்டரில் தூளாக்கிக் கொள்ளவும். ஏலக்காயை பொடியாக்கி வைக்கவும்.

பயத்தம்மா, அரிசி மா, சீனி, வறுத்த தேங்காய்ப் பூ, மிளகு, சீரகத்தூள், ஏலக்காய் பொடி என்பவற்றை கொதித்த நீர் விட்டு உருண்டையாகப் பிடிக்கும் பதம் வரை பிசையவும். பின் உருண்டைகளாக உருட்டி வைக்கவும்.

உருண்டைகளை தோய்மாவினுள் தோய்த்து நன்கு கொதித்த எண்ணெயில் பொரிக்கவும்.

சுவையான பயத்தம் உருண்டை தயார்.

## நேற்றைய மரக்கறி விலை நிலவரம்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 50 | – | 60 | 120 | 40 | 40 | 40 | 30 |
| கத்தரி | 100 | 100 | 120 | 140 | 100 | 80 | 80 | 70 |
| கரட் | 200 | 150 | 200 | 180 | 140 | 180 | 110 | 40 |
| மரவள்ளி | 100 | 100 | 100 | 100 | 80 | 80 | 80 | 50 |
| பயிற்றை | 200 | 100 | 100 | 180 | 80 | 140 | 50 | 80 |
| பாகல் | 100 | 180 | 240 | 200 | 140 | 160 | 140 | 150 |
| கருணைக்கிழங்கு | 150 | 120 | 140 | 160 | 120 | – | 75 | 80 |
| பெ.வெங்காயம் | 90 | 90 | 80 | 90 | 80 | 90 | 75 | 70 |
| சி.வெங்காயம் | 100 | 90 | 100 | 120 | 80 | 100 | 90 | 100 |
| பூசணி | 100 | 70 | 100 | 100 | 100 | 100 | 70 | 130 |
| தக்காளி | 100 | 110 | 100 | 120 | 80 | 150 | 80 | 200 |
| வாழைக்காய் | 120 | 100 | 120 | 120 | 80 | 80 | 70 | 50 |
| கீரை | 20 | 25 | 30 | 30 | 30 | 40 | 20 | 15 |
| பொன்னாங்காணி | 25 | 30 | 30 | 35 | 30 | 40 | 20 | 10 |
| பச்சை மிளகாய் | 500 | 300 | 500 | 400 | 300 | 600 | 400 | 600 |
| புடோல் | 70 | 70 | 60 | 80 | 80 | 80 | 70 | 60 |
| கோவா | 150 | 130 | 160 | 150 | 140 | 80 | 90 | 120 |
| வெண்டி | 60 | 70 | 60 | 100 | 80 | 80 | 70 | 80 |
| போஞ்சி | 200 | 160 | 160 | 180 | 200 | 160 | 130 | 140 |
| லீக்ஸ் | 120 | 140 | 120 | 170 | 160 | 200 | 90 | 120 |
| தேங்காய் | 40 | 28 | 40 | 25 | 20 | 40 | 20–25 | 30 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 100 | 100 | 100 | 100 | 85 | 120 |
| தேசிக்காய் | 100 | 100 | 100 | 120 | 120 | 200 | 120 | 120 |
| வல்லாரை | 15 | 20 | 10 | 15 | 10 | 20 | 10 | 10 |
| கறிமிளகாய் | 200 | 180 | 250 | 300 | 200 | 200 | 200 | 200 |
| இராசவள்ளி | 160 | – | – | 250 | – | – | – | 120 |
| முருங்கைக்காய் | 200 | 120 | 160 | 200 | 100 | 400 | 200 | 300 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# செலான் வங்கியின் ஊக்குவிப்புத் திட்டம்

இலங்கைச் சிறார்கள் மத்தியில் சேமிப்பு பழக்கத்தை ஊக்குவிக்கும் முகமாக செலான் டிக்கிரி அண்மையில் நாவலப்பிட்டி கதிரேசன் மத்திய மகா வித்தியாலயத்தில் சிறுவர் சேமிப்பு ஊக்குவிப்புத்திட்டம் ஒன்றை நடத்தியதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தத் திட்டம் செலான் டிக்கிரி மற்றும் செலான் வங்கி பற்றி மட்டுமல்லாது சிறுவர்கள் மற்றும் பெற்றோர்களின் அன்றாட வாழ்க்கைக்கு உதவும் முகமாக பல குறிப்புக்கள் மற்றும் தகவல்களைப் பகிர்ந்து கொள்ளும் தளமாக அமைந்ததாகக் கூறப்பட்டது.

மாணவர்கள் மத்தியில் சேமிப்புப் பழக்கத்தை ஊக்குவிப்பதை இலக்காகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட இந்தத் திட்டம், அவர்களின் பெற்றோரையும் ஈடுபடுத்தியதாகப் பல பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளை உள்ளடக்கியிருந்தது எனச் செலான் வங்கி கூறியுள்ளது. இந்த நிகழ்வின் போது செலான் டிக்கிரி கணக்கில்லாத மாணவர்களுக்கு விசேட செலான் டிக்கிரி சிறுவர் கணக்குகள் ஆரம்பிக்கப்பட்டதுடன், செலான் டிக்கிரி மற்றும் வங்கியின் ஏனைய சேமிப்புக் கணக்குகள் மற்றும் சேவைகள் தொடர்பாக பெற்றோர்களுக்கு விளக்கமளிக்கப்பட்டதாகக் கூறப்பட்டது.(தி)

# திருநெல்வேலி கொமர்ஷல் வங்கி 12 மாணவர்களைக் கௌரவித்தது



கொமர்ஷல் வங்கி திருநெல்வேலிக் கிளையில் கணக்கைப் பேணும் மாணவர்களில் 2015 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் முதன்மைச் சித்தி எய்தியோருக்கு வங்கியினால் அண்மையில் கௌரவிப்பு நிகழ்வு இடம்பெற்றது.

வங்கியின் பதில் முகாமையாளர் திருமதி ஏ. வித்தியானி தலைமையில் இடம்பெற்ற குறித்த நிகழ்வில் 12 மாணவர்களுக்கான பரிசில்கள் வழங்கப்பட்டன.

பாடசாலை ரீதியில் முதல் 3 இடங்களைப் பெற்ற மாண வர்களுக்கு முறையே 10 ஆயிரம் ரூபா, 7 ஆயிரத்து 500 ரூபா, 5 ஆயிரம் ரூபாவென பணப் பரிசில்களும் பாடசாலை உபகரணங்களும் வழங்கப்பட்டன. இந்த நிகழ்வில் பாடசாலை மாணவர்களுடன் அதிபர்கள், பெற்றோரும் கௌரவிக்கப்பட்டனர்.

(த-101)

# முதலீட்டாளர்கள் சிக்கலின்றி தொழிற்படக்கூடிய சூழ்நிலை

## நிதி அமைச்சர் ரவி தெரிவிப்பு

வணிகம்



உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் சிக்கல் இன்றி வர்த்தகச் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கான சூழ்நிலையை உருவாக்கி இருப்பதாக அரசு தெரிவித்துள்ளது.

நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க இதனைத் தெரிவித்தார். போட்டிச் சந்தையில் சிறந்த சேவை வழங்கல்களை முன்னெடுப்பதே அரசின் கொள்கையாக இருக்கின்றது. இதன் ஊடாகத் தனியார் துறையினரும் ஊக்குவிக்கப் படுகின்றனர். இந்த நிலையில் எவராலும் சிக்கல் இன்றி இலங்கையில் வர்த்தகச் செயற்பாடுகளை முன்னெடுக்க முடியும் என்று அவர் கூறியுள்ளார். (கு)

## நுட்பம்



### தங்கத்துக்கு மாற்றாக புதிய உலோகம் அறிமுகம்

தங்கத்துக்கு மாற்றாக லூமினக்ஸ் யூனோ என்ற புதிய மதிப்புமிகு உலோகம் இந்தியாவில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

இதனை லீடிங் ஜுவல்லர்ஸ் ஒப் தி வேர்ல்ட் உலக தங்க நகை கூட்டமைப்பு உருவாக்கியுள்ளது.

தங்கம், பிளாட்டினம், பலேடியம், வெள்ளி ஆகிய உலோகங்களின் கலவையில் இருந்து, லூமினக்ஸ் யூனோ உலோகம் தயாரிக்கப்படுகிறது. இந்த நிலையில் 10 கிராம் லூமினக்ஸ் யூனோ உலோகத்தின் விலை, இந்தியப் பெறுமதியில் 1,250 ரூபா என்று தெரிவிக்கப்படுகின்றது.

தங்கம் மற்றும் பிளாட்டினம் நகைகளுக்கு அடுத்தபடியாக, லூமினக்ஸ் யூனோ என்ற இந்த புதிய உலோகத்தில் முதலீட்டாளர்கள் முதலீடு செய்யலாம் என லீடிங் ஜுவல்லர்ஸ் ஒப் தி வேர்ல்ட் கூட்டமைப்பு உறுதியளித்துள்ளது.

தங்கத்தின் விலை பெரியளவில் அதிகரித்துள்ளது. நகைக் கடை உரிமையாளர்கள், தங்கம், பிளாட்டினம் நகைகளுக்கு மாற்றாக, லூமினக்ஸ் யூனோ உலோகத்தால் ஆபரணங்களை செய்தால் நல்ல வரவேற்பு இருக்கும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

### இந்தியாவின் 100 ரயில் நிலையங்களில் கூகுள் வை-பை

இந்த வருட இறுதிக்குள் இந்தியாவில் உள்ள சுமார் 100 ரயில் நிலையங்களில் வை-பை சேவையை நிறுவுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது என்று கூகுள் நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி சுந்தர் பிச்சை தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் இடம்பெற்ற முதலீட்டாளர்கள் கருத்தரங்கில் கலந்துகொண்டு உரையாற்றும்பொழுதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

அரச நிறுவனமான ரயில்டெல் உடன் இணைந்து கூகுள் நிறுவனம் அங்குள்ள ரயில் நிலையங்களில் இலவச வை-பை வசதியை வழங்கி வருகிறது. தற்பொழுது அங்குள்ள 23 ரயில் நிலையங்களில் அதிவேக இலவச வை-பை சேவை செயற்படுத்தப்பட்டு வருகிறது.

இதன்மூலம் ஒவ்வொரு மாதமும் 20 லட்சம் மக்கள், இலவச வை-பை வசதியை பயன்படுத்துகின்றனர். கைத்தொலைபேசி வலையமைப்பு மூலம் இணையத்தை பயன்படுத்துவதை விட ரயில் நிலையங்களில் 15 சதவீதம் அதிகமாக வை- பையைப் பயன்படுத்துகிறார்கள்.

இந்த வருடத்தின் இறுதிக்குள் 100 ரயில் நிலையங்களில் வை-பை சேவையை விரிவுபடுத்த திட்டமிட்டுள்ளோம்-என்றார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சர்வதேச

கரவெட்டி பிரதேச செயலகத்தில் இடம் பெற்றது.

இதன்போது முன்னாள் பிரதேச சபை உற்றுப்பினரும் ஓய்வுநிலை கிராம அலுவலருமான பரஞ்சோதி தெரிவித்ததாவது:

இறுதிக் கட்டப் போரின் போது வெள்ளைக் கொடியுடன் சரணடைந்தவர்களுக்கு என்ன நடந்தது? இது தொடர்பில் முழுமையான - நம்பகமான விசாரணை நடத்தப்பட வேண்டும். இதுவரையில் அவ்வாறான ஒரு விசாரணை நடக்கவில்லை. வெள்ளைக்கொடியுடன் சரணடைய வந்தது தவறா?

போரின் இறுதிக் கட்டத்தில் சரணடைந்த முன்னாள் போராளிகள் தற்போது திடீர் திடீரெனச் சாவைத் தழுவுகின்றனர். இதற்குப் பின்னால் உள்ள மர்மம் என்ன? இவர்களது சாவுக்கு என்ன காரணம். இவையெல்லாம் இன்னமும் கண்டறியப்படவில்லை. மக்கள் அவர்களது சொந்த மண்ணில் குடியமர்த்தப்படவேண்டும். அதற்குரிய நடவடிக்கைகள் முழுமையாக இன்னமும் மேற்கொள்ளப்படவில்லை. போரில் கொல்லப்பட்டவர்களை நிம்மதியாக நினைவு கூரும் சூழ்நிலை உருவாக்கப்படவில்லை. தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து சாவடைந்த எமது உறவுகளை நினைவுகூருவதற்கு அனுமதி வழங்கப்படவில்லை. எமது நினைவுச் சின்னங்கள் திட்டமிட்டு அழிக்கப்படுகின்றன. ஆனால் பௌத்த விகாரைகளும், சிங்களக் குடியேற்றங்களும் இங்கும் தடையின்றி - தளர்வின்றி இடம்பெறுகின்றன.

போர்க்குற்ற விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும். கொலைகாரர்களே தாம்செய்த கொலைகளை விசாரிப்பதை அனுமதிக்க முடியாது. பன்னாட்டு நீதிபதிகள் உள்ளடக்கிய விசாரணைப் பொறிமுறையே வேண்டும். இதில் எந்த மாற்றமும் இருக்கக் கூடாது - என்றார்.

நேற்றைய அமர்வில் 40க்கு மேற்பட்டவர்கள் முன்வந்து தமது கருத்துக்களைப் பதிவு செய்தனர். இதன்போது அனைவரும் பன்னாட்டு நீதி விசாரணையே இடம்பெறவேண்டுமென கேட்டுக்கொண்டனர்.

(வ-5-108-109)

## போர்க்குற்றத்

செய்த வடமராட்சி அல்வாயைச் சேர்ந்தவரும் 1996 ஆம் ஆண்டு காலப் பகுதியில் காணாமற்போனவர்கள் சங்கத்தின் செயலாளருமான விஜயகுமார் தெரிவித்ததாவது:

காணாமற்போனவர்கள் தொடர்பான விசாரணை பக்கச்சார்பின்றி முன்னெடுக்கப்படவேண்டும். காணாமற்போனோர் தொடர்பான அலுவலகம் வடபகுதியில் அமைக்கப்பட வேண்டும்.

போர்க் குற்றங்களில் - மனித உரிமை மீறல்களில் ஈடுபட்ட அனைவருக்கும் தண்டனை வழங்கப்பட வேண்டும். இந்தத் தண்டனை வழங்கப்படுவதன் ஊடாகவே, எதிர்காலத்தில் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறாமல் இருக்கும். எமக்கும் பாதுகாப்பு இருக்கும்.

உள்ளூர் விசாரணைப் பொறிமுறைகளில் நாம் நம்பிக்கை வைக்க முடியாது. வெளிநாட்டு நீதிபதிகளை உள்ளடக்கிய விசாரணைக் குழுவே அமைக்கப்படவேண்டும். அப்போதுதான் நீதி கிடைக்கும் என்ற நம்பிக்கை எமக்கு உருவாகும்.

நல்லிணக்கச் செயலகத்தின் தலைவியாக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா நியமிக்கப்பட்டிருக்கின்றார். சந்திரிகா அம்மையார் ஜனாதிபதியாக இருந்த காலத்திலும் காணாமற்போதல் சம்பவங்கள் நடைபெற்றன. ஆணைக்குழுக்கள் அமைத்தார்கள். அதனூடாகப் பலன் கிடைக்கவில்லை. சந்திரிகா அம்மையாரிடம் நேரில் சென்று நீதி கோரியும் எமக்கு நீதி கிடைக்கவில்லை. நாங்கள் உளநலம் பாதிக்கப்பட்டதுதான் இதனால் கிடைத்த மிச்சம். நாங்கள் சலுகைகளையோ, சன்மானங்களையோ எதிர்பார்க்கவில்லை. எங்களுக்கு நீதி வேண்டும். அதற்காகத்தான் எல்லா இடங்களுக்கும் அலைகின்றோம். போரில் பங்கு கொள்ளாத தரப்பாகிய நாங்கள் - அப்பாவிகளான நாங்கள் கடுமையான உளப் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளோம்.

நாட்டில் நல்லிணக்கம் ஏற்பட வேண்டும் என்றால், பாதிக்கப்பட்ட மக்களின் கருத்துக்களைக் கேட்டறிந்து அவற்றைச் செயற்படுத்தவேண்டும் - என்றார்.

(வ-5-108-109)

## காணாமற்

ஐ.நா. மனித உரிமைகள் சபைக்கு வழங்கிய வாக்குறுதியின் அடிப்படையில் காணாமற்போனோர் விவகாரத்தைக் கையாள்வதற்கு இலங்கை அரசு தனி அலுவலகமொன்றை அமைக்கவுள்ளது. அமைச்சரவையின் ஒப்புதலின் பின்னர், சட்டவரைவு நாடாளுமன்றத்திலும் சமர்ப்பிக்கப்பட்டது. காணாமற்போனோர் விவகாரத்தைக் கையாள்வதற்காக அமைக்கப்படவுள்ள தனி அலுவலகத்தைக் கடுமையாக விமர்சித்து, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச அறிக்கை விடுத்திருந்தார். இது படையினரைக் காட்டிக்கொடுக்கும் செயல் என்றும் விமர்சித்திருந்தார்.

மகிந்தவின் அறிக்கைக்குப் பதிலளித்து அயலுறவுத்துறை அமைச்சர் மங்கள சமரவீர கடிதமொன்றை மகிந்தவுக்கு நேற்று அனுப்பினார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச வால் நியமிக்கப்பட்ட நல்லிணக்க ஆணைக் குழு உள்பட ஜனாதிபதி ஆணைக் குழுக்கள், வடக்கிலும் தெற்கிலும் காணாமற்போனோரின் குடும்பத்தவர்களிடம் வாக்கு மூலங்களைப் பதிவு செய்தன.

எனது தொகுதியான மாத்தறையில் இன்றும், 1989 - 90ஆம் ஆண்டுகளில் காணாமற்போன தங்கள் பிள்ளைகளைத் தேடி எனது அலுவலகத்துக்குத் தாய்மார்கள் வருகின்றனர். தமது பிள்ளைகள் உயிருடன் இருக்கின்றனர் என்றே அவர்கள் நினைத்துக் கொண்டுள்ளனர்.

தங்கள் பிள்ளைகள் இருக்கிறார்களா அல்லது இறந்து விட்டார்களா என்று அவர்கள் அறியவேண்டும்.

காணாமற்போனவர்களின் குடும்பத்தவர்களுடன் நாங்கள் அண்மையில் மேற்கொண்ட சந்திப்பின்போது, சில இராணுவச் சிப்பாய்களின் குடும்பத்தவர்கள் சிறிய எலும்பையாவது தாருங்கள் எனக் கேட்டனர். முன்னைய அரசின் காலத்தில் பன்னாட்டுச் சமூகத்தை ஏமாற்றுவதை நோக்கமாகக் கொண்டே அனைத்து நடவடிக்கைகளும் இடம்பெற்றன.

எனது நண்பரான முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச ஒரு சந்தர்ப்பவாதி போன்று, துயரில் சிக்கியிருக்கும் தாய்மார் மற்றும் எதிர்கால தலைமுறையினரின் நலன்களை அலட்சியப்படுத்திவிட்டு அரசியல் இலாபம் தேட முயல்கின்றார் என்று மங்கள சமரவீர அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

(வ-5)

## மரண அறிவித்தல்

### திருமதி வசந்தராணி கமலநாதன்

(தெல்லிப்பழை கூட்டுறவு வைத்தியசாலை முன்னாள் தாதியும், பாஷையூர் மகப்பேற்று நிலைய பொறுப்பு தாதியும் )



யாழ்.தெல்லிப்பழை புதுத்தோட்டத்தைப் பிறப்பிடமாகவும் உடுவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட வசந்தராணி கமலநாதன் 29.07.2016 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா(பத்திரிகை முகவர் - தெல்லிப்பழை) செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - ஆச்சிமுத்து தம்பதிகளின் அன்பு மருமகளும் கமலநாதன் அவர்களின் அன்பு மனைவியும் வாசன்(லண்டன்), மயூரன்(கனடா), சுமிதா(லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் வசந்தமலர், ஜெயமலர், ஜெயதேவி, காலஞ்சென்ற விமலாதேவி மற்றும் தவராஜா(ஜேர்மன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆனந்தரூபன்(அருள் - லண்டன்), சிவனேஸ்வரி(லண்டன்), மயூரதா(கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும் அஞ்சனா(லண்டன்), அஜீஸ்(கனடா), அக்ஷனா(கனடா), ஆதிஸ்(லண்டன்), ஆசினி(லண்டன்) ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.08.2016) திங்கட்கிழமை மு.ப 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பூவோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

அம்பலவாணர் வீதி,
உடுவில் கிழக்கு, சுன்னாகம்.

தகவல்:
குடும்பத்தினர்.

077 191 4061, 076 564 9521

## மரண அறிவித்தல்கள்

### வேலுப்பிள்ளை இராஜகுலேந்திரன்



புலோலி வடகிழக்கைப் பிறப்பிடமாகவும், வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை இராஜகுலேந்திரன் 30.07.2016 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை - நல்லம்மா தம்பதிகளின் மகனும், காலஞ்சென்ற சபாரத்தினம் - விசாலாட்சி தம்பதிகளின் மருமகனும், இந்திராணியின் பாசமிகு கணவரும், காலஞ்சென்ற ஜெயச்சந்திரனின் சகோதரனும், பாரதி (கண்டி), தேவகி (லண்டன்), பார்த்திபன் (கொழும்பு) ஆகியோரின் அன்புத் தந்தையும், கோணேஸ்வரமூர்த்தி (கண்டி), விஷ்ணுராஜா (லண்டன்), சத்யாசுலக்ஷனி (கொழும்பு) ஆகியோரின் அன்பு மாமனாரும், ஸ்ரீரங்கன், வைஷ்ணவி, பைரவி, பிரணவி, அஜேஷ், தன்யஸ்ரீ ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.08.2016) திங்கட்கிழமை காலை 8மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் முற்பகல் 10.30 மணியளவில் ஆனைவிழுந்தான் இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.
சிவகிரி, புலோலிகிழக்கு,
பருத்தித்துறை

19 2/4, அருதுசா ஒழுங்கை,
வெள்ளவத்தை,
கொழும்பு 06.

(N/98)
(11,18)

077 680 2053

### நாகரெத்தினம் ரங்கேஸ்வரன்

தோற்றம்
25
.
05
.
1972



மறைவு
19
.
07
.
2016

யாழ்.நயினாதீவு, 5ஆம் வட்டாரம், காளிகோயிலடியைப் பிறப்பிடமாகவும் லண்டன் Tolworth ஐ வசிப்பிடமாகவும் கொண்ட நாகரெத்தினம் ரங்கேஸ்வரன் 19.07.2016 செவ்வாய்க்கிழமை லண்டனில் அகாலமரணமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற நாகரெத்தினம்(இராசு) மற்றும் மகேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகனும் கதிரவேலு (நாகராசா - புளியங்கூடல்) - கமலாதேவி தம்பதிகளின் அன்பு மருமகனும் சிவானந்தியின் அன்புக் கணவரும் ஈழவனின் ஆருயிர் தந்தையும் பத்மலோசினி(கனடா), லிங்கேஸ்வரன்(சுவிஸ்), மோகனேஸ்வரன் (நோர்வே) ஆகியோரின் அன்புச் சகோதரரும் சேதுலிங்கம்(கனடா), திலகேஸ்வரி(சுவிஸ்), சுதர்மினி (நோர்வே), சிவப்பிரியா(இலங்கை), சிவநிஷா(ஐக்கியஅமெரிக்கா), கீதாஞ்சலி(இலங்கை), சிவசங்கர்(லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் வசீகரன்(இலங்கை), யசோதரன் (ஐக்கிய அமெரிக்கா), யுகதீசன்(இலங்கை) ஆகியோரின் அன்புச் சகலனும் வைஷ்ணவி, கீர்த்தனா, நிருசிகா, சுகலாபினி ஆகியோரின் அன்பு மாமாவும் லித்திகா அவர்களின் அன்புச் சித்தப்பாவும் சால்வி, அரண், வேனிலன், அஸ்வன்யா, காருண்யா, தருண், பாகவி ஆகியோரின் அன்புப் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(01.08.2016) திங்கட்கிழமை லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தவறான நடத்தையில் ஈடுபட்ட இருவர் பொலிஸாரிடம் மாட்டினர்

யாழ்ப்பாணம், ஓக. 1
அச்சுவேலி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் மரவள்ளித் தோட்டத்தில் இரவு நேரம் தவறான நடத்தையில் ஈடுபட்டிருந்த இருவரை அச்சுவேலிப் பொலிஸார் கைது செய்து எச்சரித்து விடுவித்தனர். இந்தச் சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.
இரவு நேரக்கடமையில் ஈடுபட்டிருந்த அச்சுவேலி பொலிஸார் மரவள்ளித் தோட்டத்தில் இருவர் இருப்பதை அவதானித்தனர். தோட்டத்தினுள் சென்று பார்த்த போது, இருவரும் அரைகுறை ஆடையுடன் தவறான நடத்தையில் ஈடுபட்டிருந்தனர்.
இருவரையும் பொலிஸ் நிலையம் அழைத்து வந்த பொலிஸார், மறுநாள் இருவரின் பெற்றோர்களையும் அழைத்து, எச்சரிக்கை செய்த பின்னர் வீட்டுக்கு அனுப்பி வைத்தனர். (வ-5-107)

## நிலக்கரி கொடுக்கல் வாங்கல் விசாரணை அறிக்கை தயார்

கொழும்பு, ஓக. 1
நிலக்கரி கொடுக்கல் வாங்கல் தொடர்பான கணக்காளர் நாயகத்தின் விசாரணை அறிக்கை இன்னும் இரண்டு வாரங்களில் கோப் குழுவிடம் முன்வைக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.
விசாரணை அறிக்கையைத் தயார் செய்துள்ளதாக கணக்காளர் நாயகம் காமினி விஜயசிங்க குறிப்பிட்டார்.
2009ஆம் ஆண்டிலிருந்து பல தடவைகள் இலங்கை மின்சார சபைக்கு தமது விசாரணை அறிக்கைகளை முன்வைத்துள்ளதாக அவர் கூறினார். தனது அவதானிப்புகள் தொடர்பில் இலங்கை மின்சார சபை கவனத்தில் கொள்ளவில்லை எனவும் கணக் காளர் நாயகம் சுட்டிக்காட்டினார்.
இதேவேளைஇ நிலக்கரி கொடுக்கல் வாங்கல் தொடர்பில் விசாரணை செய்வதற்கு நியமிக்கப்பட்ட மூவரடங்கிய குழுவின் விசாரணை அறிக்கை இன்று தமக்கு கிடைக்கவுள்ளதாக மின்சக்தி அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.
நுரைச்சோலை அனல் மின் நிலையத்திற்கான நிலக்கரி கொள்வனவின் போது, ஏதேனும் வகையில் நட்டம் ஏற்பட்டுள்ளதா என்பது தொடர்பில் ஆராய்வதற்கே மூவரடங்கிய குழு நியமிக்கப்பட்டது.(வ-4)

## தந்தையின் பெருவிரலை கடித்துக் குதறிய தனயன்

யாழ்ப்பாணம், ஓக. 1
தந்தையுடன் சண்டையிட்ட தனயன், தந்தையின் பெருவிரலைக் கடித்து துண்டித்த சம்பவம் அச்சுவேலிப் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.
தந்தையின் விரலைக் கடித்து துண்டாடிய தனயனை கைது செய்த பொலிஸார், நீதிமன்றில் முற்படுத்தினர். அவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.
தனயன் மதுபோதையில் வீட்டுக்கு வந்து, தந்தையுடன் சண்டையிட்டதாகவும், சண்டை முற்றியதில் தந்தையின் பெருவிரலை தனயன் கடித்ததாகவும் பொலிஸார் குறிப்பிட்டனர். தந்தை யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.
கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள தனயன், பாடசாலை ஆசிரியர் என பொலிஸார் கூறினர். (வ-5-101-107)

## நீர் இறைக்கும் இயந்திரம் களவு

யாழ்ப்பாணம், ஓக. 1
தெல்லிப்பழை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட அம்பனை பகுதியில் தோட்டக்கிணற்றில் பொருத்தியிருந்த நீர் இறைக்கும் இயந்திரம், கடந்த வியாழக்கிழமை களவாடப்பட்டுள்ளதாக தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.
திருடப்பட்ட நீர் இறைக்கும் இயந்திரத்தின் பெறுமதி 24 ஆயிரம் ரூபா என்று பொலிஸார் தெரிவித்தனர். இந்தச் சம்பவம் தொடர்பில் தோட்ட உரிமையாளரினால் வழங்கப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைய தெல்லிப்பழை குற்றத்தடுப்பு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.
(வ-5-107)

## இந்தோனேசியா செல்கிறார் ரணில்

உலக இஸ்லாமிய பொருளாதார மாநாட்டில் பங்கேற்பதற்காக பிரதமர் ரணில் விக்ரமசிங்க இன்று இந்தோனேசியாவுக்குப் பயணமாகிறார்.
இந்தோனேசியாவின் ஜகார்த்தாவில் நாளை செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகும் உலக இஸ்லாமிய பொருளாதார மாநாட்டில் பங்கேற்கும் பிரதமர் சிறப்பு உரையொன்றையும் ஆற்றவுள்ளார் என தெரிவிக்கப்பட்டது.நாளைமறுதினம் இரவு பிரதமர் நாடு திரும்ப உள்ளதாக பிரதமர் அலுவலம் தெரிவித்தது.

**வட இலங்கை சுதேச வைத்தியசபை**
**விசேட பொதுக்கூட்டம்**

காலம் : 14.08.2016 ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணி
இடம் : லங்கா சித்த ஆயுள்வேதக் கல்லூரி மண்டபம், சுன்னாகம்.
தலைமை : Dr.K.திருலோகமூர்த்தி

நிர்வாகம்,பாடத்திட்டம், பரீட்சைகள் தொடர்பான இறுதிமுடிவுகள் எடுக்கப்படவுள்ளதால் உறுப்பினர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.
வட இலங்கை சுதேச வைத்தியசபை.

**பதவி வெற்றிடம்**

சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட எமது International (pvt) Ltd ஆனது இலங்கையில் வடக்கு மற்றும் கிழக்குமாகாணங்களில் தனது புதிய கிளைகளை ஆரம்பிப்பதனால்
*அலுவகை சுத்திகரிப்பாளர் *மேற்பார்வையாளர்
*அலுவலகர்கள் *உதவி முகாமையாளர்
*முகாமையாளர்
என்னும் பதவி வெற்றிடங்களுக்கான தகைமையாளர்களை எதிர்பார்க்கின்றனர்.
*தகைமை :10ஆம் ஆண்டு,O/L,A/L மற்றும் மேலதிக கல்வி கற்றோர்.
* தங்குமிட வசதியுண்டு.
தொடர்பு.0772986763,0770771377

**கண்ணீர் அஞ்சலி**

யாழ்ப்பாண கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் (முறைசாராக்கல்வி) திரு. இ. இரவீந்திரன் அவர்களுடைய தாயார்



திருமதி மகேஸ்வரி இரட்ணசபாபதி

அவர்கள் இறைவனடி சேர்ந்ததையிட்டு ஆழ்ந்த துயரடைவதுடன் எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நலன்புரி கழகம்
வலயக்கல்வி அலுவலகம் யாழ்ப்பாணம்.

(J 1972)(12.18)

**கண்ணீர் அஞ்சலி**

திருமதி கோமதி குகதாஸ்
(யா/ நல்லூர் ஸ்தான சி.சி.த.க. பாடசாலை கணித பாட ஆசிரியர்)



அவர்கள் திடீர் மறைவுத் துயர் அறிந்து பேரதிர்ச்சி அடைந்துள்ள நாம் அவரது ஆத்மா எல்லாம் வல்ல இறைவனது திருவடிகள் சேரப் பிரார்த்திப்பதோடு அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

[illegible] சமூகம்
[illegible].சி.த.க. பாடசாலை.

(ஜே.3420)
(13.[illegible])

### ஒற்றையாட்சி
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மீதோ, அந்த அரசால் இயற்றப்பட்டிருக்கும் அரசமைப்பின் மீதோ, உள்நாட்டு நீதிப்பொறிமுறை மீதோ, எமக் குத்துளியளவும் நம்பிக்கைகிடையாது. பன்னாட்டு நீதிபதிகள்தான் போர்க்குற்ற விசாரணையை முன்னெடுக்கவேண்டும்.
சாட்சிகளின் பாதுகாப்புச் சட்டம் இந்த அரசு இயற்றியிருக்கின்றது. இவை எல்லாம் பெயரளவில் மாத்திரம் இருக்கின்றன. நடைமுறையில் எதுவும் இல்லை. இந்த அரசுக்கு எதிராக சாட்சியமளித்தால், சாட்சிப் பாதுகாப்புச் சட்டத்தின் மூலம் நாம் பாதுகாக்கப்படுவோமா ?
நல்லிணக்கப் பொறிமுறை எவ்வாறு அமைய வேண்டும் என்று கருத்துக் கேட்கின்றீர்கள். நீங்கள் முன்வைக்கும் பரிந்துரைகளை - மக்களின் கருத்துக்களை இந்த அரசு ஏற்றுக் கொள்ளுமா ? அதற்கான உத்தர வாதம் ஏதாவது இருக்கின்றதா? - என்று கேள்வி எழுப்பினார்.
வடமராட்சியைச் சேர்ந்த கே.தவராசா கருத்துத் தெரிவிக்கையில், வன்னியில் எனது மகன் தங்கியிருந்தபோது காணாமற்போய்விட்டான். எங்கு தேடியும் பலன் இல்லை. இலங்கையின் நீதிமன்றக் கட்டமைப்பின் மீது எமக்கு நம்பிக்கையில்லை.
ஒற்றையாட்சி அரசமைப்பு மாற்றம் செய்யப்பட வேண்டும். இதில் மாற்றம் வந்தால்தான் தமிழ் மக்கள் இந்த நாட்டில் ஓரளவாவது நிம்மதியாக வாழ முடியும் - என்றார். (வ-5-108-109)

### மைத்திரி
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ரணில் விக்கிரமசிங்க, முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஆகியோருக்கு இடையில் முக்கிய கலந்துரையாடல் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.
இந்தக் கலந்துரையாடல் ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்றது.
முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ குடும்பத்தினர் மீதான குற்றச்சாட்டுகள் தொடர்பான விசாரணைகள், கூட்டு எதிரணியின் செயற்பாடுகள் மற்றும் நாட்டின் தற்போதைய நிலமைகள் தொடர்பாகவும் இந்தச் சிறப்புக் கலந்துரையாடலில் ஆராயப்பட்டதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (வ-4)

### பிரதேசங்களுக்குப்
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
உறவினர்களுக்கு அறிவிக்கப்படவேண்டும். சட்ட ரீதியற்ற கைதுகள் இப்போதைய ஆட்சியிலும் தொடர்ந்து கொண்டிருக்கின்றன.
இங்கு 1971ஆம் ஆண்டு தொடக்கம் காணாமற்போதல் சம்பவங்கள் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. அதற்குரிய தீர்வுகள் இதுவரை காணப்படவில்லை. அரசியல் கைதிகள் பலர் விசாரணைகளின்றித் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றனர். அவர்கள் தம்மை விடுவிக்குமாறு பல்வேறு போராட்டங்கள் நடத்தியுள்ளனர். இதுவரை அவர்கள் விடுவிக்கப்படவில்லை. அவர்களது குடும்பத்தினர் பல்வேறு துன்பங்களுக்கு முகம்கொடுத்து வந்திருக்கின்றனர்.
இராணுவத்தினர் வசமுள்ள காணிகள் விடுவிக்கப்படவேண்டும். இராணுவப் பிரசன்னம் இல்லாமல் செய்யப்படவேண்டும். இவை எல்லாம் ஒருங்கே நடந்தால்தான் நல்லிணக்கம் ஏற்படும் - என்றார்.
(வ-5)

**ஆங்கில ஆசிரியர் தேவை**
வெளிநாடு செல்ல இருக்கும் ஆங்கிலத்தில் எழுதத் தெரிந்த.மாணவனுக்கு குறுகிய [illegible]
தொடர்பு.0772051740

### வெள்ளைவான்
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஆவணங் கள், கடந்த மார்ச் 29ஆம் திகதி களவாடப்பட்டுள்ளன.
ஆள்கடத்தல்கள், கடத்தல்கள், ஆயுதக் கடத்தல்களுக்கும் அரசியல்வாதிகள் மற்றும் கடற்படை அதிகாரிகளுக்கும் இடையில் உள்ள தொடர்புகளை வெளிப்படுத்தக் கூடிய ஆவணங்களே திருடப்பட்டுள்ளன.
கடத்தல்கள் தொடர்பான தகவல்களை குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் வாக்குமூலமாக அளித்திருந்த லெப்.கொமாண்டர் கே.சி.வெலகெதரவுக்கு கடற்படை உயர் மட்டத்தில் இருந்து கடும் அழுத்தங்கள் கொடுக்கப்பட்டன. விடுமுறை பெறாமல் வெளிநாடு சென்றதாக குற்றம்சாட்டப்பட்டு இராணுவ நீதிமன்றினால், அவர் தண்டிக்கப்பட்டார்.
இராணுவ விசாரணை நீதிமன்றினால் பதவி இறக்கம் செய்யப்பட்ட தீர்ப்பை, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ரத்துச் செய்தார் என அந்தச் செய்தியில் கூறப்பட்டுள்ளது. (வ-5)

### யாத்திரைக்கு
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பாட்டத்தில் பெருந்திரளான மக்கள் பங்கேற்று தமது ஆதரவை அரசுக்கு வெளிப்படுத்தினர்.
நல்லாட்சி அரசைக் குழப்ப வேண்டாம், அபிவிருத்திகளுக்குத் தடை போடவேண்டாம் என்று அவர்கள் கோஷம் எழுப்பியிருந்தனர்.
ஐக்கிய தேசியக் கட்சியின் அநுராதபுரம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சந்திம கமகே உட்பட மேலும் சில அரசியல்வாதிகளும் இதில் களமிறங்கியிருந்தனர்.
'ஆட்சியில் இருக்கும்போது தங்கக் குதிரையிலும், விமானங்களிலும் பயணங்களை மேற்கொண்டவர்கள், தற்போது ஆட்சியைப் பிடிக்கும் அவாவில் பாதயாத்திரை செல்கின்றனர். இதனைக் கண்டு நாம் அஞ்சமாட்டோம். திருடர்களைப் பாதுகாப்பதற்காக திருடர்கள் களத்தில் குதித்த ஒரு சம்பவமாகவே மகிந்த அணியின் பாதயாத்திரையை நாம் பார்க்கிறோம்' என்றார் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திம கமகே.
(வ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு மாகாணத்தின் அபிவிருத்தி பணிகள் அடுத்த ஆண்டு ஆரம்பம்

## பிரதமர் ரணில் தெரிவிப்பு

கொழும்பு, ஓக.1
வடக்கு மாகாணத்துக்கான அபிவிருத்திப் பணிகள் அடுத்து ஆண்டு முன்னெடுக்கப்படும். வட மாகாணத்துக்கு எவ்வாறு குடிதண்ணீரைப் பெற்றுக் கொடுப்பது தொடர்பில் பேச்சு முன்னெடுக்கப்பட்டது. இவ்வாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

பொலநறுவையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

வடக்கிற்கு எவ்வாறு குடிதண்ணீரைப் பெற்றுக் கொடுப்பது தொடர்பில் நாம் பேச்சு நடத்தி வருகின்றோம். சுற்றுலாத்துறை மற்றும் தொழிற்சாலைகளை அமைத்து திருகோணமலையை முழுமையாக அபிவிருத்தி செய்ய சிங்கப்பூர் அரசு முழு ஒத்துழைப்பை வழங்க இணக்கம் தெரிவித்தது.

கிழக்கு மாகாணத்தை அபிவிருத்தி செய்வது தொடர்பில் மாகாண முதலமைச்சர், சுற்றுலாத்துறை அபிவிருத்தி அமைச்சருடன் பேச்சு நடத்தியுள்ளார். அம்பாந்தோட்டையில் அபிவிருத்திப் பணிகளை முன்னெடுப்பதற்குச் சீன தூதுவர் இணக்கம் தெரிவித்துள்ளார். முதலீடுகளை மேற்கொள்ளவுள்ளவர்களையும் சந்திக்க முடிந்தது. அங்கு ஒரு துறைமுகமும், விமானநிலையமும் காணப்படுகின்றன. வருமானம் இல்லாதபோதிலும் கடனை செலுத்த வேண்டியதேவையுள்ளது. இதனை நிவர்த்திப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. இரண்டு கட்சிகளும் ஒன்றிணைந்ததாலேயே அபிவிருத்திப்பணிகளை முன்னெடுக்க முடிந்தது. இது எப்போதும் தொடரப்போவது இல்லை. ஒரு வருடத்திலேயே இவ்வாறான நன்மைகள் கிடைக்குமாயின் ஐந்து வருடங்களில் பல விடயங்களைச் சாதிக்க முடியும்.

போரினால் செய்ய முடியாமல் போன பல அபிவிருத்திப் பணிகளை இன்று தொடர வாய்ப்பு கிடைத்துள்ளது. அதன் பிரதிபயன் உங்களையே வந்தடையும். கடந்த காலத்தில் இரண்டு கட்சிகளும் இரண்டாக பிரிந்து செயற்பட்டுள்ளன. இரண்டு பக்கங்களிலும் இருந்து தாக்குதல்களை நடத்தியுள்ளோம். எங்களுக்கு நாட்டை அபிவிருத்தி செய்ய வேண்டிய பொறுப்பு காணப்படுகின்றது. அதன் பின்னர் தனிப்பட்ட அரசியலை முன்னெடுக்க முடியும். இதற்கு எதிர்ப்புத் தெரிவிப்பவர்கள் இருக்கலாம், ஆதரவு தெரிவிப்பவர்களும் இருக்கலாம். இன்னும் பல வேலைத்திட்டங்களை முன்னெடுக்க வேண்டிய தேவையுள்ளது.

வடக்குக்கு இதுவரை அபிவிருத்திச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படவில்லை. அடுத்த வருடத்தில் அந்த பணிகளை முன்னெடுக்க எதிர்பார்த்துள்ளோம். எவர் வேண்டுமென்றாலும் கருத்துக்களை முன்வைக்கும் வகையில் நாடாளுமன்றம் மாற்றியமைக்கப்பட்டுள்ளது - என்றார். (வ-5)

# அபிவிருத்தித் திட்டங்களை பங்குகளாக மாற்றும் யோசனையை நிராகரித்தது சீனா

கொழும்பு, ஓக.1
மத்தல விமான நிலையம் மற்றும் அம்பாந்தோட்டைத் துறைமுகம் உள்ளிட்ட சீனாவினால் முதலீடு செய்யப்பட்ட திட்டங்களை, பங்குகளாக மாற்றுவதற்கு இலங்கை அரசு முன்வைத்த கோரிக்கையைச் சீனா நிராகரித்தது.

சீனாவின் சட்டங்களின் படி, இது சாத்தியமற்றது என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் தெரிவித்தார் இலங்கைக்கான சீனத் தூதுவர்.

வர்த்தக விதிமுறைகளுக்கு அமைய, முதலீட்டாளர்களுடன் கலந்துரையாடியே இதுபற்றி தீர்மானிக்க முடியும் என்றும் அவர் கூறினார்.

பொருளாதார முகாமைத்துவம் தொடர்பான அமைச்சரவைக் கூட்டத்திலேயே, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, சீனத் தூதுவரிடம் இந்தக் கோரிக்கையை விடுத்திருந்தார். அந்தக் கூட்டத்தில் சீனத் தூதுவரும் பங்கேற்றிருந்தார்.

இலங்கை தற்போது எதிர்கொள்ளும் நிதி நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு ஆதரவளிப்பதாகவும், சீனத் தூதுவர் குறிப்பிட்டார். (வ-5)

## சிகிரியா ஓவியங்களைப் பாதுகாக்கக் குழு

கொழும்பு, ஓக. 1
உலகப் புகழ்பெற்ற சிகிரியா சுவர் ஓவியங்களின் தற்போதைய நிலை தொடர்பில் ஆராய்ந்து, தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டது.

தொல்பொருளியல் பாதுகாப்பு துறையில் பிரபல்யமான 6 பேர் இந்தக் குழுவில் அடங்கியுள்ளனர் என்று தொல்பொருளியல் திணைக்களம் தகவல்கள் தெரிவித்தன. சிகிரியா சுவர் ஓவியங்களின் தற்போதைய நிலை தொடர்பில் ஆராயப்படவுள்ளதோடு, அவற்றிற்கு ஏற்பட்டுள்ள சேதங்கள் தொடர்பிலும் இந்தக் குழுவினரால் ஆராயப்படவுள்ளது.

இதனை அடுத்து ஓவியங்களைப் பாதுகாப்பதற்கான சிறந்த வழிமுறைகள் தொடர்பில் பரிந்துரைகள் பெற்றுக் கொள்ளப்படும் எனவும் தொல்பொருளியல் திணைக்களம் கூறியுள்ளது. (4)

## பறை இசை பயிற்சி

யாழ்ப்பாணம், ஓக. 1
பாரம்பரிய கலைகளை அடுத்த தலைமுறைக்குக் கொண்டு செல்லும் நோக்கோடு, யாழ். என்ரரைமென்றின் தொன்மம் கலைக்குழுவின் பறையிசை நடனக்குழு புதிய கலைஞர்களை இணைத்துக் கொள்ளவுள்ளது.

இலவசமாக நடைபெறவுள்ள இந்தப் பயிற்சி வகுப்பில், ஆர்வமுள்ளவர்கள் thonmamkalaikkulugmail.com அல்லது 0772487861 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளலாம் என பறையிசை நடனக்குழு தெரிவித்தது. (வ-ரி)

# அயலுறவுச் செயலராக இன்று பதவியேற்கிறார் எசல வீரக்கோன்

கொழும்பு, ஓக. 1
இலங்கையின் புதிய அயலுறவுச் செயலராக எசல வீரக்கோன் இன்று பதவியேற்கிறார். இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவராக கடந்த எட்டு மாதங்களாகப் பணியாற்றிய எசல வீரக்கோன் புதிய பதவியை ஏற்றுக் கொள்வதற்காக டில்லியில் இருந்து நேற்று முன்தினம் இரவு நாடு திரும்பினார்.

அயலுறவுச் செயலராகப் பணியாற்றும் சித்ராங்கனி வகீஸ்வராவின் பதவிக்காலம் நேற்றுடன் முடிவடைந்தது. இந்த நிலையிலேயே, புதிய அயலுறவுச் செயலராக எசல வீரக்கோன் நியமிக்கப்பட்டார்.

இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவர் பதவியில் இருந்து விலகிச் செல்லும் எசல வீரக்கோனுக்கு இந்திய அயலுறவுச் செயலர் எஸ். ஜெயசங்கர் கடந்த வெள்ளிக்கிழமை இரவு ஹைதராபாத் இல்லத்தில் இராப்போசன விருந்து அளித்தார்.

இதன்போது, இலங்கைக்குத் தேவையான எந்த உதவியையும் இந்தியா வழங்கத் தயாராக இருப்பதாகவும், தம்முடன் தொடர்ச்சியாகத் தொடர்பில் இருக்குமாறும் இந்திய அயலுறவுச் செயலர் எஸ்.ஜெயசங்கர் தெரிவித்தார். இதனிடையே, இலங்கை அயலுறவுச் செயலர் பதவியில் இருந்து நேற்றுடன் ஓய்வுபெற்ற சித்ராங்கனி வகீஸ்வரா புதுடில்லிக்கான தூதுவராக விரைவில் பொறுப்பேற்கவுள்ளார். (வ-4)

## நிர்வாகத் தெரிவு

கொழும்பு, ஓக. 1
வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய பழைய மாணவர்கள் சங்கம் வருடாந்த பொதுக் கூட்டம் நேற்று இடம்பெற்றது. அதில் புதிய நிர்வாக சபை உறுப்பினர்கள் தெரிவும் இடம்பெற்றது. பாடசாலை அதிபர் திரு. ரி. அமிர்தலிங்கம் பழைய மாணவர்கள் சங்கத் தலைவராகவும், திரு. எஸ். சுஜன் செயலாளராகவும், திரு. ஆ. அம்பிகைபாகன் பொருளாளராகவும் , பத்து நிர்வாகசபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். (ற-4)


## மரண அறிவித்தல்கள்

### திருமதி சிவபாக்கியம் முத்தையா



புங்குடுதீவு, இறுப்பிட்டி, 6ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், சோலைபுரம், வில்லூன்றியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவபாக்கியம் முத்தையா நேற்று (31.07.2016) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02.08.2016) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். (J/3418) (11,17,18)

121/36, சோலைபுரம்,
வில்லூன்றிப் பிள்ளையார் கோயிலடி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

077 502 1953, 077 064 1104

### சின்னத்துரை அருந்தவராசா
(Goalkeeper)



கல்லுவம், கரணவாய் மேற்கு, கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வசிப்பிடமாகவும் இல.166, புன்னை நீராவியடி, விஸ்வமடுவைச் சேர்ந்த சின்னத்துரை அருந்தவராசா 31.07.2016 ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கல்லுவம், கரவெட்டியைச் சேர்ந்த சின்னத்துரை - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கோண்டாவில் வடக்கைச்சேர்ந்த சின்னத்துரை - சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் ஞானாம்பிகையின் அன்புக் கணவரும் அகிலன் (ஜேர்மனி), அகிலாம்பிகை(ஜேர்மனி), பிரதீபன்(சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்றவர்களான நேசம்மா, சின்னராசா மற்றும் இராஜேஸ்வரி, காலஞ்சென்ற இராசையா, தர்மசீலி ஆகியோரின் அன்புச் சகோதரனும் கனகாம்பிகை, காலஞ்சென்ற யோகாம்பிகை ஆகியோரின் அன்பு மைத்துனரும் சுகந்தினி, சிறிதரன், ராதிகா ஆகியோரின் அன்பு மாமனாரும் தமிழ்ஞானா, தமிழ் அருந்தன், தமிழ்நேசா, தமிழ்ராகன், யோமனா, லோமனா, சிறீசா, அகிந்தன், ரதீஸ், ரதீசா, ரகீசா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கல்லுவம் கரவெட்டியில் நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கல்லுவம்,
கரணவாய் மேற்கு,
கரவெட்டி
(N 99) (14,17,18)

தகவல்:
குடும்பத்தினர்.

077 756 2413, 021 205 6380


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ரகுமானுக்கு அறுவை சிகிச்சை

பங்களாதேஷ் அணியின் நட்சத்திர வீரரான ரகுமான் காலில் அறுவைச் சிகிச்சை செய்து கொண்டதால் அடுத்த ஆறு மாதங்களுக்கு அவர் தொடர்களில் கலந்துகொள்ள முடியாத நிலை ஏற்பட்டது.

தனது அபாரமான வேகப்பந்து வீச்சால் கிரிக்கெட் உலகை தன்பக்கம் திருப்பிய ரகுமான், ஐ.பி.எல். தொடரில் ஹைதராபாத் அணிக்காக ஒப்பந்தமாகி, அந்த அணிக்கு கிண்ணத்தைப் பெற்றுக்கொடுத்தார். இதனையடுத்து இங்கிலாந்தின் செக்ஸ் அணி அவரை ஒப்பந்தம் செய்தது. அந்த அணிக்காக விளையாடிவந்தபொழுது அவரது தொடைப்பகுதியில் காயம் ஏற்பட்டது. காயத்துக்கு அறுவைச் சிகிச்சை செய்துள்ள நிலையில், அடுத்த ஆறு மாதங்களில் அவர் ஆடுகளத்துக்கு திரும்ப முடியாத நிலை ஏற்பட்டது. (ம)



## சமநிலை

யாழ்ப்பாணம், ஓக. 1

அராலி திருமகள் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில், சாவற்கட்டு மகாத்மா, நவிண்டில் கலைமதி அணிகள் மோதிய ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

திருமகளின் மைதானத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு 7 மணிக்கு நடைபெற்ற இந்த ஆட்டத்தில், நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களில் இரு அணிகளும் கோல் எதையும் பதிவுசெய்யாத நிலையிலேயே ஆட்டம் சமநிலை கண்டது. (ம)



# ரியோ ஒலிம்பிக்கில் சிரிய அகதிப் பெண்

ஒலிம்பிக்கில் பங்கேற்கவுள்ள அகதிகள் அணியில், நீச்சல் போட்டியில் களமிறங்க சிரியப் பெண் ஒருவர் தகுதி பெற்றுள்ளார்.


ஈராக், சிரிய நாடுகளில் நடைபெறுகின்ற உள்நாட்டுப் போர் காரணமாக அந்த நாடுகளில் இருந்து ஐரோப்பிய நாடுகளுக்கும், ஏனைய நாடுகளுக்கும் சென்றுள்ள வீரர், வீராங்கனைகள், அடுத்த மாதம் நடைபெறவுள்ள ஒலிம்பிக் தொடரில் பங்கேற்பதற்காக அகதிகள் அணி ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. ஒரு நாட்டின் கொடியில்லாமல் ஒலிம்பிக்கின் கொடியின் கீழ் அவர்கள் ரியோ ஒலிம்பிக் தொடரில் பங்கேற்கலாம். இந்த அகதிகள் அணிக்கு நேற்று ஓர் சிரியப் பெண் தகுதி பெற்றார்.

யஸ்ரா மர்தினி என்ற 18 வயதான குறித்த யுவதி சிரியா நாட்டைச் சேர்ந்தவர். உள்நாட்டில் இடம்பெற்ற போர் காரணமாக கடல் வழியாக ஐரோப்பா நோக்கி பய ணித்தார். அவர் பயணித்த படகு இடை நடுவே பழுதாகியது. இதனால் யஸ்ரா மர்தினி நீச்சலடித்து, கீரேக்கத்துக்குச் சென்றார். அதீத நீச்சல் திறைமையுள்ள அவர் ஒலிம்பிக் தொடரில் பங்கேற்க விருப்பம் தெரிவித்ததையடுத்து, அவரது குருதி மாதிரி, சோதனைக்கு அனுப்பப்பட்டது. குருதி மாதிரிச் சோதனையிலும், தகுதிச் சுற்றுக்களிலும் வெற்றிபெற்ற யஸ்ரா ஒலிம்பிக்கில் களமிறங்கவுள்ளார். (ம)

## கற்பதற்கு உகந்ததல்ல செரபோவாவின் வாழ்க்கை

இந்தியாவின் கோவா மாநில பள்ளிப் புத்தகங்களிலிருந்து மரிய செரபோவாவின் வாழ்க்கை வரலாறு நீக்கப்படவுள்ளது.

இந்தியாவின் கோவா மாநில அரச பள்ளிகளில் செரபோவாவின் வாழ்க்கை வரலாறு பாடமாகக் கற்பிக்கப்பட்டது. மிகவும் ஏழ்மையான குடும்பத்தில் பிறந்த அவர், எவ்வாறு முன்னேறினார் என்பதைச் சித்திரிக்கும் விதமாக குறித்த பாடத்திட்டங்கள் அமைந்திருந்தன. ஆனால், ஊக்க மருந்துப் பாவனையில் செரபோவா சிக்கியுள்ளமையால், அவரின் வாழ்க்கை வரலாறு கற்பிக்கப் படக்கூடாது என எதிர்ப்புக்கள் வலுத்தன. இந்த நிலையில் பொதுவான வேண்டுகோளுக்கு இணங்க செரபோவாவின் வாழ்க்கை வரலாறு நீக்கப்படவுள்ளது. (ம)





# பிரேஸிலை அடைந்தது ரஷ்யா

ஊக்கமருந்துப் பாவனை பற்றிய பல சர்ச்சைகளைச் சந்தித்த நிலையில், அணியின் வீரர்கள் பலரையும் இழந்துள்ள ரஷ்யாவின் ஒலிம்பிக் அணி நேற்றுமுன்தினம் பிரேஸிலின் ரியோ டி ஜெனிரோ நகரைச் சென்றடைந்தது. அரச ஆதரவுபெற்ற ஊக்கமருந்துப் பாவனை, ரஷ்யாவில் இடம்பெறுவதாக ஆதாரங்களுடன்கூடிய அறிக்கைகள் வெளியானதைத் தொடர்ந்து, இந்த ஒலிம்பிக் போட்டிகளில் ரஷ்யா பங்குபற்றுமா என்ற சந்தேகம் காணப்பட்டது. ஒட்டுமொத்த ரஷ்ய வீரர்களுமே தடைசெய்யப்பட வேண்டுமென்ற கோரிக்கைகள் எழுந்திருந்தன.

எனினும், ஏற்கெனவே தடைக்குள்ளான தடகள வீரர்கள் தவிர, ஏனைய வீரர்கள் கடுமையான கட்டுப்பாடுகளுக்கு மத்தியில் அனுமதிக்கப்பட்டனர். இந்த நிலையில், நூற்றுக்கும் மேற்பட்ட வீரர்களை இழந்த நிலையில், சுமார் 70 பேரைக் கொண்ட அணியே ஒலிம்பிக்கில் பங்கேற்கச் சென்றுள்ளது. (ம)


## இறுதியாட்டத்தில் ஆவரங்கால் மத்தி.

யாழ்ப்பாணம், ஓக. 1

மட்டுவில் மோகனதாஸ் வி.கழகம் நடத்தும் கரப்பந்தாட்டத் தொடரில் இளவாலை மத்திய விளையாட்டுக் கழகத்தை வீழ்த்தி இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகம்.

யாழ். மாவட்ட ரீதியாக நடத்தப்பட்டுவரும் இந்தத் தொடரின் அரையிறுதியாட்டமொன்று மோகனதாஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகமும் இளவாலை மத்திய விளையாட்டுக் கழகமும் பலப்பரீட்சை நடத்திய இந்த ஆட்டத்தில், முதல் மூன்று செற்களையும் முறையே 25:18, 25:23, 25:19 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றிய ஆவரங்கால் மத்திய அணி 3:0 என்ற வெற்றிபெற்று இறுதிக்குத் தகுதி பெற்றது. (ம-108)



## ரியோ ஒலிம்பிக்கில் களமிறங்கும் ஒரே பிரசவத்தில் பிறந்த மூவர்

ஒலிம்பிக் தொடர்களில் ஒரே நேரத்தில் இரட்டையர்கள் பங்கேற்பதே அரிதான விடயமாகும். இந்த நிலையில் அடுத்த மாதம் 'ரியோ நகரில் நடைபெறவுள்ள ஒலிம்பிக் தொடரில் ஒரே பிரசவத்தில் பிறந்த மூன்று சகோதரிகள் களமிறங்கவுள்ள அதிசயமான சம்பவம் அரங்கேறவுள்ளது.

ஐரோப்பிய கண்டத்தில் உள்ள எஸ்தோனியா நாட்டைச் சேர்ந்த 30 வயதான லில்லி, லினா, லெய்லாலுயிக் ஆகிய மூன்று சகோதரிகள்தான் இந்த ஆச்சரியமான சாதனையை படைக்க இருப்பவர்கள். மூவரும் பெண்களுக்கான மரதன் ஓட்டத்தில் கலந்து கொள்ள தகுதி பெற்றுள்ளனர். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆவரங்கால் இந்து. அசத்தல் ஆட்டம்

யாழ்ப்பாணம், ஓக. 1
மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக் கழகம் இரு பிரிவாக நடத்திய கரப்பந்தாட்டத் தொடரில் 'ஏ' பிரிவில் ஆவரங்கால் இந்து இளைஞர் அணி சம்பியன்.

மோகனதாஸ் வி.கழக மைதானத்தில் நேற்று நடைபெற்ற இந்த இறுதியாட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் அணியை எதிர்த்து ஆவரங்கால் மத்திய அணி மோதியது. முதல் செற்றை 25:19 என்ற புள்ளிகள் அடிப்படையில் கைப்பற்றியது இந்து.

இரண்டாவது செற்றை 25:18 என்ற புள்ளிகள் அடிப்படையில் கைப்பற்றி, பதிலடி கொடுத்தது மத்தி. ஆனால், மூன்றாவது, நான்காவது செற்களை முறையே 25:20, 25:19 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றிய ஆவரங்கால் இந்து இளைஞர் அணி முடிவில் 3:1 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்றுச் சம்பியனானது. (ம-23)

# மாவட்ட மட்ட ஹொக்கித் தொடரில் கிண்ணம் வென்றது ஓல்ட் கோல்ட்ஸ்

யாழ்ப்பாணம், ஓக. 1
அம்பாள் விளையாட்டுக் கழகம் நடத்திய யாழ். மாவட்ட அணிகளுக்கு இடையிலான ஹொக்கியில் ஓல்ட் கோல்ட்ஸ் அணி சம்பியனானது.

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மைதானத்தில் நேற்று நடைபெற்ற இந்த இறுதியாட்டத்தில் ஓல்ட் கோல்ட்ஸ் அணியை எதிர்த்து யூனியன் கல்லூரி அணி மோதியது. ஆட்டத்தின் 7ஆவது நிமிடத்தில் ஓல்ட் கோல்ட்ஸ் அணியின் நியான்சன் தனது அணிக்கான முதல் கோலைப் பதிவு செய்தார். 16 ஆவது நிமிடத்தில் துசாங்கனின் உதவியுடன் யூனியன் பதிலடி கொடுத்து கோல்களின் எண்ணிக்கையை சமப்படுத்தியது. அடுத்த சில நிமிடங்களில் யூனியனின் இரண்டாவது கோலும் பதிவானது. மாற்றங்கள் இல்லாமல் 2:1 என்ற யூனியனின் ஆதிக்கத்துடன் முடிந்தது முதல் பாதி.



47 ஆவது நிமிடத்தில் யூனியன் கல்லூரி அணி வீரர் கொக்மன் பிறிதொரு கோலைப் பதிவு செய்ய, தற்போது நிலமை 3:1. ஆனால் இறுதிவரை தனது போராட்டத்தை தொடர்ந்தது ஓல்ட் கோல்ட்ஸ். அந்த அணியின் வீரர்களான நியான்சன், பிரியலக்ஸன் இருவரும் முறையே 49ஆவது, 61 ஆவது நிமிடங்களில் அடுத்தடுத்து இரு கோல்களைப் பதிவு செய்ய ஆட்டம் 3:3 என சமநிலை கண்டது.

சமநிலைத் தவிர்ப்பு அடிகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலமை ஏற்பட 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றுச் சம்பியனானது ஓல்ட் கோல்ட்ஸ். ஆட்ட நாயகனாக ஓல்ட் கோல்ட்ஸ் அணியின் நிசாந்தன், தொடராட்ட நாயகனாக யூனியன் கல்லூரி அணியின் கொக்மன் இருவரும் தெரிவாகினர். (ம-422)

# அம்பாளின் துடுப்பாட்டத்தில் சம்பியனானது சிற்றி அணி

யாழ்ப்பாணம், ஓக. 1
சுன்னாகம் கிழக்கு அம்பாள் விளையாட்டுக் கழகம் நடத்தும் துடுப்பாட்டத் தொடரில் கரவெட்டி சிற்றி அணி சம்பியனானது.

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மைதானத்தில் நேற்று நடைபெற்ற இந்த இறுதியாட்டத்தில் கரவெட்டி சிற்றி அணியை எதிர்த்து கரவெட்டி ஞானம்ஸ் அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய கரவெட்டி சிற்றி அணி நிர்ணயிக்கப்பட்ட 8 பந்துப் பரிமாற்றங்களில் 5 இலக்குகளை இழந்து 61 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக உமைசுதன் 38 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் கரவெட்டி ஞானம்ஸ் அணியின் சார்பில் சுகந்தன் 3 இலக்குகளையும், சேந்திரன், ஜெனி இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

48 பந்துகளில் 62 ஓட்டங்கள் என்ற இலக்குடன் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஞானம்ஸ் அணி நிர்ணயிக்கப்பட்ட 8 பந்துப் பரிமாற்றங்களில் 5 இலக்குகளை இழந்து 27 ஓட்டங்களை மாத்திரம் பெற்றதையடுத்து 34 ஓட்டங்களால் வெற்றி பெற்றுச் சம்பியனானது சிற்றி அணி. (ம-422)




# இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஓக. 1

*திருமகளின் கரப்பந்தாட்டம்*

அரியாலை திருமகள் சனசமூக நிலையத்தின் கரப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த சனசமூக நிலைய மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இந்தத் தொடரில் இன்று திங்கட்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெறவுள்ள ஆட்டத்தில் ஆவரங்கால் மத்திய 'பி' அணியை எதிர்த்து வழக்கம்பரை அம்பாள் அணி மோதவுள்ளது.

*இருதயராஜாவின் கால்பந்தாட்டம்*

மெலிஞ்சிமுனை இருதயராஜா விளையாட்டுக் கழகம் அழைக்கப்பட்ட கழகங்களுக்கு இடையில் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழகத்தின் மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இந்தத் தொடரில் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில், வேலணைத் துறையூர் ஐயனார் அணியை எதிர்த்து நாரந்தனை அண்ணா அணி மோதவுள்ளது.

*பாரதி வி.க. தொடர்*

பொலிகை பாரதி விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள், குறித்த கழகத்தின் மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இந்தத் தொடரில் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில், கரவைச்சுடர் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து பருத்தித்துறை ஐக்கிய அணியும், மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் இரண்டாவது ஆட்டத்தில் குப்பிளான் விக்னேஸ்வரா விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன. (ம-108)

# சொந்தத் தொடரில் சம்பியன்; சாதித்தது மோகனதாஸ் வி.க.

யாழ்ப்பாணம், ஓக. 1
மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக் கழகம் இரு பிரிவாக நடத்திய கரப்பந்தாட்டத் தொடரில் 'பி' பிரிவில் அந்த அணியே சம்பியனானது.

மோகனதாஸ் வி.கழக மைதானத்தில் நேற்று நடைபெற்ற இந்த இறுதியாட்டத்தில் நாயன்மார்கட்டு பாரதி அணியை எதிர்த்து மட்டுவில் மோகனதாஸ் அணி மோதியது. ஐந்து செற்களைக் கொண்ட இந்த ஆட்டத்தின் முதல் மூன்று செற்களையும் 25:22, 25:16, 25:21 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றிய மட்டுவில் மோகனதாஸ் அணி 3:0 என்ற நேர்செற் கணக்கில் வெற்றி பெற்றுச் சம்பியனானது. (ம-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கோக்லிதான் பெஸ்ட்; லீயின் ஒரே தெரிவு

நிகழ்கால கிரிக்கெட் உலகின் ஆகச் சிறந்த துடுப்பாட்ட வீரர் விராட் கோக்லி எனத் தெரிவித்தார் ஆஸ்திரேலியாவின் முன்னாள் வேகப் பந்து வீச்சாளரான பிரட் லீ.

நிகழ்கால கிரிக்கெட் உலகின் சிறந்த வீரர் யார் என்பதில் ஒவ்வொருவரும் வேறுபட்ட தெரிவுகளைக் கொண்டுள்ளனர். கோக்லி, சிமித், வில்லியம்சன், ரூட், வில்லியர்ஸ் ஆகியோர்கள் மத்தியில் உள்ள குறித்த போட்டியில் ஆஸ்திரேலியாவின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளரான பிரட் லீ கோக்லியைத் தெரிந்துள்ளார்.

தற்போதைய நிலையில் விராட் கோக்லிதான் முதல் தர கிரிக்கெட் வீரர். அவரது கால் நகர்வுகள் ஆகச்சிறந்த முறையில் மிகமிக நுட்பமாக உள்ளன. அவரது சதங்களும், ரண் வேட்டைகளும் விடாமல் நீடிக்கின்றன. அவர் ஓர் அற்புத வீரர். தற்போதைய தலைமுறையில் அவருக்கு நிகரான வீரராக இன்னொருவர் இல்லை என பிரட் லீ மேலும் தெரிவித்தார். (ம)

# இன்னிங்ஸால் வென்றது நியூசி. வில்லியம்ஸின் போராட்டம் வீண்

நியூசிலாந்து- சிம்பாப்வே அணிகளுக்கு இடையிலான முதல் டெஸ்ட் ஆட்டத்தில் இன்னிங்ஸாலும் 117 ஓட்டங்களாலும் அபார வெற்றிபெற்றது நியூசிலாந்து.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற சிம்பாப்வே முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து 164 ஓட்டங்களில் சுருண்டது. அதிகபட்சமாக திரிபானோ 49 ஓட்டங்களையும், மஸ்வரி 42 ஓட்டங்களையும், ரசா 22 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் நியூசிலாந்தின் சார்பாக வாக்நெர் 6 இலக்குகளையும், சவுத்தி, சான்நெர் இருவரும் தலா 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு தனது முதல் இன்னிங்ஸை ஆரம்பித்த நியூசிலாந்து 576-6 என்ற நிலையிலிருந்த போது ஆட்டத்தை இடைநிறுத்துவதாக அறிவித்தது. அதிகபட்சமாக றெய்லர் ஆட்டமிழக்காமல் 173 ஓட்டங்களையும், வற்லிங் 107 ஓட்டங்களையும், லாதம் 105 ஓட்டங்களையும் பெற்றனர்.

இன்னிங்ஸ் தோல்வியைத் தவிர்க்க வேண்டுமாயின் 412 ஓட்டங்களைப் பெறவேண்டும் என்ற கட்டாய நிலையில் களமிறங்கிய சிம்பாப்வே மூன்றாம் நாள் முடிவில் 121-5 என்றிருந்தது. எர்வின் 49 ஓட்டங்களுடனும், கிரீமர் 14 ஓட்டங்களுடனும் நான்காம் நாளுக்காகக் களமிறங்கினர். 50 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் எர்வின். இடத்தை நிரப்பிய வில்லியம்ஸ் ஆரம்பம் முதல் அடித்தாடவே செய்தார். கீரிமர் ஓர் முனையில் தாக்குப்பிடிக்க வில்லியம்ஸின் அரைச்சதம் பதிவானது. 33 ஓட்டங்களுடன் கிரீமரை வீழ்த்தினார் சொட்கி. சிப்கபா, திரிபானோ அதிகம் செயற்படவில்லையாயினும் ஏராளமான பந்துகளை எதிர்கொண்டனர். இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி வில்லியம்ஸின் சதம் அரங்கேறியது. 119 ஓட்டங்களுடன் வில்லியம்ஸ் ஆட்டமிழந்ததுதான் தாமதம் 295 ஓட்டங்களில் சுருண்டது சிம்பாப்வே. இன்னிங்ஸாலும் 117 ஓட்டங்களாலும் வென்றது நியூசிலாந்து. (ம)

English Classes
GR-1 -O/L
077 331 4608

V2 TRAVELS
சர்வதேச விரைவு பொதிகள் சேவை
விசேட விலை குறைப்பு
UK - 550/Kg
DELIVERY IN 3 - 5 DAYS
தொடர்புகளுக்கு: 0768226243
• யாழ்ப்பாணம் • நெல்லியடி
• வல்வெட்டித்துறை • கிளிநொச்சி

## ஒதுக்கப்பட்டார் மக்ஸ்வெல்

இலங்கை- ஆஸி. அணிகளுக்கு இடையிலான ஒருநாள் தொடருக்காக ஆஸி. அணியிலிருந்து மக்ஸ்வெல் நீக்கப்பட்டார். அந்நிய மண்ணில் ஆஸியின் வெற்றியில் மக்ஸ்வெலின் பங்களிப்பு அளப்பெரியதாக இருந்தது.

அண்மைக்காலமாகத் திறனின்றித் தவித்து வரும் மக்ஸ்வெல்லை இலங்கைத் தொடரில் ஆஸி. அணி கழட்டிவிட்டுள்ளது.

ஆஸ்திரேலிய ஒருநாள் அணியின் விவரம் :- சிமித் (தலைவர்), வோர்ணர், பெய்லி, கட்டர் நைல், பல்க்நெர், பின்ஞ், கசில்வூட், ஹென்றிக்ஸ், கவாயா, மிச்செல் மார்ஸ், சோன் மார்ஸ், லையன், ஸ்ராக், வேட், சாம்பா. (ம)



# ரியோவில் பதக்கம்; பென்சிச் நம்பிக்கை

ரியோ ஒலிம்பிக் தொடரில் பதக்கம் ஒன்றை வெல்லமுடியும் என்ற நம்பிக்கை வெளியிட்டார் இளம் றென்னிஸ் வீராங்கனையான பென்சிச்.

பிரேஸிலின் ரியோ டி ஜெனிரோ நகரில் அடுத்த மாதம் 5ஆம் திகதி ஒலிம்பிக் தொடர் ஆரம்பமாகிறது. றென்னிஸ் தொடரில் பெண்கள் ஒற்றையர் பிரிவில் பென்சிச் களமிறங்க தகுதி பெற்றுள்ளார். இந்த நிலையிலேயே அவர் பதக்கம் குறித்த நம்பிக்கையை வெளிப்படுத்தினார்.

ஒலிம்பிக்கில் பதக்கம் வெல்வது எனது கனவு. எனது முதல் ஒலிம்பிக் தொடர் இது. எனவே ஒரு அதிமுக்கியத்துவம் வாய்ந்த வெற்றி கிடைக்கும் என்று எண்ணுகிறேன். பதக்கத்தை நோக்கிய பயணத்துக்கு பல தடைகளைத் தாண்ட வேண்டியிருக்கும் என்பதையும் நான் நன்கு அறிவேன். அதிலும் குறிப்பாக செரீனா வில்லியம்ஸ், முகுருசா, வோஸ்னியாக்கி, இவானோவிச் போன்ற வீராங்கனைகள் எனக்கு பெரும் சவால் தருவார்கள். இந்த சவால்களையும், தடைகளையும் தாண்டி ஓர் பதக்கத்தை கையிலேந்த முடியும் என்ற நம்பிக்கை மிகையாகவே உண்டு என பென்சிச் மேலும் தெரிவித்தார். (ம)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 1.08.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.